
dantamil.blogspot.com

இதழ்:5 டிசம்பர் 2009

# டான்

Dansk/Tamilsk social-kultur og litteraturblad



எஸ்.தோதாத்ரி கலையரசன் வி.டி.இளங்கோவன்
எஸ்.சந்திரபோஸ் சி.சிவசேகரம் சி.கா.செந்திவேல்
அரவிந்தன்-சரவணன் கரவைதாசன் ஆதவன் தீட்சண்யா




கொலை சுமந்த இருளின்
சாட்சியங்களாய் கீறிக்கொண்டு நகரும்
பானுவின் கவிதைகள்
ஈழத்து, புலம்பெயர்ந்த
பொதுவான இனவுணர்விலிருந்தும்
நாம் கண்டறிந்த பாடு பொருள்களிலிருந்தும் விலகி
ஒடுக்கப்பட்ட ஓர்மையிலான
புலம்பலற்ற பெண்ணின் பயணத்தை
பிரதியாக்கமாய்த் தருகிறது.
காட்சிப் படிமங்களிலும்
கதையாடல் தன்மையிலும்
சுயத்தின் சாயலை இழக்காமலும்
அதேவேளை தீவு- ஈழம்- புலம்பெயர்வு- உலகம் என
அவரது அகதி வாழ்வைப் போன்றே
கவிதைகளின் பயணமும் இருக்கின்றன.
பானுவின் கவிதைகளைப் போன்றே
காலஅவசியத்தின் தேவை கருதி
இத்தொகுப்பில் அவர் இணைத்துள்ள
இலங்கையில் அமைதிப்படை இருந்த காலத்தையொட்டி
அவர் எழுதிய கடிதங்களும்
மிக முக்கியமானவை.
புற விமர்சனங்களாய் மட்டும் அமையாதவை.

தொடர்புகளுக்கு:
நீலகண்டன்,
கருப்புப் பிரதிகள்
கைத்தொலைபேசி: 94 44 27 25 00

Dansk/Tamilsk social-kultur og litteraturblad

e-mail: karavaithasan@yahoo.dk visit: www.dantamil.blogspot.com

தொடர்புகட்கு:
Dantamil,
Dalgaardsvej 271,
6600 Vejen,
Denmark.

Redaktion:
T.Sathyadas
Redigering:
M.S.Kandasamy
முன்னட்டை ஓவியம்:
அமிர்தலிங்கம்
Dalit Painting Workshop "Colours from the Margin"

காசோலை அனுப்ப:
Thavarasa Sathyadas,
DanskeBank,
6600 Vejen, Denmark,
A/C 3737090698

அன்பளிப்பு பிரதி: 25 டெனிஸ் குரோனர் (இலங்கை, இந்தியா இலசவம்)



# இன்றைக்கு வேண்டியது...

அன்பும் தோழமையும் கொண்ட நண்பர்களே,

மீண்டும் சந்தித்துக்கொள்கிறோம். சென்ற இதழின் அதிக பக்கங்கள் டெனிஸ் மொழியில் அமைந்திருந்ததை பலரும் குறிப்பிட்டிருந்தீர்கள். கவனத்தில் கொள்கிறோம். இந்த இதழ் டானியல் பற்றிய எழுத்துக்களுடன், இலங்கையின், குறிப்பாக அதன் வடகோடியில் தொடங்கி வெற்றிகண்ட தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்க ஒக்டோபர் 21 எழுச்சியின் சிறப்பிதழாக விரிகிறது. முழுத் தமிழர்களிடத்தில், ஒரு தொழிலாளி வர்க்கத்திற்குரிய இலட்சணங்களைக் கொண்டவர்களாக ஒடுக்கப்பட்ட மக்களே இருக்கிறார்கள். ஆனால் புத்திஜீவி மட்டத்திலுள்ள தொழிலாளி வர்க்க சிந்தனையால் ஆகர்சிக்கப்பட்ட உயர்சாதி என்று சொல்லப் படுகின்ற சாதியில் பிறந்தவர்களையும் ஏனைய முற்போக்குச் சக்திகளையும் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் இணைய வைத்துச் சென்றதினாலேயே ஒக்டோபர் 21ன் எழுச்சி வெற்றியைக் கண்டது. அதன் அமைப்பாளர் கே.டானியல் அவர்களின் தீவிர எழுச்சிமிக்கப் போக்கும்,அதன் தலைவர் எஸ்.ரீ.என்.நாகரத்தினம் அவர்களின் சாதுரியமானப் போக்கும் அவர்கள் வகுத்துச் சென்ற தீர்க்கமான முடிவுகளும்கூட வெற்றிக்கு சாதகமாக அமைந்தன. இலங்கையில் ஆயுதமேந்திப் போராடி வெற்றி கண்ட ஒரேயொரு போராட்டம் வடஇலங்கையில் நடாத்தப்பட்ட தீண்டாமைக்கெதிரான போராட்டம்தான். என மறந்தும் மறுக்கும் நிலையில் தேவை ஒரு நீண்ட உரையாடல். சகலபிரிவினரையும் உள்ளடக்கிய ஒரு நீண்ட உரையாடல். இதை சாத்தியமாக்கும் வழிமுறைகளை சுயவிமர்சன வழியில் கண்டறியும் வாய்ப்பினை நாம் கொள்ளல் வேண்டும்.

மானிடவாழ்விற்கு ஏற்புடையவற்றையெல்லாம் தொலைத்துவிட்டு ஏற்பில்லா குறுந்தமிழ்தேசியவாதக் கருத்தியலுக்குள் கரைந்து போயிருக்கும் தமிழ்ச்சமூகத்தினின்று எமது இரண்டாவது தலை முறையாவது ஏற்புடையவற்றைக் கற்று விலகி ஒரு ஆரோக்கி யமான சமூகமாக உருப்பெற வேண்டுமென்பதே எமது அவா. நாம் டெனிஸ் சமூகத்துடனான இணைவாக்கத்தின் உண்மைத்தன் மையை புரிந்து கொள்ளவேண்டும். புதியன கற்று பழையன கழிய அவை வழிகொள்ளும் எங்கள் வாழ்வும் வளமும் இனி இப்பனிப் புலத்தில்தான் என்ற உண்மையை நாம் நேர்மையுடன் ஒத்துக் கொள்ள வேண்டும். எனில் டென்மார்க்கில் வாழும் எமது அடுத்தத் தலைமுறையாவது தழைத்தோங்க எமது சமூகம், பொய், களவு , பித்தலாட்டம், புழுகு, மண்டையை கழுவி மற்றவன் பையில் கை வைப்பதை நிறுத்தும் வகை செய்தல் வேண்டும். ஆகுமா?.... இனி தொடரும்.

\- ஆசிரியர்

# E g o n   F r æ h r   ( V )

Hvis du skal fortælle om dig selv som person, uden om din politiske interesse, hvem er du så og hvilke interesser har du?

*Jeg er familefar, driver et deltidslandbrug med får og heste, interesserer mig for historie, litteratur og musik. Jeg følger gerne sportsbegivenheder, som håndbold i fjernsynet, når der er tid. Jeg er formand for Ladelund Efterskole.*

**Egon Fræhr (V)**
**Borgmester i Vejen kommune.**
**Født den 29.marts 1951.**
**Uddannet agronom.**

**Gift med Lene. Har tre børn: Christian der er ingeniør, Lise der læser medicin i Århus og Niels, der er elev på Vejen Gymnasium.**

**Politisk karriere**
**1998-2001: Medlem af Brørup Byråd.**
**2002-2006: Borgmester i Brørup kommune.**
**2006-2007: formand for sammenlægningsudvalget i Vejen storkommune.**
**2007: Borgmester i Vejen kommune.**

Hvorfor er du blevet politiker og hvorfra stammer din interesse for politik?

*Det er tilfældigt, at jeg blev opstillet til byrådet, men jeg har altid været med i foreningsarbejde og været politisk interesseret. Den politiske interesse stammer vel fra en interesse for hvad det sker i vores samfund og en bevidsthed om, at man bør påtage sig opgaver i foreningslivet (skole, sport og lignende) for at et demokratisk samfund kan fungere og udvikle sig.*

Hvordan føles det at være borgmester? Hvad gør det specielt at være borgmester netop i Vejen?

*At være borgmester er ikke en følelse men en opgave, som en række borgere via stemmesedlen har anmodet mig om at varetage i en periode, og det søger jeg at gøre, så godt jeg kan.*



*Vejen er en god kommune at være borgmester i, fordi det er en kommune der har vækst og udvikling. Det betyder der kan tages en række fremadrettede tiltag. Det er en god tone og et godt samarbejde i byrådet, og der er mange engagerede borgere, som det er let at komme i dialog med. Mange gode medarbejdere gør arbejdet lettere.*

Hvilke krav og forhindringer har du haft og skulle igennem i løbet af din



politiske karriere?

*Første valg, hvor jeg blev medlem af Brørup byråd, var en tilfældighed., for da var alt nyt. Men ved de næste valg har jeg tydeliggjort, hvad jeg villet arbejde med, og søge gennemført. Det har stået i et valgprogram.*

Har du et politisk idol, og hvis ja, hvem er det?

*Jeg har intet idol, men jeg lytter gerne til dygtige politikere, ledere og fagfolk.*

**Hvad gør Vejen kommune attraktiv i forhold til andre og hvordan vil du lokke udefra kommende borgere til kommunen?**

*Nærhed, natur og let at komme til og fra. Vejen kommune ligger lige "midt i verden". Det har mange fundet ud af og derfor har vi vækst i både antal tilflyttere og i virksomheder.*

**Hvor ofte drøfter I politiske vurderinger/tiltag i forhold til udlændinge/indvandrer politik Vejen kommune?**

*Vi betragter indvandrere/udlændinge som en væsentlig del af kommunens borgere og ikke som en særlig del. Det kan godt være, der skal etableres en særlig indsats en tid for bestemte grupper, men det skal der jo for så mange, så indvandrere er en naturlig del af befolkningen i Vejen kommune.*

**Hvilken holdning/oplevelser har du haft med tamiler som bor i Vejen kommune? Mener du, at de er integreret nok?**

*Jeg ved ikke andet end at integrationen har været god, og ellers hører jeg gerne om det. Jeg har mødt flere tamiler i forskellige sammenhænge og også deltaget i et arrangement. Det har været en positiv oplevelse hver gang.*

**Hvad betyder integration for dig?**

*At finde sig godt tilrette der hvor man bor og arbejder, så man selv og ens familie trives. Det allervigtigste er, at man behersker sproget, og at man selv involverer sig i de aktiviteter, der er i vores kommune, lige fra skoler og til foreningslivet.*

**Jeg har forinden dette interview afleveret et eksemplar af "Ini" læse blad. Hvad synes du om bladet?**

*Det ser positivt ud*

**Hvad er dine fremtidsudsigter i Vejen kommune?**

*Gode, jeg tror der kommer en øget tilflytning. Vi er i fuld gang med at udvikle kommunen, så Vejen kommune vil blive en endnu bedre kommune at bo i og at drive virksomhed i.*

* **





## இலட்சிய நவீனப் பெண்ணியவாதி

# மார்லின் பிரெஞ்

நவீன இலட்சிய பெண்ணியவாதி மார்லின் பிரெஞ் அவர்கள் தனது 79வது வயதில் மாரடைப்பால் மான்காட்டன் நகரிலிருந்த தனது இல்லத்தில் இறப்பெய்தினார். எல்லா ஆண்களுமே தமது கண் களாலும் அவர்களால் எழுதி வைக்கப்பட்ட சட்டத்தினாலும் அதனால் கொண்ட அதிகாரத்து வத்தினாலும் வன்புணர்ச்சி யாளர்களே *(The War against Women 1992)* எனப் பிரகடனப் படுத்திய இவரது வைரம் பாய்ந்த இதயம் தனது துடிப்பினை நிறுத்திக்கொண்டது.

தொடர்ச்சியான புகைப்பிடிக்கும் பழக்கத்தினைக் கொண்ட இவர் தனது 61வது வயதிலிருந்து புற்று நோயால் பாதிக்கப்பட்டு உபாதை களுக்கு உள்ளாகியிருந்தபோதும் உலகமயமாகிப்போயிருக்கும் ஆணாதிக்க கலாச்சாரத்திற்கெதிராக 79வது வயதிலும் சித்த சுவாதீன மான நிலையில் தொடர்ந்து எழுதியும் இயங்கியும் வந்தார். உலகின் சிறந்த மார்க்சிய பெண் ணியவாதியான ரோசா லக்சம்பேர்க் அவர்களை ஈந்த போலந்து தேசத் தினைச் சேரந்தவர்கள் இவரின் தாயும் தந்தையுமாவர். இடம் பெயர்ந்து அமெரிக்காவில் வாழ்ந்த வேளை நியுயோர்க் நகரில் 1929ம் ஆண்டு நவம்பர் 12ந் திகதி மார்லின் பிரெஞ் பிறந்தார். *Hofstra College i Long Island 1951*ல் இள நிலைப் பட்டப் படிப்பினை பெற்ற இவர் தொடர்ந்து முதுநிலைப் பட்டப்படிப்பினை முடித்துக் கொண்டு ஹார்வர்டு பல்கலைக் கல்லூரியில் 1972ல் தனது கலாநிதி பட்டத்தினை கொண்டார். இடையே வழக்கறிஞரான எம்.றோபேட் அவர்களை காதல் மணம்புரிந்து இரண்டு பிள்ளை களைப் பெற்றெடுத்தார். காதல் திருமண வாழ்வு கசந்து போகவே அவரை விவாகரத்துச் செய்து கொண்டார். சுய ஆற்றலுள்ள பெண்களுக்கு இன்பமான காதல்

*மணவாழ்க்கை அமைவதில்லை என (I Her Mother's Daughter 1987) குறித்து வைத்துள்ள இவர் ஆண்களுக்கு மட்டும் சுயஆற்றலும் காதலும் சாத்தியப்படுவதாக இவ்வுலக நியதிகள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார். 1957ல் இருந்து எழுதத் தொடங்கியிருந்தபோதும் இவரது கலாநிதிப் பட்டப் படிப்பின் பின் இவரால் எழுதப்பட்ட The Women's Room 1977 என்ற நாவல் உலகப்பிரசித்தி பெற்றது. 20மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட இந்நாவல் 11 மில்லியன் பிரதிகள் விற்பனை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. 1950களில் அமெரிக்காவின் மீரா என்கிற இளவயதுப் பெண்ணுக்கும் மருத்துவரான நோமுக்கும் ஏற்பட்ட காதல் வாழ்க்கையை விவரிக்கிறது இந்நாவல். மீரர தனது படிப்பினை இடை நிறுத்தி இல்லக் கிழத்தியாகி மருத்துவருக்கும் தனக்கும் ஏற்பட்ட காதலின் பேறாக இரண்டு மகன்களைப் பெற்று அறுபதுகளின் வீட்டுப்பெண்ணாக வாழ்ந்து வரும் நாளில் மருத்துவருக்கு மாடலிங் செய்யும் ஒரு பெண்ணின் மீது தாபம் ஏற்படவே அவரை விவாகரத்துச் செய்து கொண்டு இரண்டு மகன்களையும் அவரிடமே விட்டு விட்டு தனது பட்டப்படிப்பினை தொடரும் மீரா தொடர்ந்து பெண்ணிய அமைப்பொன்றில் உறுப்பினராக சேரந்து கொண்டு தன்னை மேம்படுத்திக் கொள்ளும் போக்குடையதாக இந்நாவல் அமைந்திருந்தது. இந்நாவல் இவரின் வாழ்க்கைக்கூறுகளை முழுஅளவு இல்லாதுவிடினும் பலவகைகளில் பலகூறுகள் ஒத்துப்போவதாக சில விமர்சகர்கள் கருத்துச் சொல்கிறார்கள். சிறந்த கல்வியாளரும் பெண்ணிய வாதியுமான மார்லின் பிரெஞ் அவர்கள் புனைவுகளுக்கு அப்பால் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவை உலகமயமாகிப்போயிருக்கும் ஆணாதிக்க கலாச்சாரத்திற்கெதிராக பெண்ணிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி நிற்கின்றன.*

**இவரின் டெனிஸ் மொழியாக்கம் பெற்ற படைப்புகள்:**

*Marilyn Frenchs forfatterskab*
*I dansk oversættelse:*

- *'Kvinder'. Roman 1978*
- *'Det blødende hjerte'. Roman 1980*
- *'Om kvinder, mænd og moral'. Essays 1985*
- *'Sin mors datter'. Roman 1987*
- *'Krigen mod kvinder'. Afhandling 1992*
- *'Fader vor'. Roman 1994*
- *'Min sommer med George'. Roman 1996*
- *'En tid i helvede'. Essay 1998 Ikke oversatte bøger:*
- *'From Eve to Dawn'. Historie 2002*
- *'In the name of Friendship'. Roman 2006*

***



# எரிக் ப்ராம்

**- எஸ்.தோதாத்ரி**

**பொ**துஉடைமைத் தத்துவம் தோன்றி வளர்ந்து வரும் பொழுது அதை எதிர்ப்பதற்கென்றே தோன்றியவர்கள் பலர் உண்டு. இவர்களில் ஒருவகையினர் அதை பகிரங்கமாகவே எதிர்க்கிறார்கள். இவர்கள் பூர்சுவா முகாமின் பிற்போக்கான சிந்தனையாளர்கள். இவர்களது படைப்புகளில் உழைக்கும் மக்களது மார்க்சிசம் கேலிக்குள்ளாக்கப்படுகின்றது; அல்லது பலத்த கண்டனத்துள்ளாக்கப்படுகிறது. ஆனால் அதே சமயத்தில் பூர்சுவா முகாமில் பலர் முற்போக்கான சிந்தனை உள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் உழைக்கும் மக்களது நிலை பற்றிச் சிந்திக்கவும் செய்கிறார்கள். உழைக்கும் மக்களின் தத்துவமான மார்க்சிசம் பற்றிப் பேசுகிறார்கள். இவர்கள் பூர்சுவா எல்லைகளுக்குள் இருந்துகொண்டே மார்க்சிசம் பற்றிப் பேசும்பொழுது மார்க்சிசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். இம்முயற்சியில் அவர்கள் மார்க்சிசத்தை எதிர்க்கிறார்கள். இப்படி முயற்சித்தவர்களில் ஒருவர்தான் எரிக் பிராம் என்ற அறிஞர். இவரது முயற்சியானது மார்க்சிசத்தின் உயிர்நாடியான அம்சங்களை சிதைப்பதில் வந்து முடிகிறது.

எரிக் பிராமின் கருத்துக்களை ஆராய்ந்தால் இது தெளிவாகத் தெரியும். எரிக் பிராம் ஜெர்மனியர். பிராய்டிசத்தில் அதிக ஆர்வம் உள்ளவர். அவருடைய நேரத்தில் பெரும் பகுதியை சமூக உளவியல்துறை ஆய்வில் கழித்தார். இதன்பின்னர் அமெரிக்காவின் பிராங்பர்ட் ஆய்வுக்குழுவுடன் தன்னை இணைத்துக் கொண்டார்.

எரிக் பிராம் உளவியல் துறையில் மிகப்பெரும் சிந்தனையாளராக விளங்கினார். அவர் பிராய்டிசத்தை ஆராய்ந்து அதன் குறைகளை நிவர்த்திக்க முயற்சித்தார். பிராய்ட் அவருடைய உளவியலில் தனிநபரை மையப்படுத்திய அறிஞர். மனித நடவடிக்கைகளை, மனிதனுக்கும் சமூகத்திற்குமுள்ள உறவைத் தீர்மானிக்கும் சக்தியாக அவர் நனவிலி மனதில் உருவமற்று அமுங்கிக் கிடக்கும் இட் அல்லது பாலுணர்வை முன்வைத்தார்.

மனிதனின் நடவடிக்கைகளுக்கு அவர் இந்த இட் அல்லது லிபிடினல் சக்தியை ஆதாரமாகக் காட்டினார். மனிதனது சமூகஉறவுகளை அவர் தீர்மானிக் கும் சக்தியாக ஏற்றுக்கொள்ள வில்லை. அதற்குப் பதிலாக மனித கலாச்சாரத்தின் அடிப்படையே இந்த நனவிலி மனதில் உருவமற்றுக் கிடக் கும் பாலுறவு உணர்வுதான் என்று பிராய்ட் கூறினார். பல்வேறு சமூக இயக்கங்கள், கலாச்சார இயக்கங்கள் ஆகியவற்றிற்கு இந்த இட்டைத்தான் ஆதாரசக்தியாக காட்டினார். படைப் பாளி ஒரு நரம்பு நோயாளி என்றே அவர் கருதினார். பிராய்டின் கருத்து இன்றும் கூட கலை இலக்கிய உலகில் ஒரு ஆழமான பாதிப்பை ஏற்படுத்தி யுள்ளதைக் காண முடிகிறது.



அதேசமயம் பிராய்டின் கருத்துக்களை ஆழமாகப் பயின்றவர்கள் அதிலுள்ள குறைகளையும் கண்டனர். அக்குறை களை அவர்கள் களைய முற்பட்டனர். இவர்கள் புதிய பிராய்டிசவாதிகள் என்றழைக்கப்பட்டனர். இவர்களது முயற்சி பிராய்டு புறக்கணித்த சமூக சிந்தனையை பிராய்டிசத்துடன் ஒன்று கலப்பதாக இருக்கின்றது. இவர்களில் முக்கியமானவர் எரிக் பிராம் ஆவார்.

எரிக் பிராமின் *Escape from freedom* என்ற புத்தகத்தில் அவருடைய கருத்து கள் மிகத் தெளிவாகக் காணப்படுகின் றன. பிராமின் கருத்துப்படி பிராய்ட் சமூகம் பற்றி மிகவும் கொச்சையான கருத்து உள்ளவராகவே இருந்தார். சமூகப் பிரச்சினைகள் பற்றி பிராய்ட் உளவியல் ரீதியாக கூறிய யாவும் குழப்பமான முடிவு களையே தந்துள்ளன என்று பிராம் கருதினார்.

பிராய்டின் கருத்தமைப் பில் Repression அல் லது உள்ளடக்குதல் ஒரு முக்கியக் கருத்தாகும். பாலுறவு நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு பிராய்ட் இக்கருத்துப் படிமத்தை உரு வாக்கினார். பாலுறவு நிகழ்ச்சிகளை மனிதன் வெளியே சொல்ல விரும்பு வதில்லை. இரகசியமாகவே வைத்தி ருக்க விரும்புகிறான். அவற்றில் பெரும்பாலானவற்றை நனவு மனதில் இருந்து நனவிலி மனதிற்குள்ளாக அடக்கிவிடுகிறான். இது வேண்டத் தகாத நிகழ்ச்சிகளை உள்ளடக்கும் இடத்திற்குச் சென்று விடுகிறது.



இந்த உள்ளடக்குதல் என்பது தனிநபர் மனதில் நிகழும் நிகழ்ச்சி: இந்த பாலு றவு நிகழ்ச்சிகளின் உள்ளடக்குதலை பிராய்ட் அவரது கருத்தமைப்பிற்கு அடிப்படையாக ஏற்றுக் கொண்டார்.

எரிக் பிராம் இக்கருத்தை மறுக்கிறார். உள்ளடக்கம் என்பது இன்றைய சமூக அமைப்பில் செயலற்றதாகிவிட்டது. என்று அவர் கூறுகிறார். அதற்கு பதி லாக இன்றைய மனிதனை ஆட்டிப் படைப்பது அந்நியமயமாதல். இன் றைய தொழிற்சாலை அமைப்புள்ள சமூகத்தில் தனிமனிதன் தன்னை இனங்காண முடியாதவாறு விலகி நிற் கிறான். இந்த அந்நியமயமாதல் என்ற பிரச்சினை மிக முக்கியமானது என்று பிராம் கருதுகிறார். உளபகுப்பாய்வி யலில் பிராய்ட் இது பற்றிப் பேச வில்லை. ஆனால் இன்றைய சூழ் நிலையில் உளப் பகுப்பாய்வியலில் இந்த அந்நியமயமாதல் பற்றிக் காணு தல் வேண்டும்; அது நனைவிலி மனதில் ஏற்படுத்தும் விளைவுகளைக் காண வேண்டும். மனிதனின் தேவைக்கு ஏற்ப சமூகத்தை மாற்றி அமைக்கும் முயற்சியினால் ஏற்படும் மன விளைவுகளை பிராய்டிசம் ஆராய வேண்டும் என்று பிராம் கூறி னார். பழைய பிராய்டிசத்தில் சமூகம் மனதில் ஏற்படும் விளைவு பற்றிய ஆராய்ச்சி இல்லாமல் இருந்தும் அதை நிவரத்திக்க பிராம் முயன்றார்.

விரும்பத்தகாதவற்றை உள்ளடக்கு தல் என்பது பிராய்டை பொறுத்தமட்டி லும் அகவயமான ஒன்றாகும். அது ஒரு தனிநபர் மனதில் அகத்தே நிகழக்கூடிய நிகழ்ச்சி. அதற்கும் சமூக நிகழ்ச்சிகளுக்கும் தொடர்பு எதுவும் இல்லை. இவ்வாறுதான் பிராய்ட் கருதினார். எரிக் பிராமின் கூற்றுப்படி உள்ளடக்குதல் என்பதை அகவயப் படுத்தப்பட்ட ஒன்று என்று கருதக் கூடாது. சமூக நிகழ்ச்சிகளின் தாக்கம் தான் அது என்று அவர் கருதினார். ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூகம் சில சிந்தனை முறைகளை வகை களை உருவாக்குகிறது. இந்த வகை களுக்குத் தனிநபர் பதிலிறுக்க வேண் டியிருக்கிறது. இவற்றிக்கு முரண்படக் கூடிய உணர்வுகளை எண்ணங்களை தனிநபர் உள்ளடக்குகிறான். இவ்வாறு பிராம் உள்ளடக்குதலுக்கு சமூக அமைப்பிலிருந்து காரணம் தேடினார். நனைவிலி மனதில் இடம் பெறும் உள்ளடக்குதல் என்ற நிகழ்ச்சிக்குச் சமூகக் காரணங்களைக் காண வேண் டும் என்பதை பிராம் எடுத்துக் காட்டி னார். அது வெறும் பாலுறவு சம்பந்த மான விஷயம் அல்ல என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

பிராய்ட் தனிநபரை மையமாகக் கொண்டு நனவிலி மனதை அணுகி னார். மன நிகழ்ச்சிகளைத் தனிநபர் நடவடிக்கைகளின் சாராம்சமாகக் கண்டார். பிராம் அதே நனவிலி மனதை சமூக நிகழ்ச்சிகளிலிருந்து ஆராய முற்பட்டார். பிராய்ட் தனிநபர் நனவிலி மனது பற்றிப் பேசுகிறார். பிராம் சமூக நனவிலி மனது பற்றி

ஆராய்கிறார். இந்தச் சமூக நனவிலி மனது என்பது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் உள்ள சமூக உறவுகளினால் உருவாக்கப்படும் மனிதனின் மனப் பகுதியைக் குறிக்கிறது. இது சமூகத்தன்மை மிகுந்தது. இந்தச் சமூக நனவிலி மனது பொதுப்படையான பன்புகளை உடையது.

**மனிதன் சமூகப் பொருளாதாரக் காரணிகளால் மட்டும் உருவாக்கப்பட்டவன் அல்ல: மனப்பண்புகள் சமூகப் பொருளாதாரக் காரணிகளையும் கட்டுப்படுத்தும். இவற்றை மார்க்ஸ் ஆராயவில்லை என்று பிராம் கூறினார்.**

இந்தச் சமூக நனவிலி மனது மனித சாராம்சத்தைக் குறிக்கிறது.இச்சாராம்சத்தில் மனிதனுடைய மூலாதாரமான மாற்ற முடியாத தேவைகள் அடங்கியுள்ளன. இத்தேவைகளைத் தீர்மானிப்பது மனிதனது இருப்பு எல்லாவற்றையும் கடந்த ( இறந்தகாலம் நிகழ்காலம் வருங்காலம்) ஒரு பொது நிலை ஆகியவற்றிக்கு இடையே உள்ள முரண்பாடு ஆகும். இந்த முரண்பாடு உளவியலில் இருப்பதை பிராம் ஆராய்ந்த பின்பு இதன் காரணமாகத் தான் பெரும் புரட்சிகள் தோன்றுகின்றன என்று கருதினார்.

பிராய்டை இவ்வாறு பூர்த்தி செய்யும் முயற்சியில் இறங்கிய பிராம் ஒரு முழுமையான தத்துவத்தின் உருவாக்க முயற்சியை மேற்கொள்கையில் மார்க்சை ஆழமாகக் கற்றார். பிராமிற்கு மார்க்ஸ்மீது ஒரு பெரிய மரியாதை ஏற்படுகிறது. அதேசமயத்தில் மார்க்சிசம் குறைபாடு உடையது என்று கருதுகிறார். மார்க்சிசம் நடைமுறைப்படுத்தப்பட்ட முறைகளை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சோவியத் முறையுடன் அவர் முரண்படுகிறார். சோஷலிசக் கோட்பாடுகளிலிருந்து முற்றிலும் முரண்படும் ஒன்று என்று சோவியத் மார்க்சிசத்தை அவர் விமரிசனம் செய்கிறார். மார்க்சிசத்தைச் சிதைத்தற்கு லெனினையும் ஸ்டாலினையும் குற்றம் சாட்டுகிறார். தமது கடைசிக்காலத்தில் மார்க்சும் எங்கல்சும் குழம்பிவிட்டனர் என்று கூறுகிறார். பிராமின் கருத்துப்படி மார்க்சிசத்தில் ஒரு பெரிய குறைபாடு உள்ளது. மார்க்ஸ் காலத்தில் பொருள் முதல்வாத அடிப்படையிலான உளவியல் என்பது வளர்ச்சி பெறவில்லை மனப்பண்புகளைப் பற்றிய இன்று கிடைக்கும் விவரங்கள் அன்று அதிகமாக இல்லை: எனவே மார்க்சின் தத்துவம் உளவியலை முற்றிலுமாக புறக்கணித்த ஒன்றாகும். மார்க்ஸ்



மனித உணர்ச்சிகளின் சிக்கலான வலுவான தன்மைகளை குறைத்தே மதிப்பிட்டார் என்று பிராம் கூறுகிறார். மனிதன் சமூகப் பொருளாதாரக் காரணிகளால் மட்டும் உருவாக்கப்பட்டவன் அல்ல: மனப்பண்புகள் சமூகப் பொருளாதாரக் காரணிகளையும் கட்டுப்படுத்தும். இவற்றை மார்க்ஸ் ஆராயவில்லை என்று பிராம் கூறினார்.

இக்குறையை எவ்வாறு நிவரத்திப்பது என்ற ஆராய்ச்சியில் பிராம் இறங்கினார். அதன் விளைவாக அவர் ஒரு முடிவிற்கு வந்தார். மார்க்சையும் பிராய்டையும் ஒன்று கலப்பது என்பது அந்த முடிவாகும். மார்க்சிசத்தில் உளவியல் அம்சங்கள் இல்லை. மார்க்சிசம் வெறும் பொருளாதார மனிதனை மட்டும்தான் உருவாக்குகிறது அவனது மனப்பண்புகளைப் பற்றிய ஆராய்ச்சி அதில் இல்லை. அதே சமயம் பிராய்டிசத்தில் சமூகக் காரணிகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இவ்விரு அம்சங்களையும் ஒன்று கலப்பதன் மூலம் இவற்றின் குறைகளைக் களையலாம் என பிராம் கருதினார்.மார்க்சிசத்தின் சமூகவியல் பார்வையுடன் பிராய்டிசத்தின் உளப் பகுப்பாய்வு முறையை ஒன்று கலந்த ஒரு அமைப்பை உருவாக்கினார்.

மார்க்சிசத்தின் மையமான பகுதி சமூக நிகழ்ச்சிகளை எது தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது என்பதாகும். மார்க்ஸ் எங்கல்ஸ் ஆகியோர் உற்பத்திச் சக்திகள் உற்பத்தி உறவுகள் ஆகியவை தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகின்றன என்று கூறினர். பிராம் இவ்விரண்டினையும் இணைக்கும் பணியினை மேற்கொள்ளும் பொழுது சமூகப்பண்பு என்ற கோட்பாட்டினை உருவாக்கினார். மனித நடத்தை பற்றி பிராய்ட் உருவாக்கிய கூறுகளின் அபிவிருத்தி என்று இந்தக் கோட்பாட்டைப் பிராம் கூறுகிறார்.

**சமூக அமைப்பிற்கும் பொருத்தமாக மாறும் நடத்தையைத்தான் பிராம் சமூக நடத்தை என்கிறார்.**

பிராய்ட் காணும் மனிதன் பாலுறவு நாட்டத்தை ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தினை நோக்கி திருப்புகின்றன. இந்தக் கண்ணோட்டத்தில் ஒரு மனிதனுக்கும் மற்றொரு ' மனிதனுக்கும் உள்ள உறவு இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு ஆகியவற்றை விளக்கப் போதுமான ஆதாரங்கள் இல்லை. எனவேதான் மார்க்சிசத்தில் காணப்படும் சமூகச் சிந்தனையை இத்துடன் இணைத்து சமூக நடத்தை என்ற கோட்பாட்டினை பிராம் உருவாக்கினார்.

ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பின் பண்புகளை ஒரு மனிதன் தன்வயப்படுத்துவதில் பல சிரமங்கள் உள்ளன. சமூக அமைப்பிற்கும் பொருத்தமாகத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய

சூழ்நிலை ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படுகிறது. இவ்வாறு சமூக அமைப்பிற்கும் பொருத்தமாக மாறும் நடத்தையைத் தான் பிராம் சமூக நடத்தை என்கிறார். சோசலிச மனித நேயம் என்ற புத்தகத்தில் அவர் கூறுகிறார். அவன் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய விரும்புகிறான். சமூகம் உருவாக்கும் நிபந்தனைகளில் அவன் திருப்தி காண்கிறான். இதன் காரணமாக மனிதனுக்கும் சமூகத்திற்கும் ஒரு இசைவு தோன்றுகிறது. இந்தச் சமூக நடத்தை என்ற கோட்பாட்டை மார்க்சிசத்துடன் இணைக்கிறார். இது மார்க்சிசத்தை அபிவிருத்தி செய்வதாகுமென பிராம் கருதுகிறார்.

**சமூக அமைப்பு சமூக நடத்தையை உருவாக்குகிறது. சமூக நடத்தை அதற்குச் சமமான சிந்தனை உலகத்தை தோற்றுவிக்கிறது.**

மார்க்சிசத்தில் அடிப்படை மேற்கோப்பு என்ற கருத்துப்படிமம் பின்பற்றப்படுகிறது. சமூகம் (உற்பத்திக் கருவிகள் உறவுகள்) அடிப்படை; அதற்கு சமமான சிந்தனை உலகம் மேற்கோப்பு எனப்படுகிறது. மார்க்சின் கருத்துப்படி அடிப்படையின் பிரதிபலிப்பு மேற்கோப்பு என்பதாகும். மேலும் அடிப்படைதான் மேற்கோப்பைத் தீர்மானிக்கிறது என்று மார்க்சிசம் கூறுகிறது.

பிராம் இந்த விளக்கத்தில் மார்க்ஸ் தவறு செய்துவிட்டார் என்று கருதுகிறார். மனதும் அதன் செயலுக்கும் இவ்விளக்கத்தில் இடமில்லை ஆதலால் பிராம் சமூக நடத்தை என்ற ஒரு புதிய கருத்தை அடிப்படை மேற்கோப்பு ஆகியவற்றிற்கு ஊடாக நுழைக்கிறார்.

சமூக அமைப்பு சமூக நடத்தையை உருவாக்குகிறது. சமூக நடத்தை அதற்குச் சமமான சிந்தனை உலகத்தை தோற்றுவிக்கிறது என்று புதிய விளக்கத்தை பிராம் கொடுத்தார். சமூக நடத்தை (சமூக மனது) என்ற இந்த விளக்கம் இல்லாததன் காரணமாக மாக்சிசம் குறைபாடு உடையது என்பது பிராமின் கருத்து.

உளவியல் காரணிகள் மட்டுமே பிராய்டிசத்தில் தீர்மானிக்கும் சக்தியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பொருளாதாரக் காரணிகள் மட்டுமே மார்க்சிசத்தில் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. இந்த இரண்டும் ஒன்று கலந்த ஒன்று தான் பிராமின் சமூக நடத்தைக் கோட்பாடு. இதை விளங்கிக் கொள்ள ஒரு உதாரணம் கூறலாம்.

பாசிசம் என்பது ஜெர்மானிய கீழ்மட்ட மத்திய வர்க்கத்தினரின் கோட்பாடு. முதல் உலகப்போருக்குப் பின்னர் வளர்ந்த பணவீக்கம் ஏக போகங்களின் வளர்ச்சி ஆகியவற்றிக்கு மத்திய தர வரக்கத்தினர் பதில் செயல் புரிந்ததன் விளைவே பாசிசம். இந்தப் பணவீக்கம் ஏகபோகங்களின் வளர்ச்சி



ஆகியவை இவ்வர்க்கத்தின் மன உணர்வுகளுடன் கலந்து பல மாறுதல்களை அடைந்து பாசிசமாக வெளிப்படுகிறது. இந்த மன உணர்வுகளில் பல ஒன்றுக்கொன்று முட்டி மோதி ஒரு சமநிலை அடையும்பொழுது அது பாசிசமாக அல்லது நாஜிக் கருத்துகளாக வெளியாகிறது.

இவ்வாறு பிராம் உலக நிகழ்ச்சிகளை விளக்க முற்பட்டார். பிராம் மார்க்சிசத்தில் மாறுதல் செய்ய விழையும் பொழுது இந்த முறையில் அடிப்படை மேற்கோப்பு ஆகியவற்றிக்கு இடையே சமூக நடத்தை என்ற கருத்தை நுழைத்தார். அவர் கருத்துப்படி அடிப்படை சமூக நடத்தையைப் பாதிக்கிறது. அதாவது சமூக நனவிலி மனதினைத் தாக்குகிறது. இந்தச் சமூக நடத்தை மேற்கோப்பினை உருவாக்குகிறது.

பிராம் புதிய இடதுசாரிகளுள் ஒருவர். புதிய இடதுசாரிகள் மார்க்சிசத்தின் குறைகளைக் களையும் துப்பரவுப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள். இவர்களது நோக்கமெல்லாம் புதிய வளர்ச்சி பெற்றுள்ள பூர்சுவா சமூகத்தில் முரண்பாடுகள் இல்லை என்று கூறுவது தான். இதன் விளைவுதான் பிராமின் படைப்புகள்.

பிராமின் கருத்துக்கள் மாக்சியம் பற்றிப் பேசும்பொழுது புரட்சிகரமாகத் தோன்றினாலும் அதில் ஒரு தத்துவார்த்தப் பிழை இடம்பெறுகிறது. அவரது கருத்தின்படி புரட்சி தேவையில்லை என்ற ஒரு முடிவு ஏற்படுகிறது.இன்றுள்ள தொழில் வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் மனிதர்கள் அந்நியமயமாகி உள்ளார்கள் இவர்கள் வாழ்க்கையில் உள்ள வசதிகள் தாம் இதற்கு காரணம். இந்த அந்நியமயமாதல் உலகம் முழுவதற்குமான

**மார்க்ஸ் அடிப்படையில் இயங்கியல் பொருள்முதல்வாதி. பிராய்ட் அடிப் படையில் கருத்து முதல்வாதி இந்த இருவரது சிந்தனை அமைப்பின் சில அம்சங்களை ஒன்று கலப்பது என்பது மறுபடியும் கருத்து முதல்வாதத்திலே தான் முடிவடையும்.**

ஒரு நிகழ்ச்சி; இந்தச் சமூக விளைவை அகற்றுவதற்குச் சில சீர்திருத்தங்கள் சில மாறுதல்கள் ஆகியவற்றைச் செய்து கொண்டாலே போதும் அடிப்படையில் ஏற்படும் மாறுதல்கள் சமூக நடத்தையை தாக்கும் பொழுது சமூக நடத்தையைச் சரி செய்து கொண்டால் அவற்றைச் சமாளிக்கலாம் என்பது பிராமின் முடிவு ஆகும். இது மார்க்சிசத்திற்கு முரண்பாடான ஒன்றாகும்.

பிராய்ட் உளவியலைப் பற்றித்தான் அதிகம் சிந்தித்தார். சமூகத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை என்பது ஆராய்வதற்குரிய கருத்து. இக்கட்டுரையில் அது பற்றி ஆராய முடியாது. மார்க்சின் சமூகச் சிந்தனையுடன் பிராய்டின் உளப்பகுப்பாய்வினை ஒன்று கலத்தல் என்ற பிராமின் கருத்து கேள்விக்குரிய ஒன்றாகும்.

மார்க்ஸ் அடிப்படையில் இயங்கியல் பொருள்முதல்வாதி. பிராய்ட் அடிப் படையில் கருத்து முதல்வாதி இந்த இருவரது சிந்தனை அமைப்பின் சில அம்சங்களை ஒன்று கலப்பது என்பது மறுபடியும் கருத்து முதல்வாதத்திலே தான் முடிவடையும். கருத்து முதல் வாதிகள் பல கருத்துக்களை ஒன்று கலந்த ஒரு புதிய கருத்தை உருவாக்கி விடுவாரகள்.ஆனால் அவை எல்லாம் சாராம்சத்தில் கருத்து முதல்வாதத்தின் பல்வேறு வடிவங்களாகத்தான் இருக்க முடியும். மார்க்ஸ் கருத்து முதல்வாதி யான ஹெகலின் இயங்கியல் முறையைப் பொருள்முதல்வாதத் திற்குப் பயன்படுத்தினார். இதனால் பல வியப்பான சமூகவியல் உண்மை களை வெளிப்படுத்தினார். ஆனால் பிராம் இயங்கியல் பொருள்முதல் வாதக் கோட்பாட்டினைக் கருத்து முதல்வாதத்துடன் கலந்து ஒரு நடுப் பாதையை மேற்கொண்டார். இந்தப் பாதை என்பது மாக்சியத்தை மறுக்கும் ஒருவகையான பாதையாகும்.

***


*வெளிவரவுள்ளது:*

தாய்மடி

கவிதைத்தொகுப்பு


நடிக விநோதன் த.யோகராசா

தொடர்புக்கு:

T.Yogarajah

*Asser Rigsvej 23A*

*8960 Randers Sø*







## க லை ய ர ச ன்

'எந்த ஒரு மனிதனும் இனவெறியனாக பிறப்பதில்லை. பெற்றோரும், சுற்றியுள்ள சமூகமுமே ஒரு பிள்ளையின் மனதில் இனவெறிக் கருத்துகளை பதிக்கின்றனர்.'

*- ஐ.நா.சபை முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனன்.*




2001 ம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவின் டர்பன் நகரில் ஐக்கிய நாடுகள் சபை யால் கூட்டப்பட்ட "இனவெறிக்கு எதிரான உச்சி மகாநாடு" உலகளவில் சலசலப்பை தோற்றுவித்தது. 166 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றிய சர்வ தேச முக்கியத்துவம் வாய்ந்த மகாநாட்டை உலக வல்லரசான அமெரிக்கா புறக்கணித்தது. இறுதி நேரத்தில் தாழ்நிலை அரச பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைத்து, அவர் அங்கே வாயே திறக்கக் கூடாது என்று கூறி விட்டு ஒதுங்கிவிட்டது. அமெரிக்கா மட்டுமல்ல, இஸ்ரேலுக்கும் மகாநாடு தர்ம சங்கடமான நிலையை தோற்றுவித்தது. தென் ஆபிரிக்காவில் தமக்கு எதிரான காற்று வீசும் என உணர்ந்து பின் வாங்கி விட்டனர்.

இந்த மகாநாடு, அமெரிக்காவையும், இஸ்ரேலையும், இந்தியாவையும் எதிரணியில் தள்ளி விட்டது. இந்த மூன்று நாடுகளையும் ஒன்று சேர்க்கும் புள்ளி என்ன? நிறவெறியில் வளர்ந்தது அமெரிக்கா. இன/மத வெறியில் வளர்ந்தது இஸ்ரேல். சாதிவெறியில் வளர்ந்தது இந்தியா. அமெரிக்கா கலந்து கொள்ளாமைக்கு இன்னொரு காரணமும் கூட சேர்ந்து கொண்டது. அமெரிக்க பொருளாதார வளம் ஆப்பிரிக்க அடிமைகளால் கட்டி எழுப்பப் பட்டது. அடிமைகளை பயன்படுத்தியதற்காக கடமைப்பட்டுள்ள அமெ ரிக்கா இன்று வரை மன்னிப்புக் கூட கேட்கவில்லை. இந்நிலையில் அதற்காக டூடு வழங்க வேண்டுமென ஆப்பிரிக்க நாடுகள் கோரி வருகின்றன.

ஆப்பிரிக்க அடிமைகளின் நூறாண்டு கால உழைப்பில் பணக்காரனான அமெரிக்கா அதற்காக நஷ்டஈடு வழங்க இன்றுவரை தயாராக இல்லை. அமெரிக்கா மட்டுமல்ல, காலனிய காலகட்டத்தில் அடிமை வியாபாரத்தாலும், காலனிய நாடுகளை சுரண்டியதாலும், செல்வந்த நாடுகளாக மாறிய மேற்கு ஐரோப்பிய நாடுகளும் நஷ்டஈடு பற்றிய பேச்சை எடுத்தால் ஓடிவிடுகின்றன. நஷ்டஈடு விவகாரத்தை சர்வதேச மட்டத்தில் பிரஸ்தாபித்த ஆப்பிரிக்க நாடுகள், தமது வாதத்தை நியாயப்படுத்த, நடைமுறையில் இருக்கும் "யூத நஷ்டஈடு" விவகாரத்தை எடுத்துக்காட்டின. ஜெர்மனியில் நாசிச ஆட்சிக் காலத்தில் கொத்துக்கொத்தாக கொல்லப்பட்ட யூதர்களுக்காகவும், வதை முகாம்களில் கட்டாயவேலை வாங்கியதற்காகவும் ஐரோப்பிய நாடு கள் இஸ்ரேலுக்கு நஷ்டஈடு வழங்கி வருகின்றன. இஸ்ரேல் அரசுக்கு கிடைத்து வரும் வருடாந்த வருமானத்தில் பெரும்பங்கு இந்த தொகையாகும்.



ஒவ்வொரு இனமும் தான் பாதிக்கப்படும் பொது மட்டும் இன வெறி எதிர்ப்புக் கூச்சல் போடுவதும், அதே இனம் பிறிதொரு இனத்தை அடக்குவதை தனது உரிமை என நியாயப்படுத்துவதும் உலகில் நடப்பதுதான். நாசிச அடக்குமுறையில் இருந்து விடுபட்டு, தமக்கென இஸ்ரேல் என்ற தேசத்தை உருவாக்கிய யூதர்கள், அந்தப் பிரதேசத்தில் பெரும்பான்மையாக இருந்த பாலஸ்தீன அரபு மக்களை அடித்து விரட்டி, தற்போது ஒரு சிறுபான்மை இனமாக மாற்றிவிட்டனர். அம்மக்கள் மீது அடக்குமுறையை பிரயோகிப்பதை ஜனநாயகம் என்கின்றனர். எத்தனை சமாதானப் பேச்சுவார்த்தைகள் வந்தாலும், வீடு திரும்பமுடியாத பாலஸ்தீன அகதிகள். இலட்சக்கணக்கில் அயல்நாடுகளில் உள்ள அகதி முகாம்களில் 60 வருடங்களாக அல்லலுறுகின்றனர். இஸ்ரேலினுள் வாழும் பாலஸ்தீனர்கள், சரளமாக ஹீப்ரூ மொழி பேசிய போதிலும் இரண்டாந்தரப் பிரஜையாக நடத்தப்படுகின்றனர். அதே நேரம் முன்னாள் சோவியத் குடியரசுகளில் இருந்து வந்து குடியேறும், ஹீபுரு மொழியோ, யூத மத அனுஷ்டானங்களோ அறியாத யூதர்களுக்கு இலகுவில் இஸ்ரேலிய பிரஜாவுரிமை கிடைக்கின்றது.



இவற்றை தென்ஆப்பிரிக்காவில் முன்பு நிலவிய அபார்ட்ஹைட் (Apartheid) நிறவெறி ஆட்சிமுறையுடன் ஒப்பிட்டு, பாலஸ்தீன மக்கள் மீதான இனப்படுகொலையையும் கண்டித்த அரசுசாரா நிறுவனங்களின் டர்பன் மகாநாட்டு அறிக்கை இஸ்ரேலையும், அமெரிக்காவையும் உலுக்கிவிட்டது. யூகோஸ்லேவியா, ஈராக் மீதான மோதல்களின் போது வாயில் வந்தபடி பேசிய அமெரிக்கா, தனது நண்பனான இஸ்ரேலை விமர்சிப்பது என்றால் மட்டும் "பொருத்தமான வார்த்தைகளை" பாவிக்கும்படி வலியுறுத்தி வருகிறது. இதுவரை காலமும் வழக்கிலிருந்த சொற்கள் பல யார் யாருக்கு எதிராக பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்தே அர்த்தம் கற்பிக்கப்பட்டன.

**எல்லோரும் தான் கொலை செய்கிறார்கள். ஆனால் கொலை செய்தவர்கள் எதிரியா, நண்பனா என்பதைப் பொறுத்தே நீதி வழங்கப்படுகின்றது.**

துருக்கியில் கமால் பாஷாவின் லிபரல் பாசிஸ்ட்கள் ஆர்மேனிய மக்கள் மீது நடத்திய இனப்படுகொலையை உலகம் நினைவு கூர்வதில்லை. ஆனால் ஜெர்மனியில் ஹிட்லரின் நாசிகளின் யூதமக்கள் படுகொலை ஆண்டுதோறும் தவறாமல் நினைவுகூரப்படுகின்றது. கம்போடியாவில் பொல்பொட் மில்லியன் மக்களை இனப்படுகொலை செய்ததை விசாரிக்க நீதிமன்றம் அமைக்கும் ஐ.நா.சபை, இந்தோனேசியாவில் சுகார்ட்டோ நடத்திய படுகொலைகளை பற்றி விசாரிப்பதில்லை. கம்யூனிச எதிர்ப்பு என்ற பெயரில் சுகார்ட்டோ லட்சக்கணக்கான இந்தோனேசிய மக்களைக் கொன்று குவித்தமை இனப்படுகொலை இல்லையாம், அது "ஜனநாயக மீட்பு" என்று விளக்கமளிக்கின்றனர்.

கொசோவோ மக்களின் போராட்டத்தை நசுக்கிய காலஞ்சென்ற செர்பிய ஜனாதிபதி மிலோசொவிச்சை இனப்படுகொலை குற்றச்சாட்டின் கீழ் விசாரித்தனர். மறுபக்கம் லெபனான் படையெடுப்பின் போது, பெய்ரூட் நகரில் 2000 பாலஸ்தீன அகதிகளைக் கொன்ற இஸ்ரேலிய படைத்தளபதி ஷரோன் பின்னர் பிரதமராகி அமெரிக்காவிற்கும் சென்று வந்தார். அவரை யாரும் இனப்படுகொலை குற்றச்சாட்டின் கீழ் கைது செய்து விசாரிக்கவில்லை. இங்கே ஒரு நடைமுறை தத்துவத்தை மறக்கக் கூடாது. எல்லோரும் தான் கொலை செய்கிறார்கள். ஆனால் கொலை செய்தவர்கள் எதிரியா, நண்பனா என்பதைப் பொறுத்தே நீதி வழங்கப்படுகின்றது.

டர்பன் மகாநாட்டில் எந்த சொற்களை யாருக்கு பாவிப்பது என்று மயிர் பிளக்கும் விவாதம் நடந்தது. இறுதித்தீர்மானத்தில் எந்த சொற்களை தவிர்க்க

வேண்டும் என்று சர்ச்சை எழுந்தது. வெறும் சொற்கள் பலரை அச்சமடைய வைப்பதன் காரணம், அவற்றின் எதிர்கால விளைவுகளையும் கருதித்தான். "நடந்தவற்றை செய்தியாக தரும்" மக்கள் தொடர்பு சாதனங்கள், உண்மையில் அரச கொள்கைகளை மக்களிடம் பரப்புரை செய்யும் பிரச்சார சாதனங்களாகவே செயற்பட்டன. ஆங்கிலத்தில் "Racism" என்றழைக்கப்படும் சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல் இல்லை. "நிறவெறி" அல்லது "இனவெறி" என்று இடம், பொருள் கருதி பயன்படுத்தப்படுகின்றது இதனால் தான் "சாதிவெறி" "Racism" அல்ல என்று இந்தியா வாதிட்டது.

**யூகோஸ்லேவியா, ஈராக் மீதான மோதல்களின் போது வாயில் வந்தபடி பேசிய அமெரிக்கா, தனது நண்பனான இஸ்ரேலை விமர்சிப்பது என்றால் மட்டும் "பொருத்தமான வார்த்தைகளை" பாவிக்கும்படி வலியுறுத்தி வருகிறது.**

இன்றும் பலர் "Racism" என்றால் அது நிறவெறியைக் குறிக்கும் என கருதுகின்றனர். இந்தக் கற்பிதம் உண்மையில் மேற்குலக நாடுகளில் இலகுவில் அறியப்படும் கருப்பு-வெள்ளை வேற்றுமை பற்றி கூறுகின்றது. மேற்குலக நாடுகளில் சூழலுக்கேற்ப பயன்படுத்திய அந்த சொல்லை தமிழில் அப்படியே இறக்குமதி செய்து பயன்படுத்துகின்றனர். "மேற்குலக சூழலுக்கேற்ப" என்பதில் அர்த்தம் உண்டு. ஐரோப்பிய இனங்களுக்கு இடையில் எத்தனை வேறுபாடுகள், பகை முரண்பாடுகள் இருந்த போதிலும், வெள்ளையினம் என்ற அடிப்படையில் ஒன்றிணைக்கும் முயற்சிகள் நீண்டகாலமாகவே நடந்து வருகின்றன. அமெரிக்க ஆங்கிலம் பேசும் வெள்ளையினத்தவரின் மூதாதையர் பல்வேறு ஐரோப்பிய இனங்களை சேர்ந்தவர்கள். தோல் நிறம் காரணமாகவும், அடிமைகளின் சந்ததி என்பதாலும் கருப்பர்களை இலகுவில் பாகுபடுத்தி, அதிகார பீடத்தை நெருங்கவிடாமல் தடுக்கின்றனர். (ஒபாமா போன்றவர்கள் விதிவிலக்குகள். வேறொரு நாடாக இருந்தால் அதிகாரத்திற்கு சேவை செய்யும் இனத்துரோகிகள் என தூற்றப்பட்டிருப்பர்.)

ஆகவே என்பதை எப்படி வரையறுப்பது? இரண்டாம் உலகயுத்தத்திற்கு பின்பே "Racism" என்ற சொல் உலகில் பரவலாக பயன்பாட்டில் உள்ளது. இதன் அர்த்தம் அதற்கு முன்னர் நிற/இனவெறி இருக்கவில்லை என்பதல்ல.



நவீன உலகம் இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் பல மாற்றங்களை கண்டது. மேலும் எப்போதும் வெல்பவர்கள் அகராதியை நிரப்புகிறார்கள். ஜெர்மனியில் ஹிட்லர் "பந்தவம்" அல்லது "இனம்" ("Race") என்ற அடிப்படையை வைத்து மக்களை வேறுபடுத்தினான். நாஜிச சித்தாந்தம் ஏற்கனவே ஐரோப்பியர் மனதில் இருந்த வெள்ளையர் இனம் உலகில் சிறந்தது என்ற மேலாதிக்க உணர்வின் மேல் எழுப்பப்பட்டது. ஆப்பிரிக்காவை அடிமைப்படுத்திய ஐரோப்பியர்கள் கருப்பர்களை மனிதர்களாக கருதவில்லை. இத்தகைய கருத்தியல்களுடன் யூத மதத்திற்கு எதிரான கிறிஸ்தவ மதத்தின் காழ்ப்புணர்ச்சியையும் சேர்த்து நிறுவனமயப் படுத்தியத்தில் ஹிட்லருக்கு பெரும் பங்குண்டு.

ஐரோப்பிய காலனிகள் எங்கும் நிறரீதியிலான பாகுபாடு நிலவியது. கிறிஸ்தவ ஐரோப்பா முழுவதும் ஆயிரம் ஆண்டுகளாக யூதர்கள் இழிவுபடுத்தப்பட்டனர். இதனால் மற்ற ஐரோப்பிய நாடுகளின் கனவான்கள் ஹிட்லர் மீது பழி போட்டுவிட்டு தப்பிவிட முடியாது. பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகள் தமது கடந்தகால நிற/இனவாத ஒடுக்குமுறையை மறைத்துக் கொண்டு, நாசிகளை மட்டும் இனவெறியர்களாக காட்டுகின்றனர். எது எப்படி இருந்த போதிலும் நவீன சரித்திரவியலாளரும், அரசியல்வாதிகளும், சமூக விஞ்ஞானிகளும் ஹிட்லர் காலத்தில் இருந்துதான் "Racism" என்ற சொல்லின் பயன்பாட்டை ஆரம்பிக்கின்றனர்.

இங்கே கூர்ந்து நோக்கினால் இன்னொரு விஷயம் தெளிவுபடும். ஹிட்லரின் இன ஒடுக்குமுறைக்கு பலியானவர்கள் வெண்ணிறத் தோலுடைய யூதர்கள். அவர்கள் ஒரு மதத்தை சேர்ந்தவர்கள் என்பதால், தாம் வாழ்ந்த நாட்டு மொழிகளையே தாய்மொழியாக கொண்டிருந்தனர். மேலும் ஐரோப்பிய யூதர்களை, பிற ஐரோப்பிய மக்களிடம் இருந்து பிரித்தறிய முடியாது. வெள்ளையின யூதர்கள் மட்டுமல்ல, வெள்ளையின ஸ்லாவிய மக்களும் (ரஷ்யர், செர்பியர்) நாஜிச இனவெறிக் கொள்கைக்கு பலியானார்கள். ஆகவே "Racism" என்பது "நிற"வெறியை மட்டுமே குறிக்கும் எனக் கருதுவது தவறானது.

இதுவரை காலமும் பலரால் வேண்டுமென்றே மறைக்கப்பட்ட உண்மை ஒன்றுண்டு. ஹிட்லரின் ஆரிய சித்தாந்திற்கும், இந்திய (மற்றும் ஈரானிய) ஆரியத்திற்கும் இடையிலான தொடர்பு தான் அது. ஆரியனிசமும், ஸ்வாஸ்திகா சின்னமும் ஹிட்லரின் மூளையில் உதித்த சிந்தனை அல்ல. இந்தியாவில் தியோசோபிகல் அமைப்பை ஸ்தாபித்த அன்னி பெசன்ட் அம்மையார் ஹிட்லர் தோன்றுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே அத்தகைய கருத்துகளை கொண்டிருந்தார். ஹிட்லருக்கு ஆரியனிசத்தை

கற்பித்த அமைப்பு, இன்றும் சென்னை நகரில் அடையார் பகுதியில் இயங்கி வருகின்றது. ஹிட்லர் காலத்தில் இத்தாலியில் ஆட்சிக்கு வந்த பாசிச முசோலினி பண்டைய ரோமர்களின் சின்னங்களுக்கு புத்துயிர் கொடுத்தான். அதேபோல ஹிட்லரும் வெள்ளையினத்தவரின் மூதாதையர் மத்திய ஆசியா வில் இருந்து புலம்பெயர்ந்த ஆரியர்கள் என்ற கருத்தைக் கொண்டிருந்தான். மத்திய ஆசியாவில் காணப்பட்ட (இன்று இந்துக்களால் பயன்படுத்தப் படும்) ஸ்வாஸ்திகா சின்னத்தை நாசிச அமைப்பின் சின்னமாக்கினான்.



சரித்திர ஆசிரியர்கள், ஐரோப்பிய இனத்தவர்களினதும், வட இந்தியர் களினதும் முன்னோர் ஆரியர்களே என்றும், அதற்கு ஆதாரமாக மொழியி யல் ஒற்றுமைகளையும் எடுத்துக் காட்டுகின்றனர். "திபெத்தில் ஏழு வருடங்கள்" என்ற அமெரிக்கத் திரைப்படம் வெளியானது. சரித்திர சம்பவங்களை அடிப்படையாக கொண்ட திரைக்கதை அது. ஒரு சாதாரண சாகசக்காரனாக திபெத்தி னுள் நுழையும் கதாநாயகனைப் பற்றி கூறுகிறது திரைப்படம். கதா நாயகன் நாஜிக்கட்சி உறுப்பினர் என்பதும், ஹிட்லரின் உத்தரவின் பேரில் ஆரிய இனத்தின் தோற்றம் பற்றி ஆராய திபெத்திற்கு அனுப்பப்பட்டவன் என் பதையும் அந்தப் படம் சொல்லாமல் மறைத்துவிட்டது. திபெத்திய பௌத் தம் பல இந்துமதக்கூறுகளை கொண் டுள்ளது. ஸ்வாஸ்திகா சின்னமும் அவற்றில் ஒன்று. இந்து மதத்தினதும், திபெத்திய பௌத்த மதத்தினதும் மூலம் ஒன்றாக இருக்க வேண்டும். இந்துக்கள் சிவபெருமானின் வதிவிட மாக நம்பும் கைலாச மலை திபெத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் உள்ள சாதியமைப்பு ஆதிகால வர்ணாச்சிரம முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது. ஆரியரின் வரலாற்றைக் கூறும் வேதமான ரிக்வேதம் சாதிகளைப் பற்றி எங்கேயும் குறிப்பிடவில்லை. ஆனால் வர்ணங்கள் பற்றி யும், அவற்றிற்கு இடையிலான ஏற்றத்தாழ்வு குறித்தும் பேசுகின்றது. மேலும்



ஆரியக்குழுக்களின் தலைவன் இந்திரனால் தோற்கடிக்கப்பட்ட கருநிற தாசர் கள் பற்றியும் குறிப்பிடுகின்றது. அடிமைகள் எனப் பொருள்படும் "தாசர்கள்" இன்றைய தாழ்த்தப்பட்ட தலித் சாதியினராக கருத இடமுண்டு. வர்ணம் என்பது நிறம் என்று கருதிக் கொள்பவர்கள், அது நிறவெறி என்பதையும் ஏற்றுக்கொள்கின்றனர். சாதியமும், நாஜிசமும் சமூக ஏற்றத்தாழ்வு நியாயம் எனக் கூறுகின்றன. சாதிகளுக்கு இடையிலான கலப்புமணம் தடை செய்யப் பட்டதைப் போல, தூய ஆரிய இனம் பற்றி பேசிய நாஜிசம் வேற்றினக் கலப்பை குற்றமாகப் பார்த்தது. நாசிகளின் காலத்தில் யூதர்களும், ஜிப்சி களும் அசுத்தமானவர்கள், தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கப் பட்டனர். இத்தகைய சிந்தனை இன்றும் கூட இந்திய உயர்சாதியினர் மத்தியில் உள்ளது.

டர்பன் மகாநாட்டில் சாதிப்பிரச்சினை இந்தியாவில் இல்லை என்று பூசி மெழுக இந்திய அரசு பகீரதப் பிரயத்தனம் எடுத்தது. அப்படியே இருந்தாலும் சாதியத்தை "Racism" என வரையறுக்க முடியாது என வாதிட்டது. ஆயினும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இந்திய அரசின் கூற்றை மறுதலித்தன. மகாநாட்டில் சாதிப் பாகுபாட்டிற்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. அந்த தீர்மானத்தின் சில பகுதிகள் இவை:

-பாகுபடுத்தும் வடிவமான சாதி அமைப்பு சரித்திர ரீதியாக சமூகங்களை பிளவுபடுத்தி உள்ளது. தீண்டாமை முறையானது மனித உரிமைகளை மீறவும், வன்முறைகளை தூண்டவும் வலி வகுக்கின்றது.

- மனிதத்திற்கு விரோதமான சாதிப்பாகுபாடு, மதத்தாலும், கலாச்சாரத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட பொய்யான சித்தாந்தம் மீது கட்டப்பட்டுள்ளது. தென் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவின் சில பகுதிகளிலும் வாழும் கோடிக்கணக் கான தாழ்த்தப்பட்ட மக்களை இது பாதிக்கின்றது.

- தூய்மையற்றவர்கள் என்று சொல்லி ஒதுக்கும் தீண்டாமை முறையானது, அம்மக்களின் வழிபாட்டு உரிமையை மறுப்பதுடன், கீழ்த்தரமான வேலைகளை செய்யுமாறு பணிக்கப்படுகின்றனர்.

- தலித் மக்கள் தமது உரிமைகளுக்காக போராடும் போதெல்லாம் அவர்கள் மீது சொத்துகளை அழித்தல், பாலியல் வன்கொடுமை, கொலை போன்ற வன்முறைகள் ஏவிவிடப்படுகின்றன.

★★★




ஈழத்தமிழர் மத்தியில் மிகவும் முக்கியமான காலகட்டத்தில் பிறந்து வறுமையோடு தவழ்ந்து சமூகக்கொடுமைகளுக்கு முகங்கொடுத்து கடுமையாகப் போராடி ஒடுக்கப்பட்ட மக்களின் தளைகளை அறுத்தெறிந்து அவர்களைச் சக மனிதர்களுடன் சமானமாக நிலைநிறுத்துவதற்குத் தன் உடல் பொருள் ஆவி என அத்தனையையும் அர்ப்பணித்துப் பணியாற்றி மறைந்தவர் தோழர் கே.டானியல்.

**மக்கள் எழுத்தாளர் கே.டானியல் மறைந்து 23 வருடங்கள் கடந்து விட்டாலும் இன்றும் அவரது நாமம் பேசப்படுகிறது..!**

என் இளமைக்காலத்தில் என் சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி சரியான சமூகப்பாரவையுடன் பேனா பிடிக்க வழிகாட்டியவரகளில் முக்கியமானவர் கே.டானியல். சுமார் பதினான்கு ஆண்டுகள் அவரோடு இணைந்து பணியாற்றியதும் அவரது இறுதி மூச்சு பிரியும் வேளையிலும் உடனிருந்து உதவியதும் என்னால் மறக்க முடியாதனவாகும்.

தலித் இலக்கியம் தற்போது தமிழ் இலக்கியப்பரப்பில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. விவாதிக்கப்படுகிறது. புலம்பெயர்ந்த நாடுகளிலும் நம்மவர் மத்தியில் இதுகுறித்த சர்ச்சைகள் நோக்குகள் கூர்மையடைந்து விவாதத்திற்குரியனவாகின்றன. தலித் இலக்கியப் பிதாமகர், முன்னோடி எனத் தமிழக விமர்சகர்களாலும் ஈழத்து இலக்கியக்காரார் பலராலும் டானியல் விதந்துரைக்கப்படுகிறார். இதில் ஒரு விடயம் சுலபமாக மறக்கடிக்கப்படுவதாகத் தெரிகிறது.



டானியல் ஒடுக்கப்பட்ட மக்களில் அடிமட்டச் சமூகத்தில் பிறந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவே போராடியவர் எழுதியவர் என்பதாக மட்டுமே உணர்த்தப்படுகிறது. அவரது பொதுவுடமைக் கட்சிப் பணி மறைக்கப்பட்டு மறக்கடிக்கப்படுவதாக எண்ணத் தோன்றுகிறது. டானியல் இன்று உயிருடன் இருந்தால் நிச்சயமாக இத்தகைய பார்வையை ஏற்றுக்கொள்ளமாட்டார்.

டானியல் பொதுவுடமைக் கட்சியின் தொடர்பு காரணமாகவே சமூகப்பணிகளில் ஈடுபடத் தொடங்கியவர். பொதுவுடமைக் கட்சியினை வடபகுதிக்கு அறிமுகம் செய்து மக்கள் மத்தியில் பரவலாக்கி இறுதிவரை அதற்காகவே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர் தோழர் மு.கார்த்திகேசன். அவரது தொடர்பு டானியலை பொதுவுடமை அரசியல்ரீதியாகவும் எழுத்துத்துறையிலும் வளப்படுத்தியது எனலாம். இளமைக்காலத்தில் வறுமையில் துவண்டபோதிலும் திருமணத்தின் பின்பும் வறுமையும் இடர்ப்பாடுகளும் வாட்டிவதைத்தபோதிலும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டபோதிலும் அவர் கட்சிப் பணிகளிலிருந்து தன்னை ஒதுக்கிக்கொண்டவரல்ல. பொதுவுடமைக் கட்சியினது வடபிரதேச் கிளையின் முழு நேரச் செயற்பாட்டாளராகப் பலவருடங்கள் பணியாற்றியவர் டானியல்.

60களின் நடுப்பகுதியில் சரவதேசரீதியாகப் பொதுவுடமை இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு இலங்கையிலும் எதிரொலித்தது. இதன் காரணமாகச் சோவியத் சார்பு சீனச் சார்பு எனப் பிளவு இலங்கைப் பொதுவுடமை இயக்கத்திலும் ஏற்பட்டது.



யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 1979 அக்டோபரில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டில் தோழர்.சண்முகதாசனின் வாழ்த்துச் செய்தியை வி.ரி.இளங்கோவன் வாசிக்கிறார். மேடையில் கே.டானியல், கே.கிருஸ்ணபிள்ளை, எஸ்.ரி.என்.நாகரெத்தினம்

பெரும்பாலான உழைக்கும் மக்கள் தொழிலாளர்கள் விவசாயிகள் கலை இலக்கியவாதிகள் தோழர் நா.சண்முகதாசன் தலைமையிலான சீனச் சார்பு கட்சியினை ஆதரித்தனர். டானியலும் தோழர்.சண் பாதையிலேயே இயங்கியவர்.

1971ம் ஆண்டு சித்திரை மாதம் விஜயவீரா தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி.) தொடங்கிய காட்டிக்கொடுப்பிலான கிளர்ச்சியின் போது பொதுவுடமைக்கட்சி (சீனச்சார்பு) பல பின்னடைவுகளை அடக்கு முறைகளை சீர்குலைவுகளை எதிர்கொண்டது. கட்சி அலுவலகங்கள் சொத்துக்கள் சிதறடிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான தோழர்கள் சிறையிடப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். தோழர்.சண், சமல் டி சில்வா, காந்தி அபயசேகரா, டானியல் உட்படப் பல தலைமைத் தோழர்கள் சிறையிடப்பட்டனர். பின்னர் எழுபதுகளின் பிற்பகுதியிலும் கட்சியில் பிளவு ஏற்பட்டபோதிலும் தோழர் சண்முகதாசனின் சரியான வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்டவராகவே டானியல் இயங்கியவர்.

1979ம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பிரமாண்டமான முழு நாள் மாநாடு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. ஆயிரக் கணக்கான பிரதிநிதிகளால் மண்டபம் நிரம்பி வழிந்தது. இம்மாநாட்டின் வெற்றிக்காகப் பலமாதங்களாக இரவுபகலாக டானியல் இயங்கியதை நான் நன்கறிவேன். அவருடன் கூடவே இருந்து நானும் செயற்பட்டேன். தோழர் சண் வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தார். டானியல் எஸ்.ரி.என்.நாகரத்தினம் கே.கிருஸ்ணபிள்ளை ஆகிய தலைமைத் தோழர்களின் சிறப்புரைகள் குறிப்பிடத் தக்கன. பேராசிரியர் நந்தி, பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன், கலைஞர் சிசு. நாகேந்திரா, கலைஞர் குத்துவிளக்கு பேரம்பலம் உட்பட பல கலை இலக்கியவாதிகள் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

'எனக்கு ஓர் அரசியல் பாதை உண்டு. அதற்கு உந்துசக்தியாகவே எனது படைப்புகளைத் தருகிறேன்' என டானியல் சொல்வதுண்டு. டானியல் அரசியல் செயற்பாட்டாளர், சமூக விடுதலைப்போராளி, எழுத்தாளர்,பேச்சாளர். ஒடுக்குமுறை எந்த வடிவத்தில் வந்தாலும் அந்த வடிவத்தை அடையாளம் கண்டு எதிர்க்கின்ற பக்குவமும் துணிவும் ஆற்றலும் டானியலுக்கு இருந்தது. இதனால் யாழ்குடா நாட்டில் எந்தக் குக்கிராமத்தில் வாழும் மனிதனும் தனக்குச் சாதியின் பெயரால் அல்லது ஏதாவது வகையில் ஒடுக்குதல் நெருக்கடி ஏற்பட்டால் அதற்கான பரிகாரம் தேடி ஆலோசனைபெற ஆதரவுபெற டானியலைத்தேடி வருவதை நான் பல வருடங்களாகப் பார்த்திருக்கிறேன். அந்த வகையில் ஒடுக்கப்பட்ட மக்களின் மனதில் நிறைந்த ஒரு மனிதனாக டானியல் விளங்கினார். அவரது செயற்பாடுகளுக்குப் பேருதவியாகக் கட்சித்தோழர்கள் இருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சாதியம் குறித்து நோக்கும்போது இந்திய நிலைமைகளையும் இலங்கையின்



வடபகுதி நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. இந்திய சாதியம் பிராமணியத்தால் கட்டமைக்கப்பட்டு வழிநடத்தப்பட்டு வருகிறது. அதற்கெதிராக தலித் மக்கள் கிளர்ந்தெழுந்து பல்வேறு வழிவகையில் போராடிவருகிறார்கள். இலங்கையில் பிராமணியம் இல்லை. உயர் சைவ - கிறிஸ்தவ வேளாளர் எனச் சொல்லிக்கொள்வோரின் ஆதிக்கமே வழிவழியாக வளர்ச்சிபெற்று வந்திருக்கிறது. 'வேளாளர்' என்ற கருத்தியலை பொருளாதார ரீதியில் உயர்வுகண்ட ஏனைய சாதியினரும் முன்னெடுப்பதுண்டு.

> "எனக்கு ஓர் அரசியல் பாதை உண்டு. அதற்கு உந்துசக்தியாகவே எனது படைப்புகளைத் தருகிறேன்" – டானியல்

சாதியத்திற்கு எதிராகத் தமிழ் பாராளுமன்றவாதிகள் உணர்வுபூர்வமாக எத்தகைய நடவடிக்கைகளையும் போராட்டங்களையும் முன்னெடுத்துச் செல்லவில்லை. தேர்தல் காலங்களில்மட்டும் தேவையின் பொருட்டு சமபந்தி போசனம் போன்ற ஒருசில விளம்பர நடவடிக்கைகளை மேற்கொண்டு சாகசங்காட்டி வந்தனர். இக்காலகட்டத்தில்தான் 'சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச்சட்டத்தை' அமுல்படுத்தக் கோரி 1966ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் திகதி சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரலாற்றுப் புகழ்மிக்க அந்த ஊர்வலம் புறப்பட்டது. இந்த ஊர்வலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுடன் முற்போக்கு எண்ணங்கொண்ட சகல மக்களும் முஸ்லீம் மக்களுட்படக் கலந்துகொண்டனர். தோழர்.சண் தலைமையில் கம்யுனிஸ்ட் கட்சி முழு ஆதரவு வழங்கியது. பொலிசாரின் குண்டாந்தடி தாக்குதலுள்ளாகியும் நிலைகுலையாத ஊர்வலம் எழுச்சியுடன் யாழ்நகரை நோக்கி முன்னேறிச் சென்றது. இந்த ஊர்வலத்திற்குத் தலைமை கொடுத்துச் சென்றவர்களில் டானியலும் ஒருவர்.

இதன் பின்னரே 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் உதயமானது. இது ஒரு சாதிச்சங்கம் அல்ல. சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர்த்து நின்ற சகல முற்போக்குச் சக்திகளையும் ஒன்றிணைத்த ஒரு பரந்த வெகுசன இயக்கமாகவே முன்னெடுக்கப்பட்டது. இந்த இயக்கம் பல்வேறு போராட்டங்களின் மூலம் பல வெற்றிகளைக் கண்டது. தோழர் சண்முகதாசன் தலைமையிலான இலங்கை கம்யுனிஸ்ட் கட்சி இந்தப் போராட்டங்கள் யாவற்றுக்கும் உறுதுணையாக நின்று உதவியது. தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளின் ஆதரவைப் பெற்றுக் கொடுத்தது. இலங்கைப் பாராளுமன்றம் முதல் சீன வானொலிவரை இந்தப் போராட்டங்கள் குறித்துப் பேசப்பட்டன. குடாநாட்டின் இருண்ட பகுதிகளுக்குள் வெளிச்சம் பாய்ச்சப்பட்டதாக விமர்சனங்கள் எழுந்தன. இந்தப் போராட்டங்களின் அத்தனை செயற்பாடுகளிலும் டானியலின் பங்களிப்பு முக்கியமானது.

சிந்தனைத் தெளிவுமிக்க தியாகங்கள் நிறைந்த சகல முற்போக்குச் சக்திகளையும் ஒன்றிணைத்த வெற்றிகளைக் கண்ட இந்தப் போராட்டப்பாதையே தமிழ்த் தேசிய இனத்தின் விடிவுக்கும் முன்மாதிரியாக அமையக்கூடியது என சில அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளமை மிகையாகாது. தலித்துகள் மட்டும் தான் தலித்துகளுக்காகப் போராட வேண்டும் என்று கூறுவது சரியானதல்ல.

வடபகுதியில் நடந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டம் அத்தகைய கருத்தைக் கொடுக்கவில்லை. அது தோழர்.சண்முகதாசன் தலைமை யிலான கம்யுனிஸ்ட் கட்சியின் பூரண ஆதரவுடன் சகல முற்போக்கு சக்திகளை யும் ஒன்றிணைத்து நடைபெற்றது. வெற்றிகளைக் கண்டது. பல்வேறு கலை இலக் கியப் படைப்பாளிகள் இதற்கு உறுதுணையாகச் செயற்பட்டார்கள். பேராசிரியர் கைலாசபதி, பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன், முருகையன் இளங் கீரன், அம்பலத்தாடிகள் குழுவினர் மற்றும் இளந்தலைமுறையைச் சேர்ந்த பல கலை இலக்கியப் படைப்பாளிகள் தலித்துகள் அல்ல. ஆனால் அவர்கள் இந்தப் போராட்டங்களுக்கு உறுதுணையாக நின்ற மார்க்சிசவாதிகள்.

இன்றைய சர்வதேச சூழ்நிலைகளையும் எம்நாட்டின் உண்மை நிலைமைகளை யும் கவனத்திலெடுக்காது தேசிய விடுதலை பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் தனித் தலித்திய பார்வை கொண்டு நோக்குவதும் அதற்கேற்ப டானியலைக் காட்ட முற்படுவதும் பொருத்தமற்றதாகும். இத்தகைய பார்வையை இன்று டானியல் உயிருடன் இருந்தால் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டார். ஏனெனில் மார்க்சிச லெனினிசப் போராட்டப்பாதையை அரசியல் பாதையாக ஏற்றுக்கொண்டு அதற்கெனத் தன்னை அர்ப்பணித்து இறுதிவரை செயற்பட்டவர் டானியல். அவரின் வாழ்வின் பிற்பகுதியில் பல வருடங்களாக அவரோடு சேர்ந்து பணியாற்றியவன் என்ற வகையில் அவரது எண்ணங்கள் செயற்பாடுகள் எந்தவழியில் இருந்தன என்பதனை என்னால் குறிப்பிட்டுச் சொல்லமுடியும். 'அவரது மார்க்சிசப் பார்வையும் சாதியப் பார்வையும் முரண்படுவதாகத் தெரியவில்லை. மார்க்சிசத்திற்குள் சாதியப் பார்வை ஒத்து இயங்குகிறது என்கிறார் டானியலின் படைப்புகளைப் புரிந்துகொண்ட கோவை ஞானி.

டானியலின் படைப்புகளில் குடாநாட்டின் ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேற்பட்ட பகுதியின் வரலாற்று ஓட்டத்தை சமூக நகர்வைக் கவனிக்கலாம். குடாநாட்டின் யாரும் காட்டியிராத இருண்டபகுதிகளை வெளிச்சம் போட்டுக்காட்டியவர் டானி யல். இதனால் தானோ சிலருக்கு அவர் வேண்டாதவராக ஒதுக்கப்பட வேண்டியவ ராகத் தென்பட்டார் போலும்! அவரை ஒழித்துக்கட்டவும் பல முயற்சிகள் நடந்ததுண்டு. அவரோடு பல இடங்களுக்கும் சென்றுவந்தபோது இத்தகைய ஒருசில நடவடிக்கைகளை என்னாலும் உணர்ந்துகொள்ள முடிந்தது.



மக்கள் பணிகளில் அயராது ஈடுபட்டதால் சிலரது பார்வைக்கு மட்டுமல்ல அரசு இயந்திரத்தின் காவல்காரருக்கும் அவர் குறிவைக்கப்பட வேண்டியராகவே இருந் தார். சந்தர்ப்பம் பார்த்து அவரை ஒழித்துவிட முயற்சித்ததுண்டு. பல மாதங்கள் அவர் சிறை வைக்கப்பட்டார். நீரிழிவு நோயின் தீவிரத் தாக்கத்திற்குட்பட்ட நிலையில் பல வேதனைகளை அவர் சிறையில் அனுபவித்தார். பலமாதங்கள் தலைமறைவு வாழ்க்கையையும் மேற்கொண்டார். இறுதிக்காலத்தில் கண்பார்வை குன்றிவந்த நிலையில் நீரிழிவு நோய்க்கு வைத்திய சிகிச்சை பெறும்பொருட்டும்



சென்னை கிறிஸ்தவ இலக்கிய சபையினரின் (ஜனவரி 1981 ) இலக்கிய கருத்தரங்கில் பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையுரை நிகழ்த்துகிறார். அருகில் கே.டானியல், வி.ரி.இளங்கோவன்

கானல், பஞ்சகோணங்கள் நாவல்களை அச்சேற்றும் பொருட்டும் பேராசிரியர் அ. மாரக்ஸ் மற்றும் தோழமை பதிப்பகத் தோழர்களின் அழைப்பின்பேரில் தமிழகம் செல்ல முடிவுசெய்தார். தமிழகம் செல்லும் முன்னர் கொழும்பில் தோழர்.சண் வீட்டில் தங்கியிருந்து பல்வேறு விடயங்கள் குறித்து உரையாடினார். பஞ்ச கோணங்கள் நாவல் குறித்து தோழர்.சண் குறிப்பிட்ட விடயங்களையும் கவனத்திலெடுத்துக் கொண்டார.

உடல்நலம் குன்றிய நிலையிலிருந்த அவரை 30 - 01 - 1986 ல் தமிழகம் அழைத்துச் சென்றேன். நீரிழிவு நோயின் முதிர்நிலையின் சகல பாதிப்புகளும் அவரை வாட்டின. தோழர்களின் ஏற்பாட்டின்படி சிகிச்சைகள் நடந்தன. உடனி ருந்து கவனித்து வந்தேன். உடல்நிலையைப் பாராது பல்வேறு இடங்களுக்கும்

சென்று தோழர்களைச் சந்திக்க ஆவலாயிருந்தார். திருச்சி, தஞ்சை, சென்னை, மதுரை, பாண்டிச்சேரி, கும்பகோணம் ஆகிய இடங்களுக்குச் சென்றோம். கூட்டங்களில் உரையாற்றினார். பலரையும் சந்தித்து உரையாடினார்.

1981ம் ஆண்டு தமிழகம் சென்றபோது 'சி.எல்.எஸ்' இலக்கியக் கருத்தரங்கில் உரையாற்றியபின் தஞ்சை பிரகாஷின் அழைப்பின் பேரில் தஞ்சை சென்றதும் அவர் பார்க்க விரும்பியது உயர்ந்த கோவில்களோ, அரண்மனைகளோ பெரிய மனிதர்களென இருந்தவர்களையோ அல்ல. கீழ்வெண்மணியில் உயிருடன் கொளுத்தப்பட்ட ஏழைமக்களின் நினைவிடத்தைத்தான் பார்க்க விரும்பினார். தஞ்சைப் பிரகாஷ், எழுத்தாளர் சி. எம். முத்து ஆகியோருடன் அங்கு சென்று பாரத்தோம். பலமணி நேரம் அங்குள்ள நசுக்கி ஒடுக்கப்பட்ட கிராமத்து மக்களைச் சந்தித்து அவர் பேசியமை இன்றும் எனக்கு ஞாபகம்.

தஞ்சை தங்கசாரதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த டானியலுக்கு 23-03-86 காலை 8. 30 மணியளவில் மூச்சுத் திணறல் ஏற்பட்டு அவதிப்பட்டார். டாக்டர்களும் தாதிமாரும் உடனின்று சிகிச்சையளித்தனர். எனது கையைப் பற்றிப் பிடித்தவாறு 'தம்பி... தம்பி..' என ஏதோ சொல்ல விழைந்து முடியாத நிலையில் அவரது உயிர் பிரிந்தது. இந்நிகழ்வு என்மனதில் என்றும் மறக்கமுடியாத வேதனைப் பதிவாகிவிட்டது.

படைப்பாளிகளை மிகவும் நேசித்தவர் டானியல். இளம் எழுத்தாளர்களை அரவணைத்து வழிப்படுத்தியவர். பலருக்கு விளம்பரமின்றி நல்ல உதவிகள் செய்துள்ளதை என்னால் அறிய முடிந்தது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் படைப்பாளிகளை வரவேற்று உபசரித்தவர். இதனை எழுத்தாளர்கள் வ.அ. இராசரத்தினம், லெ.முருகபூபதி, அந்தனிஜீவா ஆகியோருட்பட பலர் டானியல் காலமாகியதை அறிந்ததும் கண்ணீர் சிந்த எழுதியுள்ள பதிவுகளில் காணலாம்.

இறுதிவரை இலட்சியம் குன்றாத எந்தவித விட்டுக்கொடுப்புகளுமற்ற நம்பிக்கையான போராளியாக படைப்பாளியாகத் திகழ்ந்த டானியல் மறைவு குறித்து இலங்கை கம்யுனிஸ்ட் கட்சி (மாவோ) பொதுச்செயலாளர் நா.சண்முகதாசன் அன்று எழுதியுள்ள வரிகள் குறிப்பிடத்தக்கன: "இளமைக்காலம் முதல் கம்யுனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கிளையின் நடவடிக்கைகளில் முக்கிய பங்களிப்புச் செய்தவர் டானியல். அறுபதுகளின் பிற்பகுதியில் ஏற்பட்ட வெகுஜன இயக்க எழுச்சிக்குத் தலைமை கொடுத்தவர்களில் ஒருவர். அவரது இழப்பு இந்த நாட்டின் இலக்கியத்துறைக்குப் பேரிழப்பு. அவர் துணிவுமிக்கப் போராளி. நேர்மை மிக்க தோழர். நான் நல்ல தோழனை அன்பு நண்பனை இழந்துவிட்டேன்.."

அந்த மானிட நேசனின் மக்கள் விடுதலைப் போராளியின் கூர்ந்த சமூகப் பார்வையுள்ள படைப்பாளியின் நாமம் என்றும் நிலைத்து நிற்கும்.



## சமூக சமத்துவம் மலர உழைத்து வந்த உதயதாரகை

# கே.டானியல்

பேச்சு, எழுத்து, செயல் இம்மூன்றையுமே சமூகநீதி, சமூக சமத்துவம், சுரண்டலற்ற ஆட்சிமுறை நம் தாயகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற அர்ப்பணிப்புடன் பயன்படுத்தியவர் தோழர். கே.டானியல். ஒரு பொதுவுடமைவாதி, சமூகசமத்துவப் பேரொளி, ஒரு இலக்கியவாதி என ஒன்றிணைந்த பலதளங்களில் நின்று பணியாற்றிய தோழர்.

தமிழ் இலக்கிய உலகில் டானியல் அவர்களுக்கென்று சிறப்பான ஓர் இடம் உண்டு. இதனால் தான் அவர் வாழ்ந்த காலத்திலும், மறைந்துவிட்ட பின்பும் அதிகம் விமர்சனங்களுக்கு உள்ளாகிப் பேசப்படும் ஒருவராகக் காணப்படுகின்றார்.



-எஸ்.சந்திரபோஸ்

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி எனப் பல இலக்கிய விமர்சகர்கள், திறனாய்வாளர்கள் கூறுவார்கள் உள்ளதை உள்ளவாறு கூறிவிடுவது இலக்கியமாகி விடுமா? அது வெறும் தகவல் ஆகிவிடதா என எதிர்வாதம் புரிவோரும் உண்டு. ஆயினும் இலக்கியத்திற்கு ஒர் இலக்கு இருக்க வேண்டும். கருத்தாழமும் கலை அழகுடனும் வாழ்க்கையை பிரதிபலிக்கச் செய்ய வேண்டும் என்பதனை மறுப்போர் எவரும் இலர்.

தோழர்.கே.டானியலைப் பொறுத்தவரை தம்மை ஒரு எழுத்தாளனாகக் காட்டிக் கொள்வதற் காகவோ, தனது வித்துவத்தைப் பறைசாற்றவோ, வாசகரை கற்பனை உலகில் சஞ்சரிக்க வைத்து திருப்திப்படுத்துவதற்கா கவோ, வார்த்தை ஜாலம் புரிந்து வாசகர்களை வசீகரிக்கவோ விளங்காமல் எழுதி தன்னை ஒரு எழுத்துலக பிரம்மாவாகவோ காட்டிக்கொள்ள முயன்றவர் அல்ல.

படைப்பாளிக்கு ஒரு சமூகப் பொறுப்புண்டு என்பதையும், படைப்பு களுக்கு ஒரு இலக்கும் பயன்பாடும் சமூகக்கட்டமைப்பும் உள்ளது, என்பதனையும் உணர்ந்து மார்க்சிய சிந்தனை களை உள்வாங்கி எழுதியவர் கே.டானியல்.

சமுதாய உண்மைகளை உள்ளது உள்ளபடியே எடுத்துக்காட்டுவது அதன் நியாய, அநீதிகளை வெளிக்கொண்டு வருவது, முரண்பாடுகள் சிக்கல் களைக் களைந்து சமூகமேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் எடுத்துச் சொல் வது, இதன் மூலம் சமூகமாற்றத்திற்கும், புதிய சமுதாயப் பேரெழுச்சிக்கும் வழி அமைக்க கருத்தாழத்துடனும், கலை யழகுடனும் படைக்கப்படுவது யதார்த்த இலக்கியமாகும். இந்த இலக்கணத்திற்கு அமைவாகவே கே.டானியலின் சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல்கள் அமைந்துள்ளன.

தோழர்.கே.டானியலுக்கு முன்பும் அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்ட கதை மாந்தர்களைக் கொண்ட படைப்புக்கள் நம் தாயகத்தில் வெளிவந்துள்ளன. ஆனால் அவை அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களைப் பார்த்து இரக்கப்படுவதாகவோ, அனுதாபப்படு வதாகவோ படைக்கப்பட்ட பரிதாபத்திற்குரிய இலக்கியங்களாகவே அமைந்தன. ஆனால் டானியலின் படைப்புக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமை மறுக்கப்பட்டோரின் உரிமைக்குரலாக மட்டுமன்றி, விடுதலையை வென்றெடுக்க, அநீதிகளை அழித்தொழிக்க அம்மக்கள் அமைப்புரீதியாக ஒன்றிணைந்துப் போராடி சமூகமாற்றத்தை ஏற்படுத்த வழிகாட்டுகின்றன.

கே.டானியலின் சிறுகதைகளோ, நாவல்களோ, வெறும் கற்பனை நிகழ்வு களையோ, கற்பனைப் பாத்திரங்களையோ, அமானுஷ்யப் பாத்திரங் களையோ கொண்டு எழுதப்பட்டவையல்ல. தாய் மண்ணில் வாழ்ந்த வாழும் மண்ணின் மைந்தர்களின் இன்பம், துன்பம், அவலம், அடக்கு



முறை போன்ற வாழ்க்கைப் போராட்டங்களை சித்தரிப்பதாகவே அமைந் துள்ளன. இதனால் இவரது படைப்புக்கள் உயிர்த்துடிப்புள்ள மக்கள் இலக்கியமாக மட்டுமன்றி ஈழத்தமிழ் மக்களின் ஒரு காலகட்டத்தின் சமூக வரலாற்று ஆவணமாகவும் திகழும்.

டானியலின் ஆக்கங்களான டானியல் சிறுகதைகள், போராளிகள் காத்திருக்கின்றனர், பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், கானல், பஞ்ச கோணங்கள், தண்ணீர், குறுநாவல்களான முருங்கையிலைக் கஞ்சி, மையக் குறி, இருளின் கதிர்கள் ஆகியவை அமைகின்றன. மக்களிடம் தாம் படித்த வற்றை, மக்களிடம் திருப்பிக்கொடுக்க வேண்டும் என்று தான் பார்த்து அறிந்த அநுபவித்த இன்ப துன்பங்களை யெல்லாம் தனது எழுத்துக்களில் பதிவு செய்ததன் மூலம் சமூகத்தில் புரட்சிக்கனலை மூட்டிவிட்டார்.


தமிழ்நாட்டின் இலக்கிய நிகழ்வொன்றில் டானியல்

ஈழத்தமிழர்கள் ஒன்றுபட்டு வாழாது பகுத்தறிவுக்கு ஒவ்வாவண்ணம் உயர்ந் தவன், தாழ்ந்தவன் எனப் பாகுபடுத்தி மிருகங்களை விடக் கேவலமாக மிலேச்சத் தனமாக நடத்தியதும் மனித உரிமைகளை மறுதலித்த தும் அதன் விளைவுகளை இன்றும் அனுபவிக்கி றோம். இன்று பேரினவாத சிங்கள பௌத்த அரசுக்கு எதிராகப்போராட தமிழினம் கிளர்ந்தெழுந்து போராட்டங்கள் நடத்தியதன் காரணங்களை நாம் நோக்கும் போது, அதே காரணங்களே ஈழத் தமிழர்களில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் தம்மை அடக்கி ஒடுக்கி உரிமைகளை மறுத்த தமிழர்களில் பெரும்பான்மை சாதி வெறியர்களுக்கு எதிரான போராட்டங்களுக்கும் காரணமானது. பொது இடங்களில் சமத்துவம், ஆலயவழிபாட்டுச் சுதந்திரம், கல்வியில் சம வாய்ப்பு, குடியிருப்புகளும், குடியேற்றங்களும், பொது நீர்நிலைகள், கிணறுகளில் நீர் பயன்பாட்டிற்குத் தடை, தொழிற்பெயர்ச்சிக்குத் தடை, பரம்பரை அடிமை குடிமைத்தொழில் செய்ய நிர்ப்பந்தம், சமத்துவமாக ஆடை, அணிகள் அணியத்தடை போன்றவை காரணிகளாக அமைந்தன.

இவ்வடக்குமுறைகளுக்கெதிராக இலக்கியப் போராளியாக மட்டும் நின்று விடாது டானியல் அரசியல் போராளியாகவும் இயங்கினார். தியாகங்களுக் கஞ்சாத விட்டுக்கொடாத போராட்டமே ஒடுக்கப்பட்ட மக்களின்

'சமூகத்தின் அடிநிலையில் இருந்து மேல் நோக்கிப் பார்த்தார். அதனால் மேலே இருந்தவர்களிடம் மற்றவர்கள் காணதவற்றையும், கண்டும் தமது படைப்புக்களில் காட்ட விரும்பாததை அவர் தமது இலக்கியங்களில் ஒளிவுமறைவின்றிச் சொல்லியிருப்பதுதான் கடுமையான விமர்சனங்களை இவர் எதிர் நோக்கக் காரணம்'

உரிமைகளை வென்றெடுக்கக் கூடியது: உரிமை மறுக்கப்பட்ட மக்கள் மட்டும் ஒன்றிணைந்து போராடுவதால் இப்போராட்டம் வெற்றி யடைந்துவிட முடியாது. முற்போக்கு எண்ணம் கொண்ட சமத்துவ சமுதாயமாகத் தமிழ்ச்சமூகம் மாற வேண்டு மென்ற நல்லிதயம் கொண்ட சகல மக்களையும் ஒன்றிணைப்பதன் மூலமே எமது போராட்டத்தை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்லமுடியும் என டானியல் முழுமையாக நம்பிக்கை வைத்துச் செயற்பட்டார். சாதியமும் அதற்கெதிரான போராட்டங்கள் சாத்வீகப் போராட்டங்களாகவும், தீவிரவாதப் போராட்டங் களாகவும் சமூகக் குறைபாடுகளை பெரிதும் களைந்து பொது இடங்களில் சமத்துவம் ஏற்பட வழிவகுத்துள்ளது.ஆயினும் இன்னமும் அரசியல் பிரதிநிதித்துவத்தில் பாரபட்சம் நிலவுகின்றது. இந்துமத வழிபாட்டுத்தலத்தில் இறைவன் சந்நிதானத்திலேயே சாதியம் கட்டிக்காக்கப்படு கின்றது. இத்தனை இன்னல்களை அழிவுகளை ஈழத்தமிழினம் கண்டு புலம்பெயர்ந்து அகதி வாழ்வுநிலையிலும் மனமாறாத நிலையில் மௌடீகங்களாக வாழ்கின்றனர். காதல், மண வினை என்று வரும்போது சாதியமே மேலோங்கி நிற்கிறது. புலம் பெயர்ந்த நாடுகளில் வெளிவரும் தமிழ் ஊடகங்கள் சில வற்றில் மணமக்கள் தகுதியாக சாதியே முன்நிலைப்படுத்தப்படுகின்றது. இந்த வியாதி தமிழ் மக்களை விட்டு என்று மறையுமோ?...

இதில் இன்னுமோர் வேடிக்கை என்னவெனில் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் ஈழத்தமிழர்களின் பிள்ளைகள் ஒரு வெள்ளை இனத்தவ ரையோ, கறுத்த இனத்தவரையோ அல்லது உலகிலுள்ள வேற்று இன, மத, மொழி பேசுபவர்களையோ காதலித்து திருமணம் செய்வதை ஏற்றுக் கொண்டு பெருமைகொள்ளும் தமிழினம், சொந்தச் சகோதர தமிழர்கள் பிள்ளைகளை தம்பிள்ளைகள் காதலிப்பதையோ, திருமணம் செய்வ தையோ ஏற்றுக்கொள்ள மறுக்கும் மடமையை என்னவென்று சொல்ல.

அங்கும் இந்த கருவை மையமாகக் கொண்டு டானியல் "முருங்கையிலைக் கஞ்சி" என்ற குறு நாவலைப் படைத்துள்ளார். அதில் உயர்சாதி வேளாள னாகக் காட்டப்பட்ட கதாநாயகன் கொழும்பில் சிங்களப் பெண்ணைக் காதலித்து திருமணம் செய்ததனை ஏற்றுக்கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து மகனையும் மருமகளையும் பார்க்கப் புறப்படும் கறுத்தக்கொழும்பான் மாம்பழம், பனங்கட்டி, நல்லெண்ணை, முருங்கைக்காய், இராசவள்ளிக் கிழங்கு சகிதம் கொழும்பு சென்று கொண்டாடி வருகிறார். மருமகள் ஒரு அசம்பாவிதத்தில் இறந்துவிட யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்த காலத்தில் தன்னுடன் வேலை செய்த ஒரு தாழ்ந்தசாதியென்று தமிழ்ச் சமூகம் கருதும் தமிழ்ப் பெண்ணை மகன் திருமணம் செய்து கொண்டான் என அறிந்து, அதனை ஏற்றுக்கொள்ள முடியாது மகன் இறந்துவிட்டான் என இறுதிக் கடன் கழிக்கும் வகையில் முருங்கையிலைக் கஞ்சி காய்ச்சி, உரிமைக்கஞ்சி குடித்து அவர் உறவை முடித்துக்கொள்கிறார். இத்தகைய தந்தையரும், தாய்களும் இன்றும் இருக்கின்றார்கள் என்பதுதான் வேதனைக்குரிய விடயம். இதனை இனிவரும் இளம் சமுதாயம் மாற்ற வேண்டும்.

கே.டானியல் சமூகமாற்றத்திற்காகவும், அடக்கி ஒடுக்கும் முறைகளுக்கெதி ராகவும் சாதியத்திற்காகவும் மட்டும் எழுதியவர் அல்ல. நகரநிர்வாகம் நத்தை வேகத்தில் நகர்வதையும், ஆளும் வர்க்கத்தின் சண்டையீனங்கள், ஊழல்கள் என்பவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டியதுடன், அவற்றைக் களைவதற்கான பணிகளும் பங்கும் மக்களுக்கு உண்டு என தமது எழுத்து களில் பதிவுசெய்தார். அதனை வெளிக் கொணர்ந்த அவரது குறுநாவல் மையக்குறி ஆகும்.

இதேபோன்றதொரு இன்னொரு படைப்பு டானியலின் இருளின் கதிர் என்ற குறுநாவல். சந்தர்ப்பவசத்தால் பாலியல் தொழிலாளியான ஒரு பெண்ணின் கதை இது. சாக்கடைபோலான அவள் வாழ்வு, சந்தண மல்லிகை வாடை என்றல்லவா அவளிடம் படையெடுத்த இளசுகளும், பெரிசுகளும் சொர்க்கபுரி சுகம் அனுபவித்தன. ஆண்களால் அவள் அழிந்தாளா? அல்லது அவளை நாடிச்சென்ற அத்தனை ஆண்களுக்கும் அவள் வாழ்வு வடிகாலாக அமைந்து அழிந்ததா? தன் வயிற்றுக்காகத் தன்னை நம்பிய வயிற்றுக்காக, சுயம் கொன்று பிழைக்க வேண்டிய எதார்த்த நிலை வாழ்வு அவள் வாழ்வு. இதனை படம் பிடித்துக் காட்டும் டானியல் கூறுகின்றார் " ஒரு காலத்தில் யாழ்ப்பாண எல்லையோடு வாழ்ந்ததாகக் கருதப்படும் ஒருத்தியின் கதை இது. சமூகத்தில் சாக்கடையாகக் கருதப் பட்ட அவளின் இருள்மயமான வாழ்வுக்கு நடுவே இருந்து தோன்றிய நெஞ்சக்கதிர்களை முதன்மைப்படுத்துதே இந்தக் கருவூலமாகும். படித்துப் பாருங்கள் முடிவில் அந்தக் கதிர்கள் உங்கள் நெஞ்சங்களையும் ஊடுருவ வில்லை என்றால் அதற்குப் பொறுப்பாளி அந்தப் பெண் அல்ல. நான் தான்- எனது பேனாதான். அந்தச் சித்தரிப்புத் தவறுதான்." என்ற இக்கூற்று அம்மாபெரும் எழுத்தாளனின் தன்னடக்கத்தினை காட்டியுள்ளது. இம்மூன்று நாவல்களையும் ஒரே தொகுப்பாகத் தொகுத்து வாரவெல்லை

வெளியீடு - 4 ஆக 1984ல் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் அவர் மனைவி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் வெளியிட்டு வைத்தனர். இந்த வெளியீட்டுடன் மட்டும் பேராசிரியர் குடும்பம் நின்று விடவில்லை. ஜப்பானிய பல்கலைக்கழகத்திலும் கே.டானியலின் படைப்புக்களை மொழிபெயர்க்கச் செய்வதிலும், ஆய்வுக்குட்படுத்துவதிலும் பெரிதும் முன்னின்று உழைத்தனர்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கே.டானியல் பற்றிக் குறிப்பிடுமிடத்து 'சமூகத்தின் அடிநிலையில் இருந்து மேல் நோக்கிப் பார்த்தார். அதனால் மேலே இருந்தவர்களிடம் மற்றவர்கள் காணதவற்றையும், கண்டும் தமது படைப்புக்களில் காட்ட விரும்பாததை அவர் தமது இலக்கியங்களில் ஒழிவுமறைவின்றிச் சொல்லியிருப்பதுதான் கடுமையான விமர்சனங்களை இவர் எதிர் நோக்கக் காரணம்" எனக் குறிப்பிடுகின்றார்.

எழுத்தாளர் தெணியான் அவர்கள் கே.டானியல் அவர்களின் எழுத்துக்கள் பற்றிக் கூறிய இடத்தில் 'பாலியல் சம்பந்தமான பிரச்சினைகளை டானியல் அவர்கள் ஒரு பக்கப் பார்வையோடு, அல்லது வஞ்சம் தீர்க்கும் நோக்கில் அணுகி இருக்கின்றார் என்பதும் அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு களில் ஒன்று. டானியல் அவர்கள் மற்ற எழுத்தாளர்கள் மறைத்த பல விடயங்களைத் தமது படைப்புக்கள் மூலம் வெளிக்கொண்டு வந்த ஒருவர். பொய்மையின்றி வாழ்வின் பல கோணங்களை இலக்கியங்களில் சித்தரித்துக் காட்டியவர். பாலியல் என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று. இந்த அடிப்படைத் தேவைகள் எவ்வாறு நிறைவு செய்யப்பட்டது என்பதையே அவரது படைப்புக்கள் வெளிச்சத் திற்கு கொண்டு வருகின்றன.

டானியலின் படைப்புக்களில் உயர்சாதியை சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்ளும் ஆண்கள், தாழ்த்தப்பட்ட சாதியென அவர்களே குறிப்பிடும் பெண்களைத் தமது பாலியல் இச்சைகளுக்கு ஆட்படுத்தினர் எனச் சுட்டிக் காட்டியுள்ளார். இது பற்றி எந்தப் பிரச்சினையும் எழவில்லை. ஆனால் உயர்சாதிப் பெண்கள் தாழ்ந்தசாதியெனக் குறிப்பிடும் கட்டழகான வாலிபர்களைத் தமது பாலியல் தேவைகளுக்கு பயன் படுத்தினார்கள் எனத் தமது நாவலில் சித்தரிப்பதே சிலருக்கு உறுத்தல்களை ஏற்படுத்தியள்ளது. பாலியல் என்று வரும்போது அது இனம், சாதி, மதம், மொழி, வயது அனைத்தையும் கடந்ததாகவும், இன்று ஆண், பெண் என்ற வேறுபாடு களையும் கடந்து திருப்தி கொள்ளும் உறவாகவும் உள்ளது. சாதியத் தடிப்பும் ஆணாதிக்க மனோபாவமுமே இவ்வாறு டானியலின் படைப்பு கள் மேல் குற்றம் சாட்டப்படுகிறது."

கே.டானியல் பஞ்சகோணங்கள் நாவலின் முன்னுரையில் "என்னுடைய பஞ்சமர் நாவல் வரிசையில் ஐந்தாவது படைப்பாக இந்த பஞ்சகோணங்கள் பிறந்திருக்கின்றது. 1972ம் ஆண்டில் பஞ்சமர் முதல் தொகுதி வெளிவந்த போது 'டானியலின் இலக்கியப் பணியில் இது ஒரு தற்கொலை முயற்சி" என மெத்தப் படித்தவர்கள் பலர் விமர்சனம் செய்தனர். ஆனால் பின் தள்ளப்பட்ட மக்களும், வஞ்சிக்கப்பட்ட மக்களும், நிதானமான புத்திஜீவி களும் வரவேற்றனர்" எனக் குறிப்பிடும் அவர் மேலும் அம்முனுரையில் 'என்மீது பழி சுமத்தும் இலக்கியக்காரார்களை நான் ஒன்று கேட்டேயாக வேண்டும். இலங்கையில் உள்ள தமிழர் கோரிக்கைகளுக்கும், இங்கு ஒடுக்கப்பட்ட மக்கள் பிரச்சினைகளுக்கும் இருக்கும் ஒட்டுறவு பற்றிய கணிப்பை எந்த அளவுகோலைக் கொண்டு முடிவெடுத்திருக்கிறீர்கள்? என்பதுதான்.

நிலம் பறிக்கப்படுகிறது, உயர்கல்வி வசதி மறுக்கப்படுகிறது, தமிழர் உயர் பதவிகள் ஒழிக்கப்படுகின்றன, அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுகின் றது. தமிழன் தீண்டத்தகாதவன் ஆக்கப்படுகின்றான் என்பவைகள் இங்குள் ளவர்களின் கூக்குரலாகும். இந்த மிலேச்சத்தனங்களை எதிர்த்து அதற் காகவே நாட்டுப்பிரிவினைனை கோரப்பட்டது. இங்குள்ள தாழ்த்தப்பட்ட வர்களும் , உயர்சாதியினர் என தமக்குத்தாமே முத்திரை குத்திக் கொண் டவர்களால் இதே ஐந்து மிலேச்சத்தனங்களுக்கும் உட்படுத்தப்பட்டனர் எனக் குறிப்பிடுகின்றார்."

ஒடுக்கப்பட்ட தொழிலாளர் விவசாய மக்களின் விடிவுக்காகவும், தாழ்த்தப் பட்டு உரிமை மறுக்கப்பட்ட மக்களின் ஜனநாயக உரிமைப் போராட்டத்தி லும், தமிழ் மக்களின் பிரதேச சுயநிர்ணய உரிமைக்காகவும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்கிளையில் அதன் ஆரம்ப காலம் முதல் இணைந்து வர்க்கபேதமற்ற, வகுப்புவாதமற்ற சமதர்ம இலங்கையை உரு வாக்க இலங்கை வாழ் சகல இனமக்களுடனும் இணைந்து தன் வாழ்நாள் முழுவதும் உழைத்து வந்தார். ஆயினும் உலக அரசியல் ஒழுங்கு மாற்றங் களும், கம்யூனிச முகாம்களில் ஏற்பட்ட சித்தாந்த முரண்பாடுகளாலும் இலங்கையில் கம்யூனிஸ்டுகள் மத்தியில் பிளவுகள் ஏற்பட்டன. அந்த நிலை யிலும் மார்க்சிய சித்தாந்தத்தில் இருந்து இம்மியும் வழுவாது டானியல் தொடர்ந்தும் தம்மை அப்போராட்ட வாழ்வுக்கே அர்ப்பணித்தார். உள்நாட் டில் குறுகிய அரசியல் இலாபத்திற்காக சிங்களக்கட்சிகளும், தமிழ்க் கட்சிகளும் இனவாத அரசியலைத்தூண்டி பாராளுமன்ற பிரதிநிதித்து வத்தைப் பெற முயன்றபோது இடதுசாரிகளும் தடம்புரண்டனர். ஆனால் டானியல் பாராளுமன்றப்பாதையைப் புறம்தள்ளி புரட்சிகரப் போராட்டங் கள் மூலம் மார்க்சிய கோட்பாட்டை நிலைநிறுத்தி மக்கள் ஆட்சியை ஏற்படுத்த முடியும் என இறுதிமூச்சுவரைத் தான் கொண்ட இலட்சியத்திற் காக, சமூகசமத்துவம் மலர உழைத்து வந்த உதயதாரகை ஆவார்.

★★★

# தொடர வேண்டியப் போராட்டம்

கலாநிதி.சி.சிவசேகரம்

**சாதி** முறை என்பது தென்னாசியாவுக்கே உரிய ஒரு சாபக்கேடு. இந்து தருமம் என்கிற பேரில் அதற்குத் தெய்வங்களின் ஆசி வழங்கப்பட்டுள்ளது. எனினும் சாதியம் என்பது இந்து மதங்களால் உருவாக்கப்பட்டதல்ல. அவற்றால் அது நியாயப்படுத்தப்பட்டது. ஏற்கனவே இருந்து வந்த சாதிமுறைகளுடன் ஆரிய வருணமுறை இணைந்தே இந்தியாவின் இறுக்கமான சாதியமைப்பு உருவாக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் வலுவானவை.

சாதிமுறை என்பது முழுத் துணைக் கண்டத்திலும் ஒரேவிதமான அதிகார அடுக்குகளைக் கொண்டதல்ல. ஒவ்வொரு தேசிய இனமும் பிரதேசமும் சிலசமயங்களில் ஊர்களும் தமக்கேயுரிய நடைமுறைகளைப் பேணி வந்துள்ளன. சமூகத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார மாற்றங்கள் காரண மாக சாதிப்படி அடுக்கில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சாதிகள் இணைந்துள்ளன. புதிய சாதிகள் உருவாகியுள்ளன. சாதிகளின் தொழில் அடையாளங்கள் மாறியுள்ளன.

இனக்கலப்பு பெருமளவில் நடைபெற்ற ஒரு துணைக்கண்டத்தில் சாதிக் கலப்பு பல்வேறு சூழ்நிலைகளிலும் பல்வேறு காரணங்களுக்காக நடைபெற்றிருப்பதை யாரும் மறுக்க இயலாது. என்றாலும் பொருளாதார மாற்றங்களால் ஏற்பட்ட சமூக மேல்நிலையாக்கங்களும் இனக்கலப்பும் சாதிக் கலப்பும் சாதிமுறையை ஏற்காத மதங்களின் தோற்றமும் வருகையும் சாதியத்தை முறியடிக்கவில்லை.

பௌத்தமும் அதற்கு முன்னரே சமணமும் சாதியத்துடன் சமரசம் செய்து கொண்டன. அவற்றின் நிலைப்பிற்கு எப்போது அவை நிலவுடமை அரசுகளது துணையை நாடினவோ அப்போதே அத்தகைய சமரசம் அவசியமாகிவிட்டது. கிறிஸ்துவத்தின் பல்வேறு கிளைகளும் சீக்கிய மதமுங்கூடச் சாதி முறையை உள்வாங்கியே தம்மை நிலைநிறுத்திக் கொண்டன. இஸ்லாம் மட்டுமே சாதியத்துடன் சமரசம் செய்யாமல் மதமாற்றத்தை மேற்கொண்டது. எனினும் முஸ்லீம்களிடையிலும் சாதிப்பாகுபாடு முற்றாக ஒழிந்துவிடவில்லை. எவ்வாறாயினும் மற்ற மதங்களினுள்ளே இருக்குமளவுக்குச் சாதிப்பாகுபாடு முஸ்லீம்களிடையே தீவிரமாக இல்லை. எவ்வாறாயினும் மதத்தின் பேரால் சாதியத்தை நியாயப்படுத்தும் வாய்ப்பு இந்து மதங்களிடை மட்டுமே உள்ளது.

சாதிமுறையை நிராகரித்துக் கர்நாடகத்தில் உருவான வீரசைவம் பல்வேறு சாதிப்பிரிவினரையும் உள்வாங்கியது. தம்மை இந்துக்கள் என்றழைப்பதை லிங்காயத்துகள் எனப்படும் வீரசைவர் இன்றுவரை மறுத்துவந்துள்ளனர். எனினும் இன்று லிங்காயத்துகள் ஒரு தனியான சமூகமாக ஏறத்தாழ ஒரு சாதியைப் போல ஆகியுள்ளனர்.

இந்துமதங்களுக்குள் சாதியத்தை முறியடிக்கிற தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ராமானுஜர் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குப் பூணூல் அணிவித்து வைணவர்களாக்கி அவர்கள் எல்லோரும் பிராமணர் என்று பிரகடனஞ் செய்தார்.அதைவிடத் தீவிரமான ஒரு செயல் பக்தி இயக்கத்தின் போது தமிழ்நாட்டில் நடந்ததில்லை. எனினும் இந்து என்ற அடையாளத்தை ஏற்ற எந்த மதத்தாலும் சாதிமுறை என்ற மதிலைத் தாண்ட இயலவில்லை.

சாதியத்திற்குள்ள மத அங்கீகாரத்துக்கும் மேலாக சாதிமுறை துணைக்கண்டத்தின் வர்க்க அமைப்புடனும் உற்பத்திமுறையுடனும் உற்பத்தி உறவுகளுடனும் நெருக்கமாகப் பின்னிப்பிணைந்து இருந்ததாலே அது மொழி மதம் என்கிற சமூக அடையாளங்கட்குச் சமாந்தரமாகவும் சிலசமயங்களில் அவற்றைவிட வலுவாகவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. அகமணமுறை அதனை மேலும் உறுதிப்படுத்தியது.

ஆணையே குடும்ப முதல்வனாகக் கொண்ட ஒரு சமுதாயச் சூழலில் கலப்புத்திருமணங்கள் பெண்ணின் சாதி அடையாளத்தை ஆணின் அடையாளமாக மாற்றுவதே வழமையாகயிருந்தபோதும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை உயர்நிலைச் சாதி ஆண் மணந்தால் ஆண் தனது சாதியிலிருந்து நீக்கப்படுவதுமுண்டு. இது இரு சாதிக்ளிடையே பெரும் ஏற்றத்தாழ்வு உள்ளபோது ஏற்படக்கூடியது. சாதிகள் வெவ்வேறு சமூகங்களாக இருந்து வந்துள்ள ஒரு சூழலில் கலப்புத்திருமணங்கள் சாதிகளின் கலப்பாவதற்கு வாய்ப்பிருக்கவில்லை.



இந்தியத் துணைக்கண்டத்திற் கொலனி ஆட்சி சாதியத்தை மேலும் இறுக்கமாக்கியதே ஒழிய நெகிழ்விக்கவோ இல்லாதொழிக்கவோ எதுவுஞ் செய்யவில்லை. எவ்வாறாயினும் நவீன உற்பத்தி முறைகளின் வரவும் தொழிலாளி வர்க்கத்தின் உருவாக்கமும் நகரங்களின் பெருக்கமும் சாதிக் கலப்புக்கும் சாதி ஏற்றத்தாழ்வுகளின் நீக்கத்திற்கும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கின. சாதிப்பாகுபாடுகட்கும் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கட்கும் இப்புதிய சூழல் வாய்ப்புக்களை ஏற்படுத்தியது.

**இந்தியத் துணைக்கண்டத்திற் கொலனி ஆட்சி சாதியத்தை மேலும் இறுக்கமாக்கியதே ஒழிய நெகிழ்விக்கவோ இல்லாதொழிக்கவோ எதுவுஞ் செய்யவில்லை.**

பல போராட்டங்கள் வெற்றிபெற்றுள்ளன. எனினும் சாதிமுறையை இன்னமுந் தகர்க்க இயலவில்லை.

நகரங்களின் பொது இடங்களிற் தீண்டாமையை கடைப்பிடிப்பது மேலும் இயலாமலாகி வருகிறது. பொது இடங்களிற் சாதித்துவேஷம் பாராட்டுவது பல இடங்களிற் சட்டப்படியும் சமூகத்தினுள்ளும் ஏற்கப்படாததாகியுள்ளது. அனைத்திலும் முக்கியமாகத் தாழ்த்தப்பட்ட சாதியினர் தங்கள் உரிமைக்காகப் போராடவும் அஞ்சாது துணிந்து பேசவும் முடிகிறது. இவற்றில் எதுவுமே தாமாக நிகழ்ந்தவையல்ல. பலவாறான போராட்டங்கள் மூலமே ஒவ்வொன்றும் வெல்லப்பட்டுள்ளது.

அத்தனை வெற்றிகட்குப் பிறகும் தாழ்த்தப்பட்ட சாதியினரது குடியிருப்புகள் தீ மூட்டப்படுகின்றன. கலப்புத்திருமணத்திற்கு தண்டனையாகவும் கல்வி கற்று உயர்பதவி பெற்றதற்காகவும் முழுக்குடும்பங்கள் கொல்லப்பட்டுள்ளன. ஊராட்சிகட்குத் தெரிவு செய்யப்பட்டோர் பதவி ஏற்கவியலாதவிதமாகப் பலவித வன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் கவனிக்கத்தக்கது ஏதெனில் நாம் அறியவருகிற வன்முறைகளிற் பெரும்பகுதி சாதியமைப்பின் உச்சங்கிளையில் அமைந்திருக்கும் பார்ப்பனர்களோ அவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ள உயர்சாதியினரோ செய்வன அல்ல. ஒப்பிடுகையிற் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களே தமக்குக் கீழுள்ள தாழ்த்தப்பட்ட சாதியினர் மீது வன்முறையைப் பிரயோகிக்கின்றனர். இது ஏன்?

அதுமட்டுமன்றி குஜராத்தில் நடந்த வன்முறையிற் தாழ்த்தப்பட்ட சாதியினரும் பழங்குடியினருமே முஸ்லீம்கட்கு எதிரான வன்முறையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதைப்பற்றிப் பேசப் பலர் தயங்குகின்றனர. குஜராத்தின் முதல்வரான இந்துத்துவ பாசிசவாதி நரேந்திர மோடி உயர்சாதியினரல்ல. ஆனால் பார்ப்பனிய இந்துத்துவ நிறுவனமான பாரதிய ஜனதா கட்சியின் தூணாக இருக்கிறார்.



எனவே சாதிமுறையையும் சாதியத்தையும் சமூகத்தில் அவை ஆழ வேரூன்றியுள்ளமையையும் மிகையாக எளிமைப்படுத்துவது தவறான முடிவுகட்கே இட்டுச்செல்லும்.

ஒரு குறிப்பிட்டவகையான கொடுமைக்கு உட்பட்ட எந்தவொரு சமூகமோ சமூகப் பிரிவோ அந்தக் கொடுமைக்கும் அதையொத்த கொடுமைகட்கும் எதிராக ஒன்று திரண்டுப் போராடுவது சரியானது. கொடுமையின் அடிப்படை எதுவோ அதற்கு எதிரான போராட்டமும் அந்த அடிப்படையிலேயே அமையும். அது சரியானது. ஆனால் ஒவ்வொரு வகையான கொடுமைக்கு எதிரான போராட்டமும் தன்னை நீதிக்கான பிற போராட்டங்களினின்று தனிமைப்படுத்துவது தவறானதும் தன்னையும் பிற போராட்டங்களையும் பலவீனப்படுத்தக் கூடியதுமாகும். இதையே பின்நவீனத்துவம் என்ற பேரில் ஏகாதிபத்தியவாதிகள் தமது என்.ஜீ.ஓ. முகவர்களூடாக ஒவ்வொரு மூன்றாம் மண்டல நாட்டிலுஞ் செய்து வருகிறார்கள்.

**வர்க்கப்பரிமாணத்தை விலக்கிவிடும்போது முரண்பாடுகள் இனங்களிடையிலான பகைமையாகவும் மதங்களிடையிலான பகைமையாகவும் வெவ்வேறு நிறத்தவரிடையிலான பகைமையாகவும் உருப்பெறுகின்றன**

தேசிய இனப் பிரச்சினையிலிருந்தோ மத அடிப்படையிலான ஒடுக்குமுறையிலிருந்தோ நிறவாதத்திலிருந்தோ வர்க்கப்பரிமாணத்தை விலக்கிவிடும்போது முரண்பாடுகள் இனங்களிடையிலான பகைமையாகவும் மதங்களிடையிலான பகைமையாகவும் வெவ்வேறு நிறத்தவரிடையிலான பகைமையாகவும் உருப்பெறுகின்றன. இவ்வாறான முரண்பாடுகளால் ஒடுக்கப்பட்ட மக்கள் பிளவுபடுகின்றனர்.

ஒடுக்குமுறைக்கான வசதியாக இன மத நிற வேறுபாடுகள் உள்ளனவே ஒழிய அவையே ஒடுக்குமுறையின் அடிப்படைகளல்ல. எனவேதான் சமூக நீதிக்கான போராட்டத்தில் ஒடுக்குகிற தேசிய இனம் மதம் நிறம் என்ற அடையாளங்களைக் கொண்ட சமூகப்பிரிவினர் எல்லாருமே ஒடுக்குமுறைக்கு உடன்பாடானவர்களல்லர். அதைவிடவும் அவரகள் நடுவிலிருந்து ஒடுக்கப்பட்டோருக்காகக் குரல் கொடுப்போர் மட்டுமல்லாது ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களின் முன்வரிசையில் நின்றோரும் வந்துள்ளனர்.அதே வேளை ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்குள்ளே ஒடுக்குமுறையை ஏற்போர் மட்டுமன்றி அதை வலிந்து நியாயப்படுத்துவோர்கூட இருந்துள்ளனர். ஒடுக்கப்பட்ட மக்களிற் பெரும்பாலானவர்கள் தமது ஒடுக்கப்பட்ட நிலை பற்றி போதிய தெளிவுடனும் விடுதலைப் போராட்ட உணர்வுடனும் இல்லை என்பது வருந்தத்தக்க உண்மை. ஆனால் அது மாற்றவியலாத ஒரு நிலையல்ல.

எனினும் போராட்டங்களைத் தனி மைப்படுத்தி நோக்குவதும் ஒரு முழு மையின் பகுதியாக விளங்கிக் கொள்ள மறுப்பதும் எவ்வகையிலும் ஒடுக்கப் பட்ட மக்களை ஒன்றுபடுத்தவோ அவர்களது போராட்டங்களை வலுப் படுத்தவோ உதவப்போவதில்லை.

தமிழ்நாட்டில் சாதியத்திற்கெதிரான போராட்டங்களை நீண்டகாலமாக இடதுசாரிகள் முன்னெடுத்து வந்துள் ளனர். வர்க்கச் சுரண்டலும் சாதிக் கொடுமையும் இணைந்த கிராமச் சூழல்களில் எத்தனையோ போராட் டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இன்றுங்கூடச் சாதியத்திற்கு எதிரான போராட்டங்களில் இடதுசாரிகளின் பங்கு முதன்மையானது. ஆயினும் எத்தகைய இடதுசாரிகள் என்ற கேள்வி எழுகிறது. தமது சாதி அடையாளங்கட் கும் மேலாக உயர்ந்து சமூகநீதி என்ற நிலைப்பாட்டில் நோக்குகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சந்தர்ப்பவாத அரசியலிற் சிக்குண்டு போகிறபோது அவர்களால் தங்கள் நியாய உணர்வை அதன் தர்க்கரீதி யான எல்லைவரை கொண்டுசெல்ல முடியாமற் போகிறது. இவ்வாறான தவறுகள் ஒரு போராட்டத்தின் போக் கால் மட்டுமே திருத்தக் கூடியவை. ஈ.வெ.ரா. அவர்களது சாதிய விரோத நிலைப்பாட்டிற் குறைபாடுகள் இருந்தி ருக்கலாம். ஆனால் சாதிமுறையை மனமார வெறுத்து நிராகரித்தவர். அவருக்குப் பின்னால் வந்த திராவிட இயக்கத்தை அவருடைய பாதையிற் போக இயலாமற் தடுத்தவற்றுள் அதிகார மோகம் பிடித்த சந்தர்ப்பவாத அரசியற் தலைமைகள் முக்கியமானவை.

சாதியத்திற்கெதிரான போராட்டத்தை அதனால் பாதிக்கப்பட்டவர்களே முன் னெடுக்க வேண்டும் என்ற பார்வை தவறான கண்ணோட்டத்துடன் முன் னெடுக்கப்பட்டதனால் இரண்டு முக்கி யமான இழப்புகள் நேர்ந்தன. ஒன்று சாதியத்தாற் பெரிதும் பாதிக்கப்படாது இருந்தபோதும் அதைத் தவறானது என்று உணர்ந்து போராட முற்பட்டவர் களை ஒதுக்கியும் வலிந்து பகைத்தும் சிலர் நடந்து கொண்டதனாற் போராட் டம் பல நேச சக்திகளை இழந்தது. இரண்டாவது சாதியப் பிரச்சினையைத் தலித்துகள் எனப்பட்ட தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் பிறருக்கும் இடையி லான மோதலாக நோக்குகிற போக்கு சாதியத்திற்கு எதிரான ஒரு பொதுவான போராட்டத்தை அடையாளங் காண இயலாமற் தடுத்தது. இவற்றை ஒத்த தவறுகள் ஒவ்வொரு வகையான விடு தலைப் போராட்டத்திலும்

**ஒடுக்கப்பட்ட மக்களிற் பெரும்பாலனவர்கள் தமது ஒடுக்கப்பட்ட நிலை பற்றிப் போதிய தெளிவுடனும் விடுதலைப் போராட்ட உணர்வுடனும் இல்லை என்பது வருந்தத்தக்க உண்மை. ஆனால் அது மாற்ற இயலாத ஒரு நிலை அல்ல.**



நேர்ந்துள்ளன. மார்க்சிய லெனினிய வாதிகள் அவற்றை பற்றி ஒவ்வொரு தருணத்திலும் எச்சரித்துள்ளதோடு அவற்றைத் தவிர்க்கவும் திருத்தவும் உதவியுள்ளனர். இலங்கையில் நடந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக் கமே அவ்விடயத்தில் மிக முக்கிய முன் னுதாரணமாகும். அப்போராட்டத்தின் போது தாழ்த்தப்பட்ட சாதியினராயி ருந்து சிறிது சமூக மேம்பாடு கண்ட சிலர் சாதி மேலாதிக்கம் பேணிய தமிழரசுக் கட்சி போன்றவற்றுடன் சேர்ந்து போராட்டத்தை நிராகரித்ததை யும் அறிவோம். அதேவேளை உயர் சாதியினர் எனப்பட்டவர்களிற் கணிச மானோர் போராட்டத்திற் பல்வேறு தளங்களிலும் பங்கேற்றுள்ளனர்.

தலித்தியம் என்ற பேரிற் தமிழ்நாட்டில் முன்னெடுக்கப்பட்ட இயக்கம் தாழ்த்தப் பட்ட சாதியினரை ஒன்றுபடுத்தத் தவறி யது ஏன்? வர்க்கப் போராட்டத்தை எதிர்த்து, வர்க்க அடையாளத்தை ஏற் பது தலித் அடையாளத்தை மறுக்கும் என்று சிலர் தொடர்ந்து வாதித்து வருவது ஏன்? தமிழகத்தின் சாதிக்கட்சி கள் தாழ்த்தப்பட்ட மக்களிடையே உரு வாகக் காரணம் என்ன? தலித்தி யத்தை என்.ஜீ.ஓக்கள் ஊக்குவிப்பது ஏன்? இவ்வாறான பல கேள்விகள் நம்மை எதிர்நோக்குகின்றன.

வெறுங்கோஷங்களாலும் தனிப்பட்ட அவதூறுகளாலும் நேர்மையற்ற வாதங்களாலும் உண்மைகளை மூடி மறைப்பது என்றென்றைக்கும் இயலு மானதல்ல. தமிழ்த் தேசியவாதிகளும் நடுத்தரவர்க்கப் பெண்ணிய வாதிகளும் மார்க்சியத்தை எதிர்க்கப் பயன்படுத்திய அணுகுமுறைகளை தலித்தியவாதிகள் பயன்படுத்துவதைக் காண்கிறோம். அவற்றின் விளைவு களையும் அறிவோம். எனவேதான் தேசிய ஒடுக்குமுறை என்பதோ பால் அடிப்படையிலான ஒடுக்குமுறை என்பதோ குறிப்பிட்ட ஒரு இனத்திற்கும் குறிப்பிட்ட வர்க்கப்பிரிவு ஒன்றுக்கும் வரையறுக்கக்கூடியதல்ல.

எவ்வாறு பாட்டாளிவர்க்க அணுகு முறை தன்னை வர்க்கப்போராட்டம் என்ற பேரில் தேசியஇனம் பால் சாதி என்கிற அடிப்படையிலான போராட் டங்களின்று விலக்கிக்கொள்ள இய லாதோ அவ்வாறே சாதி ஒடுக்கு முறைக்கு எதிரானப் போராட்டமும் தன்னைத் தனிமைப்படுத்தாது தனது தளத்தை விரிவுபடுத்த வேண்டும்.

பல தனிமனிதர்களும் சில சாதிப்பிரிவு களும் தங்களது சமூகமேம்பாட்டுடன் சாதியத்திற்கெதிரான போராட்டத்தை மறந்துவிடுகின்றனர். சாதியமைப்பும் சாதியமும் முழு சமூகத்தையும் பீடித் துள்ள ஒரு நோய். அதற்கெதிரான போராட்டம் பல்வேறு தளங்களிலும் தளராது முன்னெடுக்கப்பட வேண்டும். குறுகிய நோக்கங்களும் சுயலாபத்துக் கான இலக்குகளும் நிராகரிக்கப்பட்டுப் பரந்துபட்ட அளவிலான மானிட விடு தலைப் போராட்டத்தில் சாதியத்திற்கும் சாதிமுறைக்கும் எதிரான போராட்டம் ஒரு முக்கிய பங்கு வகிக்க இயலும் அதற்கான வழிமுறைகளை நாம் தேட வேண்டும்

***

# 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியின்
# வரலாற்று முக்கியத்துவம்

**தமிழ்த் தேசியவாத வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்யும் எந்த ஒருவரும்கூட ஒக்ரோபர் 21 எழுச்சியின் தாக்கம் பற்றியோ அதன் முக்கியத்துவம் பற்றியோ எடுத்துக் கூறுவதில்லை. ஏனெனில் மேட்டுக்குடி உயர்வர்க்க உயர் சாதிய அறிஞர்கள் ஆய்வாளர்கள் எனப்பட்டவர்களே இப்போதும் ஆதிக்க கருத்துப் பரப்புரையாளர்களாக இருந்தும் வருகிறார்கள்...**

**சி.கா.செந்திவேல்**

வரலாற்று நிகழ்வுகள் அவ்வப்போது வரலாற்றின் பக்கங்களில் பதிவாகிக் கொள்கின்றபோது அவற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் மட்டுமே வரலாற்று முக்கியத்துவம் பெறுவதுடன் வரலாற்றுத் திருப்புமுனைகளையும் தோற்றுவித்துக் கொள்கின்றன. அவை தனியே வெற்றிகரமானவைகளாக மட்டுமன்றி தோல்விகளைத் தழுவியவைகள் கூட வரலாற்று முக்கியத்துவம் கொண்டவைகளாகின்றன. அவற்றின் அனுபவங்கள் பட்டறிவுகள் வரலாற்றின் வளர்ச்சிப்போக்கிற்கு பங்களிக்கின்றன. அவற்றினூடே வரலாற்று வளர்ச்சிப் போக்கானது தனக்குச் சாதகமானவற்றை உள்வாங்கியும் பாதகமானவற்றை நிராகரித்தும் கொள்கிறது. இதனை வரலாற்றுணர்வோடு அணுகும் எவரும் எந்தவொரு நிகழ்விலும் கண்டு கொள்ள முடியும்.

அந்தவகையில் இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் முக்கியத்துவம் கொண்டதும் மிகப்பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியதுமான வரலாற்று நிகழ்வாகவே 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சி அமைந்து கொண்டது.



இரண்டாயிரம் ஆண்டுகாலப் பழைமையானதும் மனித சமத்துவத்தை மறுத்த அமைப்பாகவும் கொடுமையானதாகவும் நீடித்து வந்த சாதியத்தின் மீது பெரும் தாக்குதலை அவ்வெழுச்சி தொடுத்து நின்றது. ஆனால் அவ்வெழுச்சியை ஒரு கனதிமிக்க வரலாற்று நிகழ்வாகவோ அன்றித் தமிழர்களின் சமூக வாழ்வில் இடம்பெற்ற பெரும் திருப்புமுனையாகவோ ஏற்றுக் கொள்ளாத ஒருநிலையே தமிழ்த் தேசியவாதப் பரப்பில் இன்றுவரை காணப்படுகிறது. தமிழ்த் தேசியவாத வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்யும் எந்த ஒருவரும்கூட ஒக்ரோபர் 21 எழுச்சியின் தாக்கம் பற்றியோ அதன் முக்கியத்துவம் பற்றியோ எடுத்துக் கூறுவதில்லை. ஏனெனில் மேட்டுக்குடி உயர்வர்க்க உயர் சாதிய அறிஞர்கள் ஆய்வாளர்கள் எனப்பட்டவர்களே இப்போதும் ஆதிக்க கருத்துப் பரப்புரையாளர்களாக இருந்தும் வருகிறார்கள். இத்தகைய போக்கு இன்று மட்டுமன்றி வரலாறு முழுவதும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிகளும் போராட்டங்களும் மறைக்கப்பட்டும் அல்லது திரிக்கப்பட்டும் வந்தனவற்றின் தொடர்ச்சியேயாகும். அந்தவகையில் தான் 1966ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் மீண்டும் மீண்டும் பேசவேண்டியுள்ளது. அதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் புதிய தலைமுறையினருக்கு அந்நிகழ்வின் வரலாற்று முக்கியத்துவத்தை எடுத்துக் கூறும் கடமையும் உண்டு.

1966ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சிக்குத் திட்டமிட்டு நாள் குறித்துக் கொண்டது சீனசார்பு எனப் பத்திரிகைகளால் சுட்டப்பட்ட புரட்சிகர கம்யுனிஸ்ட் கட்சியேயாகும். அன்றைய பழைய கம்யுனிஸ்ட் கட்சியில் இருந்து மார்க்சிச லெனினிசப் புரட்சிகரக் கட்சியாக பிளவடைந்து 1964இல் தோற்றம் பெற்றதே மேற்படி கட்சியாகும். தோழர் நா.சண்முகதாசன் மற்றும் சிங்களத் தோழர்கள் தலைமையில் புரட்சிகர வேகத்துடன் வடக்கு கிழக்கு தெற்கு மலையகத்தில் தொழிலாளர்கள் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் அக்கட்சி அரசியல் ,தொழிற்சங்க வேலைகளில் ஈடுபட்டு வந்தது. அதன் காரணமாக அக்கட்சியில் உழைக்கும் மக்கள தாழ்த்தப்பட்ட மக்கள் பெருந்தொகையில் அணிதிரள ஆரம்பித்தனர். குறிப்பாக இளைஞர், யுவதிகள் புரட்சிகரமானவரகளாகிக் கொண்டனர். அத்தகைய இளைஞர்களில் ஒருவனாகவே நானும் 1964இல் இப்புரட்சிக் கட்சியில் இணைந்து கொண்டேன் என்பதும் குறிப்பிட வேண்டியதாகும்.


அன்றைய யாழ் குடாநாட்டு சமூகநிலையில் சாதிய முரண்பாடு கூர்மையடைந்து வந்ததுடன் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சாதிய தீண்டாமை ஒடுக்குமுறைகள் அதிகரித்தும் வந்தது. அவ்வாறான சூழலிலேயே சாதிய தீண்டாமைக்கு எதிராக மக்கள் போராட்டத்திற்கான அறைகூவல்

விடுப்பதற்கு புரட்சிகர கம்யுனிஸ்ட் கட்சி முடிவெடுத்து அதன் பொறுப்பை கட்சியின் வடபிரதேசக் கட்சிக்குழுவிடம் ஒப்படைத்தது. அதன் அடிப்படை யிலேயே கட்சியானது 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21ந் திகதியைக் குறித்து சுன்னாகம் சந்தை மைதானத்திலிருந்து ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை காங்கேசன்துறை வீதிவழியாக யாழ்நகர் நோக்கி நடாத்தி யாழ் முற்றவெளி யில் பகிரங்கக் கூட்டத்தை நடாத்தவும் தீரமானித்தது. கட்சியும் அதன் கீழான வாலிபர் இயக்கம் தொழிற்சங்க விவசாய சங்கங்கள் இதற்கான தயாரிப்பில் இறங்கின. பொதுச்செயலாளராக இருந்த தோழர் சண்முகதாசன் உட்பட வேறு சிங்களத் தோழர்களும் கொழும்பிலிருந்து வந்திருந்தனர். யாழ் முற்ற வெளிக் கூட்டத்திற்கு ஒலிபெருக்கி அனுமதி கொடுத்த பொலிசார சுன்னாகத் திலிருந்து ஊரவலம் செல்வதற்கு அனுமதி மறுத்திருந்தனர். இந்த அனுமதி மறுப்பிற்குப் பின்னால் சாதிய ஆதிக்க சக்திகள் இருந்தன. அவ்வேளை ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழரசு - காங்கிரஸ் கட்சிகள் இணைந்து அரசாங்கத்தில் அமைச்சர் பதவி பெற்றும் இருந்ததனர்.

இருப்பினும் குறித்த நாளன்று பிற்பகல் 4.00 மணியளவில் சுன்னாகம் சந்தை மைதானத்தில் கட்சி வாலிபர் இயக்க தொழிற்சங்க விவசாய சங்க உறுப்பினர் கள் ஆதரவாளர்கள் சாதியத்தை விரும்பாத நல்லெண்ணம் கொண்டோர் என மக்கள் திரண்டனர். இறுதிநேரத்தில்கூட பொலிஸ் அதிகாரிகளுடன் பேசி யும் அனுமதி மறுக்கப்பட்டது. ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பொலிஸ் தடையை மீறி ஊரவலம் செல்லத் தயாராக இருந்ததனர். அதற்கு தலைமை தாங்க கட்சியின் தலைவர்கள் புரட்சிகர தலைமைத்துவ உணர்வுடன் முன் வந்ததனர். சுமார 5.00 மணியளவில் சுன்னாகம் கந்தரோடை வீதியின் சந்தை மைதானப் பகுதியிலிருந்து விண்ணதிரும் முழக்கங்களுடன் புரட்சிகர ஊர் வலம் யாழ்நகர் நோக்கிப் புறப்பட்டது. ``சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும் என எழுதப்பட்ட செம்பதாகை உயர்த்தி முன்னே எடுத்துச் செல்ல அதன்கீழ் கட்சியின் தலைவர்கள் கம்பீரமாக தலைமை தாங்கி முழக்கமிட்டு முன் சென்றதனர். ஊர்வலத்திதனர் சாதியத்திற்கு எதிரா னதும் தீண்டாமையையும் எதிர்த்து வெவ்வேறான புரட்சிகர முழக்கங்களை முழங்கி உணர்வும் உத்வேகத்துடன் முன்சென்றனர். அன்றைய ஊர்வலத் தின் முன்னே தோழர்கள் கே.ஏ.சுப்பிரமணியம், வீ.ஏ.கந்தசாமி, டாக்டர் சு.வே.சீனிவாசகம், கே.டானியல், இ.கா.சூடாமணி, டி.டி.பெரேரா, மு.முத்தையா, எஸ்.ரி.என்.நாகரத்தினம் ஆகியோர் சென்றனர். அதற்கு அடுத்ததாக வாலிப இயக்கத்தைச் சேர்ந்த தோழர்கள் விவசாயசங்கத் தோழர் கள் இளைஞர்கள் அணியாக முழக்கம் இட்டுச் சென்றனர்.

அன்று சாதியத் திற்கு எதிராக சுன்னாகத்தில் எழுந்த புரட்சிகர ஆர்ப்பாட்ட





முழக்கங்கள் வட பிரதேசத்தில் கட்டிறுக்கத் துடன் இருந்து வந்த சாதியக் கோட்டை மீது எதிரொலித்தன. அதுமட்டுமன்றி எதிர்வரப் போகும் புரட்சிகரப் போராட்டப் புயலுக் கான முன்னறிவிப்பாகவும் அமைந்திருந் தது. அத்தகைய உறுதியும் உணர்வும் உத் வேகமும் கொண்ட ஊர்வலம் சுன்னாகம் பிரதான வீதியில் அமைந்திருந்த பொலிஸ் நிலையத்தை அண்மித்தபோது ஏற்கனவே அணிவகுத்து வீதிக்கு குறுக்கே நின்ற பொலிஸ் படை ஊர்வலத்தின் மீது பாய்ந் தது. காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் உயரர்திகாரி தலைமையிலான பொலிசார் மிக மோசமான குண்டாந்தடி பிரயோகத் தையும் துப்பாக்கிப்பிடிகளிலான தாக்குதல் களையும் நடத்திதனர். அவர்கள் மத்தியில் சாதிவெறியுடைய தமிழ்ப் பொலிஸ் அதிகாரிகளும் பொலிசாரும் அதிகமாக இருந்தனர். அவ்வாறு அடிகள் வீழ்வதை உற்சாகப்படுத்திய சில சாதிவெறியர்களும் சம்பவ இடத்தில் இருந்தனர். முன் தயாரிப்போடும் உள்நோக்கத்தோடும் அவ்வூர்வலத்தின் மீதான பொலிஸ் தாக்குதல் அமைந்திருந்தது என்பதை பின்பான தகவல்கள் மூலம் அறிய முடிந்தது. ஆளும் வர்க்கமும் அதன் பாதுகாவலனான அரசு இயந்திரத் தினது ஒருபகுதியான பொலிசும் அடக்கப்படும் மக்களை எவ்வாறு நடாத் தும் என்பதை தாழ்த்தப்பட்ட மக்கள் நேரடியாகவே கண்டு கொண்டனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையம் முன்பாக சாதியை தீண்டாமையை எதிர்த்த ஊர்வலத்தின் கட்சித்தலைவர்களிள் தோழர்களின் தலைகளில் இருந்து இரத்தம் வழிந்தோடியது. தோழர்கள் கே.ஏ.சுப்பிரமணியம் வி.ஏ.கந்தசாமி இ.கா.சூடாமணி ஆகியோர் இரத்தம் சொட்டச்சொட்ட மேல்சட்டைகள் கிழிக்கப்பட்ட நிலையில் பொலிஸ் நிலையத்திற்கு இழுத்துச் செல்லபட்ட னர். அடிகாயங்கள் பட்ட நிலையிலும் கட்சி வாலிப இயக்கத் தோழர்கள் சிதறி பின்வாங்கி ஓடவில்லை. நானும் என்னைப் போன்ற இளம் தோழர் களும் கம்யுனிஸ்டாகிய பின் முதன்முதல் பொலிஸ் அடியும் காயமும் பெற்றுக் கொண்டமை அதுவாகவே இருந்தது. அப்போது எனக்கு வயது 23. அவ்வேளை நான் கட்சியின் முழுநேர ஊழியனாகிய ஆரம்ப வருடத்தில் வாலிபர் இயக்கத்தில் செயலாற்றிக் கொண்டிருந்தேன். அந்த அடியும்

வலியும் எமக்கு புரட்சிகர உணரவையும் மனவுறுதியையும் தந்துகொண்டது. நாங்கள் தொடர்ந்து ஊர்வலமாக யாழ் நகர் நோக்கிச் செல்வதை வற்புறுத்தினோம். பொலிஸ் அதிகாரிகள் கலைந்து செல்லும்படி கூறினர். அதனை மறுத்த கட்சி வாலிப இயக்கத் தோழர்கள் அதிகாரிகளுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மீண்டும் ஒரு தாக்குதலுக்கு பொலிசார் தயாராகினர். ஆனால் ஊர்வலம் செல்வதில் காட்டப்பட்ட மனவுறுதிக்கு முன்னால் பொலிசார் இறங்கிவர வேண்டியதாகவே இருந்தது. முழக்கங்கள் இடாது யாழ்நகர் நோக்கிச் செல்ல அனுமதித்ததுடன் அதனை கண்காணிக்கவென பெருமளவு பொலிஸ் படையும் முன்னுக்கும் பின்னுக்கும் பொலிஸ் வாகனங்களில் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட தூரம் சென்றதும் ஊர்வலத்தின் எண்ணிக்கை இரட்டை மடங்காகியது. யாழ்நகரை அண்மித்ததும் முழக்கங்களை ஊர்வலத்தில் வந்த மக்கள் இடத்தொடங்கினர். பொலிசாரால் அதனை தடுக்க முடியவில்லை. யாழ் முற்றவெளியில் கொட்டும் மழையிலும் பெருந்தொகையான மக்கள் திரண்டு கொண்டிருக்க பொதுக்கூட்டம் தோழர் டாக்டர்.சு.வே.சீனிவாசகம் தலைமையில் நடைபெற்றது. தோழர் சண்முகதாசன் கே.டானியல் சி.கா.செந்திவேல் ஆகியோர் உரையாற்றினர். தடுத்து வைக்கப்பட்ட மூன்று தோழர்களிடம் வாக்குமூலம் பெற்று வழக்குத் தொடர ஏற்பாடு செய்த சுன்னாகம் பொலிஸ் இரவு பத்து மணிக்குப் பின்னே அவர்களை விடுவித்தனர். அன்றைய கூட்டத்தில் தோழர் சண் சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிராகப் போராட தாழ்த்தப்பட்ட மக்கள் முன்வரவேண்டும் என்ற அறைகூவலை கட்சியின் சார்பாக விடுத்தார். இதுவரை காலமும் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் கொடுக்கும் அடிமைத்தன நிலையை கைவிட்டு அடித்தவனுக்கு திருப்பி அடிக்கும் புரட்சிகர நிலைப்பாட்டை தாழ்த்தப்பட்ட மக்கள் எடுக்க வேண்டும். அதற்கு எமது கட்சித் தலைமைத்துவத்தையும் வழிகாட்டலையும் வழங்கும் எனவும் கூறினார்.

அன்றைய ஒக்டோபர் 21 எழுச்சியானது வெறுமனே வாக்குச் சேகரிக்கும் பாராளுமன்ற நோக்குடையதாக அமைந்திருப்பின் அது வரலாற்று முக்கியத்துவத்தை பெற்றிருக்க முடியாது போயிருக்கும். ஆனால் தமிழ் மக்களிடையே எப்போதும் மூன்றில் ஒரு பங்கினராக வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வந்த சாதியத் தீண்டாமை கொடுமைகளுக்கு எதிரான புரட்சிகர எழுச்சியாக அமைந்தமையானது வரலாற்று திருப்பு முனையாகியது. அவ்வெழுச்சியைத் தொடர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் கூட்டங்கள் இடம்பெற்றன. அவற்றில் எல்லாம் கட்சியும் வாலிப இயக்கமும் தெளிவான கொள்கைகளை மக்களுக்கு எடுத்து விளக்கி வந்தன. கம்யுனிஸ்ட் கட்சியானது சாதிய தீண்டாமைக்கு எதிரான இயக்கத்தையும் போராட்டத்தையும் வர்க்கப் போராட்ட கண்ணோட்டத்தில்



அணுகியது. குறுகிய சாதியவாதக் கண்ணோட்டத்தில் நோக்கவில்லை. சில காலத்திற்கு முன்பு தமிழ்நாட்டின் தலித்தியவாதிகள் முன்வைத்த ``தலித்துகள் மட்டுமே என்ற வாதம் அன்றைய சூழலில் குறுகிய சாதிவாதமாகவே கட்சி கண்டுகொண்டது. தமிழ்நாட்டு தலித்தியவாதிகள் தமக்குத் துணையாக தோழர் டானியலின் எழுத்துக்களை தமதாக்கவும் தமது முன்னோடி டானியலே என்றும் உரிமை கொண்டாடிக் கொண்டதையும் நினைவு கொள்ளவேண்டும். ஆனால் உண்மை என்னவெனில் தோழர் டானியல் தன்னையொரு குறுகிய சாதிவாதியாக அன்றி வர்க்கப் போராட்டப் பாதையில் சாதியத்தை எதிர்த்தும் போராடும் பொதுவுடைமைப் போராளியாகவே நிலைப்படுத்தி வந்தார். அவர் ஒருபோதும் பின்வந்த தலித்திய நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்பவராக இருக்கவில்லை என்ற உண்மை மறைக்கப்படுவது தமிழ்நாட்டு தலித்தியவாதிகளின் திட்டமிட்ட பரப்புரையாகும். டானியல் மீதான பல்வேறு விமர்சனங்கள் இருந்துவந்த போதிலும் அவர்

தோழர் டானியல் தன்னையொரு குறுகிய சாதிவாதியாக அன்றி வர்க்கப் போராட்டப் பாதை யில் சாதியத்தை எதிர்த்தும் போராடும் பொதுவுடைமைப் போராளியாகவே நிலைப்படுத்தி வந்தார். அவர் ஒருபோதும் பின்வந்த தலித்திய நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்பவராக இருக்கவில்லை என்ற உண்மை மறைக்கப்படுவது தமிழ்நாட்டு தலித்தியவாதிகளின் திட்டமிட்ட பரப்புரையாகும்.

இறுதிவரை தன்னையொரு பொதுவுடைமைவாதியாகவே வெளிப்படுத்தி வந்தார். அவர் ஒக்டோபர் 21 எழுச்சி ஊர்வலத்தில் பங்கு கொண்டபோது புரட்சிகரக் கம்யுனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் குழு உறுப்பினராக இருந்தார் என்பதே உண்மை நிலையாகும். அவரது இளமைக்காலப் பொது வாழ்வின் ஆரம்பம் கம்யுனிஸ்ட் கட்சியில் இணைந்து கொண்டதன் மூலமும் கட்சியின் முழுநேர ஊழியனாகச் சிலகாலம் செயல்பட்டதன் வாயிலாகவும் அவர் பெற்ற அனுபவங்கள் அதிகமானதாகும் அதனால் அவர் மார்க்சிச உலகக் கண்ணோட்டத்தை ஒருபோதும் தலித்தியத்திற்கு அடகு வைக்காதவராக வாழ்ந்தார் என்பதே உண்மையாகும். அத்தகைய தோழர் டானியலை தமிழகத்து - புலம்பெயர்ந்த தலித்தியவாதிகள் எனக் கூறப்படுவோர் தமது குறுகிய சிமிழுக்குள் அடைக்க முறப்படுவது நேர்மையீனமாகும். உட்கட்சி விவாதங்களிலும் வெளிவெளியான கருத்து மோதல்களிலும் ஈடுபட்ட நேர்மையான எவரும் டானியல் மீதான விமர்சனங்களுக்கு அப்பால் அவரது சாதியத்திற்கு எதிரான பொதுவுடைமைக் கண்ணோட்ட

ஒக்ரோபர் 21 எழுச்சியின் தொடர்ச்சியான பிரச்சார இயக்கங்கள் ஆங்காங்கே நடைமுறைப் போராட்டங்களாக வெடிக்க ஆரம்பித்தன. அவை தேனீர் கடைப்பிரவேசமாகவும் சமத்துவ வழிபாட்டிற்கான ஆலய பிரவேசமாகவும் முன்சென்றன. இப்போராட்டங்களில் அந்தந்த ஊர் தாழ்த்தப்பட்ட மக்களே முன்னின்றனர். வெளியிலிருந்து வந்து அவ்வாறான போராட்டங்களில் பங்குகொள்வது ஆதரவான நிலைப்பாடாக கருதப்பட்டதேயன்றி பிரதான மாக்கப்படவில்லை. சில இடங்களில் மக்கள் இளைஞர்களின் உணர்வையும் பலத்தையும் கண்டு சாதிவெறியர்கள் பின்வாங்கினர். ஆனால் சங்கானையில் தேனீர்க்கடை பிரவேசத்தின் போது கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து சாதிவெறியர்களும் பொலிசாரும் சேர்ந்து நிச்சாமம் கிராமத்தின் மீது தாக்குதல் தொடுத்தனர். அதிலிருந்து போராட்டம் வீறுபெற்றதுடன் வட புலம் பூராவும் அப்போராட்டத்தின் பொறிகள் வீழ்ந்து காட்டுத்தீ போன்று பரவத் தொடங்கியது. அப்போது மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தி என்ற உண்மையும் தாழ்த்தப்பட்ட மக்களிடையேயான போர்க்குணமும் வெளிப்பட்ட சூழல் உருவாகியது.

இக்கட்டத்திலேயே புரட்சிகர கட்சியானது சாதியத் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தை உறுதியாகவும் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காகவும் உரிய கொள்கையை தந்திரோபாயங்களை மேலும் வகுத்து முன்னெடுத்தது. தாழ்த்தப்பட்ட மக்களும் அவர்கள் மத்தியிலான கம்யுனிஸ்ட்டுகள் வாலிபர் கள் என்போர் அடிப்படைப் போராட்ட சக்திகளாக அமைப்பு வாயிலாக அணிதிரட்டப்பட்டனர். அடுத்து அதற்கு ஆதரவாக அணிதிரளக் கூடிய மனித நேய நல்லெண்ணம் கொண்ட அனைவரும் ஜனநாயக சக்திகளாக அடை யாளம் காணப்பட்டனர். அவர்களில் உயர் சாதியினர் என்றழைக்கப்பட்டோர் முஸ்லிம் முற்போக்கு சக்திகள் சிங்கள இடதுசாரிகள் இருந்தனர். எனவே ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணியும் அதற்கான அமைப்பும் தேவைப்பட்டது. காலத்தின் தேவையாக அமைந்த இவ்வமைப்பாகவே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் புரட்சிகர கம்யுனிஸ்ட் கட்சியால் தோற்றுவிக்கப் பட்டது. அதன் முதல் மாநாடு 1967ம் ஆண்டு யாழ் மாநகரசபை மண்டபத் தில் ஒக்டோபர் 21 எழுச்சியின் முதலாவது போராட்டத் தியாகியாகிய சின்னர் கார்த்திகேசு அரங்கில் இடம்பெற்றது. அம்மாநாட்டிலேயே தோழர் எஸ்.ரி.என்.நாகரட்ணம் தலைவராகவும் தோழர் கே.டானியல் அமைப்பாள ராகவும் எம்.சின்னையா சி.கணேசன் இணைச் செயலாளரகளாகவும் தெரிவு செய்யப்பட்டனர். தோழர்களான (மான்).ந.முத்தையா டாக்டர்.சு.வே. சீனி வாசகம் கே.ஏ.சுப்பிரமணியம் ஆகியோர் உபதலைவர்களாகத் தெரிவாகினர். இவ்வாறு தோற்றம்பெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் கம்யுனிஸ்ட்களும் அல்லாதோரும் உயர்சாதியினரில் உள்ள ஜனநாயக



சக்திகளும் அணிதிரண்டு இருந்தனர். இத்தகைய நிலை முன்பிருந்து வந்த சாதிய அடையாளச் சங்க முறைமைகளுக்கு அப்பாலான காலத்தின் வளரச் சிக்கும் தேவைக்குரியதுமான ஒரு வலுவான ஐக்கிய முன்னணி அமைப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.


எஸ்.ரி.என்.நாகரத்தினம்

இத்தகைய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமானது புரட்சிகர கம்யுனிஸ்ட் கட்சியின் தலைமைத்துவ வழிகாட்டலை ஏற்று செயல்பட்ட ஒரு போராட்ட ஐக்கிய முன்னணி அமைப்பேயாகும். அதன் தலைவராகப் பொறுப்பேற்ற தோழர் எஸ்.ரி.என்.நாகரட்ணம் கட்சி உறுப்பின ராக இருக்கவில்லை. அவர் இளவயதி லிருந்தே சாதிய ஒடுக்குமுறை அனுபவத் தால் கம்யுனிஸ்ட் ஆதரவாளராகவே இருந்து வந்தார். அவரது வியாபாரத் தொழில் மூலம் கட்சிக்கு நிதிப்பங்களிப் பும் வழங்கி வந்தார். 1964ல் கட்சி பிளவு பட்டவேளை அவர் நடுநிலையில் இருந்தும் வந்தார். அவர் அந்நிலையைக் கடந்து 1966 ஒக்ரோபர் எழுச்சி ஊர்வலத்தில் முதல் தடவையாக கொண்டார். அவரது நேர்மை அர்ப்பணிப்பு உறுதி என்பனவற்றை அக்காலத்தில் அவரு டன் நெருக்கமாகப் பழகியவர்களில் ஒருவனாக இருந்த காரணத்தால் நேரில் காணமுடிந்தது. தோழர் எஸ்.ரி.என்.உடனான நினைவுகள் இன்றும் பசுமை யானவையாகும். ஆனால் கட்சி வழிகாட்டலை ஏற்று உறுதியுடனும் விட்டுக் கொடுக்காமலும் போராட்டக் களத்தில் நேர்மையாகவும் தலைமை தாங்கிய தோழராவார். அவரது தலைமைப் பாத்திரம் அன்றைய போராட்டச் சூழலில் மிகப் பெறுமதிவாய்ந்ததாக அமைந்திருந்தது. அவ்வாறே கட்சியல் லாத ஏனைய வெகுஜன இயக்கத் தலைமைத்தோழர்களும் இருந்து வந்தனர்.

சங்கானை சாவகச்சேரி கொடிகாமம் அச்சுவேலி உரும்பிராய் கரவெட்டி கன்பொல்லை மற்றும் சிறுசிறு நகரங்களின் தேனீர்க்கடைகளில் உணவ கங்களில் சமத்துவத்திற்கான போராட்டங்கள் இடம்பெற்றன. இவற்றில் சங்கானை - நிச்சாமத்தில் மூன்றுபேரும் கரவெட்டி - கன்பொல்லையில் ஒரே நேரத்தில் மூன்றுபேரும கரவெட்டி கிழக்கில் ஒருவரும் சண்டிலிப்பாயில் ஒருவரும் அச்சுவேலியில் ஒருவரும் போராட்டத்தின்போது நேரடித் தியாகியாகினர். இவற்றுக்கும் அப்பால் ஐந்துபேர்வரை ஆங்காங்கே சாதி வெறியர்களின் தாக்குதலுக்குப் பலியாகிதனர். அவ்வாறே தீண்டாமை

ஒழிப்பு வெகுஜன இயக்கம் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் ஆகிய இருபெரும் ஆலயங்களில் மூன்று வருட திருவிழாக்களின் போது ஆலயப் பிரவேசப் போராட்டங்களை முன்னெடுத்தது. அங்கே சாத்வீக வழிமுறைகளும் தேவைப்பட்ட சந்தர்ப்பங்களில் பலாத்கார நடைமுறைகளும் தாழ்த்தப்பட்ட மக்களால் பின்பற்றப்பட்டன. இத்தகைய வெகுஜனப் போராட்டங்களால் இறுதியில் ஆலயக் கதவுகள் திறக்கப்பட்டன. அதன் எதிரொலியாக செல்வச் சந்நிதி கோவில் வல்லிபுர ஆழ்வார் கோவில் உட்பட ஆங்காங்கே பல கோவில்களின் கதவுகள் கடும் போராட்ட அழுத்தங்களின் ஊடாகத் திறந்து வைக்கப்பட்டன. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நேரடியாகத் தலையிடாமலே குடாநாட்டின் பல தேநீர்க் கடைகள் உணவகங்கள் ஆலயங்கள் தாழ்த்தப்பட்ட மக்களது சமத்துவத்திற்கு திறந்து விடப்பட்டன. அது போராட்டத்தின் பிரதிபலிப்புகளேயாகும். கம்யூனிஸ்ட் கட்சியும் தீண்டாமை வெகுஜன இயக்கமும் 1966ம் ஆண்டு ஒக்டோபர் 21 எழுச்சியைத் தொடரந்து முன்னெடுத்த போராட்டங்கள் தேநீர்க்கடைகள் உணவகங்கள் ஆலயங்களின் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சமத்துவத்தையும் ஜனநாயக மனித உரிமையையும் வென்று கொடுத்தனர். இவை 1966 முதல் 1971 காலப்பகுதியில் இடம் பெற்றவையாகும். ஆனால் அதற்கு முன்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் சாதிய தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகப் போராட்டங்களோ உரிமைக் கோரிக்கைகளோ இடம்பெறவில்லை என்று கூறுவது வரலாற்றை மறுப்பதும் இடம்பெற்ற உண்மைகளை மறைப்பதும் ஆகும்.

1920களில் ஆரம்பித்து 30கள் வரை இயங்கி வந்த யாழ்ப்பாண மாணவர் வாலிப காங்கிரஸ் காலத்தில் சாதிய தீண்டாமைக்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு சமத்துவத்திற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதற்கு முன்பும் சிறுசிறு அமைப்புகள் தனிநபர்கள் சாதியத்திற்கு எதிராகத் துணிவுடன் எதிர்த்து செயலாற்றி வந்திருக்கின்றனர். ஒவ்வொரு கிராமங்களிலும் தனிநபர்கள் மற்றும் ஒன்றிணைந்த எதிரப்பு நடவடிக்கைகள் இருந்து வந்தன. அதன் பின்பு 40களில் சிறுபான்மைத் தமிழர மகாசபை கடும் முயற்சிகளையும் இயக்கங்களையும் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக முன்னெடுத்து வந்தன. யாழ்நகரத் தேநீர்க் கடைகளிலும் நல்லூர்க் கந்தசாமி கோவில் வண்ணை சிவன் கோவில் போன்றவற்றில் சமத்துவம் பெறப்பட்டமை மகாசபை காலத்திலேயாகும். அவ்வேளையிலும் கூட பிளவுபடாத கம்யூனிஸ்ட் கட்சியானது மகாசபைக்குப் உறுதியான பின்புலமாக இருந்து வந்தது. மகாசபையின் தலைவராக இருந்து கடுமையாகப் பணிபுரிந்த எம்.சி.சுப்பிரமணியம் வடபுலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை தோழர் மு.காரத்திகேசனுடன் இணைந்து கட்டியெழுப்பிய முன்னோடிகளில் ஒருவராக இருந்தவர். அந்நாட்களில் அவரது பணியும் பங்களிப்பும் மிகக் கனதியானவைகளாகவே



இருந்தும் வந்தன ஆனால் 1964ம் ஆண்டின் பின்பான பழைய கம்யூனிஸ்ட் கட்சியானது பாராளுமன்ற பாதையில் வழிநடக்க ஆரம்பித்ததுடன் எம்.சியும் அதன்வழியில் செயற்பட்டு தனது முன்னைய பங்களிப்பைக் கூட களங்கப்படுத்திக் கொண்டார. இருப்பினும் அவரது முன்னைய சமூகப் பங்களிப்பை பின்னைய செயற்பாட்டிற்காக எவரும் மறுக்கவியலாது. அதே போன்று பின்னைய செயற்பாட்டை நியாயப்படுத்தவும் முடியாது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பான சாதிய தீண்டாமைக்கு எதிரான முன்னைய இயக்கங்கள் போராட்டங்கள் சாதித்தவைகளைவிட 1966ம் ஆண்டு ஒக்டோபர் 21 எழுச்சி தோற்றுவித்த சுமார் 5 வருடகாலப் போராட்டங்கள் சாதித்தவை தமிழ்ச்சூழலில் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவையாகும். அது ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட மக்களின் ஆண்டாண்டு கால அடிமைத்தன வாழ்வில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திக் கொண்டது. அதன் அடிப்படையாக அமைந்த காரணி போராட்டத்திற்கான தெளிவுள்ள கொள்கையையும் போராட்ட தந்திரோபாயங்களும் ஆகும். வெகுஜன எழுச்சிகளையும் மக்கள் பங்குபற்றுதலையும் முதன்மைப்படுத்தி நின்றமை முக்கியமானதொரு நிலைப்பாடாகும். யாருக்கு சமத்துவம் ஜனநாயகம் மனித உரிமை வேண்டியதோ அதே தாழ்த்தப்பட்ட மக்கள் அணிதிரட்டப்பட்டனர். ஐக்கியப்படுத்தப்பட்டு அவர்களே போராட்டத்தில் நடுநாயகமாக ஆக்கப்பட்டனர். அதனால் பரந்துபட்ட போராட்டமாகியது. அதில் இளைஞர்களின் பாத்திரம் முக்கியமானதாக இருந்தபோதிலும் அவர்கள் கட்சி வெகுஜன இயக்கம் வாலிபர் இயக்கம் என்பனவற்றின் கொள்கை வழிப்பட்ட கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தனர். அத்துடன் ஆயுதங்கள் கையாளப்பட்டமை முக்கிய நடவடிக்கையா அமைந்தன. அதனால் வெகுஜனப் போராட்டங்கள் சட்டரீதியானவையாகவும் சட்டமறுப்பானவையாகவும் விளங்கின. இதனால் பொலீஸ் அடக்குமுறைகளுக்கு மக்கள் முகம் கொடுத்து நின்றனர். பொலீஸ் நிலையங்களில் கடும் சித்திரவதைகளை அனுபவித்தனர். நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டனர். இத்தகைய நடவடிக்கைகளால் அன்றைய போராட்டங்களை முறியடிக்க ஆயுதங்கள் முடியவில்லை. தேவையின் பொருட்டு பயன்படுத்தப்பட்ட போதிலும் அவை கட்சியின் தலைமைக்கு கட்டுப்பட்டதாக இருந்தன. எந்தவொரு கொள்கையும் போராட்டமும் மேலிருந்தோ அன்றி வெளியிலிருந்தோ திணிக்கப்படக் கூடியவையல்ல என்பதையும் அப்படி திணிக்கப்பட்டால் அவை வெற்றிபெற முடியாதவையாகிவிடும் என்பதையும் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னெடுத்த அன்றைய போராட்டங்கள் எடுத்துக்காட்டின. சில தலித்தியவாதிகள் கூற முற்படுவது போன்று அன்றைய போராட்டங்கள் குறுகிய சாதிவாதப் போராட்டமாக இருக்கவில்லை. அதன் பரப்பும் பங்குபற்றியவர்களின் பங்களிப்பும் மிகப் பரந்ததொன்றாகும். ஜனநாயக நல்லெண்ணம் கொண்ட உயர்சாதியினர் எனப்பட்டவர்கள் முஸ்லிம் மக்கள் - இளைஞர்கள் சிங்கள மக்கள் அவர்

களுக்கிடையிலான புத்திஜீவிகள் என்போர் ஆதரவளித்து பங்கெடுத்தனர். அன்றைய ஒக்டோபர் 21 எழுச்சியும் அதன் பாதையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களும் ஆண்டாண்டு காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த சாதிய அடக்குமுறைமைகளையும் தீண்டாமைக் கொடுமைகளையும் பெருமள விற்கு உடைத்தெறிந்து கொண்டது. அதற்காக வகுக்கப்பட்ட கொள்கை களும் போராட்ட தந்திரோபாயங்களும் தமிழரகளின் சமூகச் சூழலின் யதாரத் தங்களில் இருந்தே உருவாக்கப்பட்டன. இந்திய சூழல்களிலிருந்தோ அல்லது அந்நிய ஆதரவு வேண்டியோ அன்றைய போராட்டங்கள் முன்னெ டுக்கப்படவில்லை என்பது ஆழ்ந்து நோக்கத்தக்கதாகும். வெறும் சொல்லா டல்களையும் வீரதீர வசனங்களையும் அல்லது யதாரத்த நிலைமைகளுக்கு அப்பாலான நடைமுறைகளை கைக்கொண்டு அன்றைய போராட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை என்பது கவனத்திற்கு உரியதாகும். அதனா லேயே தாழ்த்தப்பட்ட மக்கள் தமக்கு மறுக்கப்பட்ட உரிமைகளையும் நிராகரிப்பட்ட சமூக நீதியினையும் வென்றெடுக்க முடிந்தது. அதனால் அவர் களது ஒட்டுமொத்த சமூக அந்தஸ்து உரிய சமத்துவ இடத்தையும் அடைய நேரிட்டது. தமிழ்த் தேசிய இனம் என்று பெயரளவில் தானும் தமிழ்த் தேசியவாதிகள் கூறிக்கொள்ளக்கூடிய அளவிற்கு ஒரு ஐக்கியத் தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்ட சூழல் ஒக்ரோபர் 21 எழுச்சியின் மூலமே உருவாகி யது. அதேபாதையில் புதிய சமூக வளரச்சிக்கேற்ப தொடர்ந்தும் தாழ்த்தப் பட்ட மக்கள் சமகால யதாரத்தங்களின் ஊடே புரட்சிகர வெகுஜனப் போராட்ட இயக்கத்தை முன்னெடுக்கவேண்டும்.

தமிழ்த் தேசியவாதம் முன்னெடுத்த மூன்று தசாப்தகால ஆயுதப் போராட்டங் களால் சாதியத்தை மறைக்க முடிந்ததே தவிர அதன் தீவிரத்தையோ அடிவேர் களை அறுக்கவோ முடியவில்லை. இப்போது இந்தியச் சூழலில் காணப் படும் தலித்தியம் என்பதனை இலங்கையில் திணிக்கச் சிலர் முறப்படுகின்ற னர். ஒரு கொள்கையாக கோட்பாடாக வளர முடியாத தலித்தியம் இந்தியா வில் வாக்குகள் பெறும் பாராளுமன்ற அரசியலுக்கும் பதவிகள் பெறுவதற் கும் அதற்கும் அப்பால் பணம் சேகரிப்பதற்கும் பயன்பட்ட அளவிற்கு இந்தியத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பயன்படவில்லை என்பதே பொதுவான கருத்தாகி வருகின்றது. குறிப்பாகத் தமிழ்நாட்டில் தலித்தியவாதிகள் என்போ ரின் சீரழிவு மோசமாகி வருவதைக் காணமுடியும். அதேவேளை வர்க்கப் போராட்ட அடிப்படையில் மார்க்சிச லெனினிச சக்திகள் தாழ்த்தப்பட்ட மக்க ளின் வாழ்வோடு இணைந்த போராட்டங்களை முன்னெடுத்து வருவதுடன் அவற்றில் வெற்றிகளையும் கண்டு வருகிறார்கள். அவை பிற குறிப்பான மாநிலங்களில் தீவிர வர்க்கப் போராட்ட வடிவங்களைப் பெற்று வருவதை யும் அவதானிக்கலாம். அதேநேரம் தலித் என்ற சொல்லாடலையும் தலித்தி யம் என்ற சீரழிந்த நடைமுறைகளையும் இலங்கையில் திணிப்பதற்கு எத்தனிக்கப்படுகிறது. இந்தியச் சூழலுக்கு பொருந்தக் கூடியதாக இருக்கும்



எதையும் இலங்கை மீது திணிப்பது மிகத் தவறானதாகும். இது பிரதிபண்ணும் போக்கேயன்றி வேறுபட்ட சூழலின் யதார்த்தங்களைப் புரிந்து செயற்படுவதற்கு உரிய ஒன்றல்ல.

**தமிழ்த் தேசியவாதம் முன்னெடுத்த மூன்று தசாப்தகால ஆயுதப் போராட்டங்களால் சாதியத்தை மறைக்க முடிந்ததே தவிர அதன் தீவிரத்தையோ அடிவேர்களை அறுக்கவோ முடியவில்லை.**

எனவே 1966 ஒக்டோபர எழுச்சியும் அதன் பாதையிலான புரட்சிகரப் போராட்டங்களும் செழுமைமிக்க வரலாற்று அனுபவங்களை கொண்டவை யாகும். அவற்றிலிருந்து தோல்வியை தழுவியுள்ள தமிழ்த் தேசியவாதப் போராட்டத்தை முன்னெடுத்த அனைத்துத் தரப்பினருமே படிப்பதற்கு நிறையவே உண்டு. ஆனால் இத்தனை அழிவுகளுக்குப் பின்பும் அந்தப் பக்கத்தைப் பாரப்பதற்கு எந்தவொரு தமிழ்த் தேசியவாத தலைமையும் தயாராகவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் தெளிவானவையாக வுள்ளன. ஒன்று ஒக்டோபர் 21 எழுச்சியானது இடதுசாரி நிலைப்பாட்டில் முன்னெடுக்கப்பட்டதாகும். இரண்டாவது தமிழர்கள் மத்தியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் தமது சொந்தக்கால்களில் நின்று தமது சொந்தத் தலை விதியை தாமே தீர்மானித்து முன்னெடுக்கப்பட்டதாகும். இவ்விரண்டு கொள்கை நிலைப்பாடுகளும் பழமைவாதத்தின் சகல கூறுகளையும் உள் வாங்கிய தமிழ்த் தேசியவாத சக்திகளுக்கு அரசியல் தீண்டாமையே ஆகும். அரசியலில் அவர்கள் கடைப்பிடித்து வரும் இத் தீண்டாமையை கடக்காத வரை இலங்கையிலும் அல்லது புலம்பெயர்ந்த நாடுகளிலும் தமிழ்த்தேசிய வாதத்தை முன்னெடுக்கும் எத்தகைய தலைமைகளாலும் முன்செல்ல முடி யாது. அவரகளுக்கு அரைத்த மாவை மீண்டும் மீண்டும் அரைப்பதைத் தவிர வேறுவழியில்லை. அதன் மூலம் பழைமைவாத பிற்போக்கிற்கும் ஏகாதிபத் திய சக்திகளுக்கும் சேவை செய்ய மட்டுமே முடியும். தமிழ் மக்களுக்கு எவ்வித விமோசனத்தையும் கொண்டுவர மாட்டாது. ஒக்டோபர் 21 எழுச் சிக்குத் தலைமை தாங்கியவரகளில் ஓரிருவரைத் தவிர ஏனையோர் மறைந்துவிட்டனர். அதேபோன்று போராட்டக் களங்களில் முன்னின்ற போராளிகளில் குறிப்பிடத்தக்கவரகளே இன்றும் உயிருடன் இருக்கின்றனர். ஏனையோர மறைத்து விட்டனர். மறைந்த அம்மானிட விடுதலைப் போராளிகளுக்கு இவ்வேளை நாம் தலைவணங்கி அஞ்சலி நினைவு கொள்கின்றோம். உள்நாட்டிலும் புலம் பெயரந்த நாடுகளிலும் தோல்வி அவலம் தழுவிய நிலையில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் குறிப்பாக இளந்தலைமுறையிதனர் இவ் வெகுஜன எழுச்சியின் ஊடே சமகாலச் சூழலுக்குரியவற்றை கற்றுக் கொள்வது பயன் தருவதாகும். ★★★

தெற்கின் பிள்ளைகளை
கள்வர்கள் திருடிச்சென்றபேது
எமக்கு பலமூட்ட எம்முடன் நீயிருந்தாய்..
ஒவ்வொருவராக
இனந்தெரியா சன்னங்களுக்கு இலக்கானபேது
எம்முடன் எமக்கு பலமூட்ட நீயிருந்தாய்...
தளையுற்றுண்ட எங்களது
நீதி களவாடிச்சென்ற
ஆதிக்கவெறியர்களின் முகமூடி கிழிக்கும்
சக்தி இன்னமும் உன்னது திஸ்ஸ...
திஸ்ஸ...
இராட்சதச் சிறைச்சாலையினுள் தளையுற்று
பெருமூச்சுவிடுகையில்
நினைவிற்கொள்
சிங்களச்சிறைக்குள் தள்ளப்பட்ட
தமிழ் நிரபராதி
நீயென்பதை...

சிங்கள மூலம்:
**அரவிந்தன்**
தமிழில்:
**என்.சரவணன்**



# எம்முடன் நீயிருந்தாய்...





# பொதுவுடைமைக் கட்சியாளர் கவிஞர் எரிக் ஸ்ரினுஸ்

– கரவைதாசன்

அஞ்சலி:

டென்மார்க் கொம்யூனிஸ்ட் கட்சி, உலக மனித உரிமைச் சங்கம், அணு ஆயுதத்திற்கு எதிரான இயக்கம், டெனிஸ் வியட்நாம் சங்கம், ஐரோப்பிய யூனியனுக்கெதிரான மக்கள் இயக்கம், தென்ஆபிரிக்க கமிட்டி, பலஸ்தீன் நட்புறவுச்சங்கம், எனப் பல மனித உரிமை அமைப்புகளிலும் பொதுவுடைமைக் கட்சியிலும் அங்கம் வகித்துள்ளார்.

[14--2009] டென்மார்க் பொதுவுடைமைக் கட்சியாளர் கவிஞர் எரிக் ஸ்ரினுஸ் காலமானார். உலக இடதுசாரியச் சிந்தனையாளர், டென்மார்க்கின் சிறந்த கவிஞர்களில் ஒருவர், சிறுகதை எழுத்தாளர், நாவலாசிரியர், கட்டுரையாளர், முதலாளித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி, மனித உரிமையாளர், மூன்றாம் உலக நாடுகளின் நண்பன் எனப் பன்முகங்களை கொண்ட கவிஞர் எரிக் ஸ்ரினுஸ் தனது 75வது வயதில் காலமாகிவிட்டார்.

நீண்ட நாட்களாகவே கொடிய புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த தோழர் எரிக் ஸ்ரினுஸ் அவர்கள் (13.11.09) வெள்ளிக்கிழமை காலமானார். சிறந்த மொழி வல்லாளர் என டெனிஸ் இலக்கிய உலகில் இவர் பேசப்பட்டபோதிலும் தனது படைப்புகளினூடே தான் ஒரு கலகக்காரன் என்பதை இறக்கும் தருவாய்வரை அடையாளப்படுத்தியே வந்துள்ளார். இலக்கியம் படைப்பது என்பது தனிப்பட்டவர்களின் இயங்கு சக்தி. எப்படி படைக்க வேண்டும், எதை எழுத வேண்டும் என்பதெல்லாம் எழுத்தாளனின் தனிப்பட்ட உரிமை. வேண்டுமானால் படைப்பின் உருவத்தைப்பற்றியும் அதன் மொழி பற்றியும் யாரும் விமர்சனம் வைக்கட்டும் அதன் உள்ளடக்கம் பாட்டாளிய இயக்கத்திற்கு உதவிபுரிவதாக இருக்க வேண்டும் என மாக்சிம் காக்கியிடம் லெனின் கேட்டுக் கொண்ட வார்த்தைகளை தோழர் எரிக் ஸ்ரினுஸ் அவர்கள் ஒரு வரமாகவே கொண்டு எழுதி வந்தார். அதனால்தான் டென்மார்க்கின் மிகப் பெரிய மாக்சியரும் எழுத்தாளருமாகிய மார்டின் அனசன் நெக்சுய் அவர்களின் அறக்கட்டளைப் பரிசினை தனது படைப்பொன்றிற்காக 1986ல் இவர் பெற்றுக்கொண்டார்.

இதற்கு முன்பும் அனைத்துக்குமான கலகக்காரன் பரிசை 1979 லும் தவிர இரண்டு தடவைகள் எழுத்தாளர்கள் சங்கத்தின் அமைதிக்கான பரிசினை, (1992, 2005) லும் துருக்கி நாட்டினைச் சேர்ந்த கவிஞர் நாசிம் கைக்மெற் பரிசினை 2009 லும் வேறும் சில உலக தரம் வாய்ந்த பரிசுககைளையும் தனது படைப்புகளுக்காக மொத்தம் எட்டுத் தடவைகள் பெற்றுள்ளார். 1934ம் ஆண்டு 22ந்திகதி ஆகஸ்ட் மாதம் பிறந்த தோழர் எரிக் ஸ்ரினுஸ் அவர்கள் 1953ல் தனது உயர்தர கல்வியை முடித்துக்கொண்டு வர்த்தகக் கப்பல் ஒன்றில் மாலுமியாக வேலையில் சேர்ந்து பயணித்த வேளை மேற்கு வங்காளத்தில் தான் கண்ட வறுமைக்கூடாக உலகின் ஏற்றத் தாழ்வினை கண்டு கொண்டதாக பிரசங்கித்தார். கூடவே உலகமாற்றத்தினை வேண்டி 1954ல் டென்மார்க் கம்யூனிச வாலிபர் சங்கத்தில் சேர்ந்து இயங்கத்தொடங்கினார். 1956ல் பயிற்றப்பட்ட ஆசிரியராக தேர்ச்சியடைந்த எரிக் அவர்கள், கொலண்ட், இந்திய மொழிகளிலும் தேர்ச்சி யுள்ளவர். இவரது முதலாவது கவிதைத் தொகுதி எல்லைக்கிராமம் (1958) அறிவித்தல், சமூக ஜனநாயகக்காரன், கம்யூனிச இதழ், சோசலிச வாரஇதழ், தினசரி தொழிலாளி என பல்வேறுபட்ட இடதுசாரிப் பத்திரிகைகளில் எழுதியுள்ளார்.




டென்மார்க் கொம்யூனிஸ்ட் கட்சி, உலக மனித உரிமைச் சங்கம், அணு ஆயுதத்திற்கு எதிரான இயக்கம், டெனிஸ் வியட்நாம் சங்கம், ஐரோப்பிய யூனியனுக்கெதிரான மக்கள் இயக்கம், தென்ஆபிரிக்க கமிட்டி, பலஸ்தீன் நட்புறவுச்சங்கம், எனப் பல மனித உரிமை அமைப்புகளிலும் பொதுவுடைமைக் கட்சியிலும் அங்கம் வகித்துள்ளார்.

கடந்த ஆண்டில் இவரது 50வது இலக்கிய வாழ்வை யொட்டி இவரது தோழர்களினால் தோழமை கொண்டும் விமர்சித்தும் 400 பக்கங்களைக் கொண்ட மலரொன்று வெளியிடப்பட்டுள்ளது. இம் மலரின் பக்கங்களை விரித்தால் தோழர் எரிக் ஸ்ரினுஸ் அவர்களின் பொதுவுடைமை வாழ்வினையும் அவரது முற்போக்கு படைப்புகள் பற்றிய விபரங்களையும் அவரது மனித நேயத் தடங்களையும் தரிசிக்கலாம்.

~~~



நேர்காணல்

# ராணுவத்தைக் கொண்டாடும் தேசத்தில்

ஆதவன் தீட்சண்யா



*இலங்கை பயணத்தின் நோக்கம் என்ன?*

நமது நேரடிச் சொந்தங்களான மலையகத்தமிழரை சந்திப்பது, இலங்கைத் தமிழர்களின் வடபகுதிக்குச் செல்வது - விடுதலைப்புலிகளை ஒடுக்கு வதாகச் சொல்லிக்கொண்டு அந்த அப்பாவித் தமிழர்கள் மீது இலங்கை ராணுவம் நிகழ்த்தி முடித்திருக்கும் அட்டூழியங்கள், அத்துமீறல்கள், படுகொலைகள் குறித்து நேரடியாக அறிவது, இன்றைய சூழலை விளங்கிக்கொள்வது, வாய்ப்பிருந்தால் தமிழர்கள் அடைத்து வைக்கப் பட்டுள்ள வவுனியா முகாம்களுக்கு சென்று நிலைமையை நேரில் அறிவது என்பவைதான் எனது பயணத்திட்டம். அக்டோபர் 8 முதல் 15 வரை கண்டி, மாத்தளை, ஹட்டன் ஆகிய மலையக நகரங்கள் மற்றும் அவற்றைச் சுற்றிய தோட்டங்கள். 16-18 கொழும்பு. 19-21 யாழ்ப்பாணம். 22 மாலை நாடுதிரும்பினேன். குழு விவாதங்கள். அந்தனி ஜீவா, ஜோதிகுமார், ரங்கன் போன்ற தோழர்கள் ஏற்பாட்டில் சிறியதும் பெரியதுமாக நடந்த 11 நிகழ்வுகளில் பங்கெடுத்தேன்.

*போருக்குப் பின் இலங்கை எப்படி இருக்கிறது? பாதுகாப்பு கெடுபிடிகள், மக்களின் அன்றாட வாழ்க்கை நிலை, அரசியல், ராணுவரீதியான போக்குகள்?*

நாட்டின் எந்த மூலையிலும் துண்டுத்துக்காணி இடத்திலும் மணல் மூட்டை களுக்குப் பின்னால் தயார்நிலையில் குமிந்திருக்கிறது ராணுவம். போர் உக்கிரமாக நடந்துகொண்டிருப்பதான பீதியே நிலவுகிறது. குண்டு துளைத்து பாழடைந்த கட்டிடங்கள், கைவிடப்பட்ட வீடுகள், அடர்ந்த புதர்கள் என்று எங்கு பார்த்தாலும் ஒரு துப்பாக்கிக்குழல் துருத்திக் கொண்டுள்ளது. எந்நேர மும் நம்மை கண்காணிக்கிறது ஒரு ராணுவக்கண். தினசரி ஒருமுறையாவது ராணுவச் சோதனைக்கு உட்படாமல் பொதுஇடங்களில் நடமாடும் சுதந்திரம் அங்கு ஒருவருக்கும் வாய்க்கவில்லை. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் 40 நிமிட விமானப்பயணம். ஆனால் பறப்பதற்கு முன்னும் பின்னுமாக ஒருவர்
~~~

6மணிநேரம் ஆர்மிக்காரர் முன் கைகளை பக்கவாட்டில் விரித்துக்கொண்டு சோதனைக்கு நின்றாக வேண்டும். ஏ-9 பாதைவழியே கொழும்பு திரும்புவதற் கும் இதே பாடுதான். பயணிகளை மூட்டை முடிச்சுகளோடு இறக்கி சோதனை யிடுவதும், அரசாங்க கட்டிடங்களுக்குள் நுழைகிறவர்களை அங்குலம் அங்குலமாக சோதிப்பதுடன் அவர்களின் செல்போன் காமிரா போன்றவை பறித்துவைத்துக் கொள்ளப்படுவதும், உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரால் முள்வேலிகளால் தடுத்துவைக்கப்பட்ட பிரதேசங்களும் ஆட்சி யாளர்களின் அச்சத்தையும் சந்தேகப்புத்தியையும் அம்பலப்படுத்துகின்றன. பிடிபடாமல் தப்பித்துவிட்ட புலிகள் என்ற சந்தேகத்துடனேயே பொது மக்களை அரசாங்கமும் ராணுவமும் அணுகுகின்றன.

**மனிதசமூகத்தின் மேன்மைக்கு மகத்தான பங்களிப்பு செய்யவேண்டிய இளைஞர்சக்தி சீருடையணிந்த ஒரு இனவெறிப் பட்டாளமாக திசை மாற்றப்பட்டுள்ளது. எதிரியை வேட்டையாடும் வன்மத்தையும் கனத்த ஆயுதங்களையும் சுமந்துகொண்டு தினமும் விரைப்பாக தயாராகி குறுக்கும் நெடுக்கும் உலாத்திக் கொண்டிருக்கிற அந்த சிப்பாய்களின் மனநிலையில் ஏற்படும் சிதைவுகள் அந்த சமூகத்தை என்னவாக்கப் போகிறது என்பது வெறுமனே உளவியல் பிரச்னை அல்ல.**

முன்பேனும் ராணுவத்திற்கு புலிகள் என்ற திட்டவட்டமான கண்ணுக்குத் தெரிந்த எதிரிகள் இருந்தார்கள். இப்போது எதிரி யாரென்றே தெரியாத நிலை. ஆனால் எவரொருவராலும் எந்தநேரத்திலும் தன் நாட்டுக்கு ஆபத்து வரக்கூடும் என்கிற தன்முனைப்பை விரைத்துநிற்கிற ஒவ்வொரு ராணுவச்சிப்பாயிடமும் பார்க்கமுடிகிறது. இந்த தன்முனைப்பு, வெறுமனே ஒரு ராணுவத்தானுக்கு உரியதல்ல. அது, நீ சிங்களவன், இது உன்னுடைய- உனக்கே உனக்கான நாடு- அதை பத்திரமாக பார்த்துக் கொள்வது உனது பொறுப்பு என்று இனவெறியேற்றப்பட்டவனின் மனநிலையிலிருந்து பிறக்கிறது. எனவே தன்னை கடந்துபோகிற ஒருவரை உயிரோடு அனுப்புவதோ தன் நாட்டுக்கு ஆபத்தானவர் என்று சுட்டுத்தள்ளுவதோ அந்த கணத்திலான அந்த சிப்பாயின் கருணையின்பாற்பட்டதாக இருக்கிறது.



அவ்வாறு சுட்டுத்தள்ளினாலும் அதற்காக அவர் யாரிடமும் பதில்சொல்ல வேண்டிய கடப்பாடு ஒன்றுமில்லை. அத்துமீறல்களை எதிர்க்கும் ஆற்றல்கொண்ட மக்களோ அமைப்புகளோ அங்கு இல்லை. மனிதசமூகத்தின் மேன்மைக்கு மகத்தான பங்களிப்பு செய்யவேண்டிய இளைஞர்சக்தி சீருடையணிந்த ஒரு இனவெறிப் பட்டாளமாக திசை மாற்றப்பட்டுள்ளது. எதிரியை வேட்டையாடும் வன்மத்தையும் கனத்த ஆயுதங்களையும் சுமந்துகொண்டு தினமும் விரைப்பாக தயாராகி குறுக்கும் நெடுக்கும் உலாத்திக் கொண்டிருக்கிற அந்த சிப்பாய்களின் மனநிலையில் ஏற்படும் சிதைவுகள் அந்த சமூகத்தை என்னவாக்கப் போகிறது என்பது வெறுமனே உளவியல் பிரச்னை அல்ல. நம்மூரில் நடிகர்களுக்கும் தலைவர்களுக்கும் ஊதாரித்தனமாக வைக்கப்படுவதை விடவும் பலமடங்குப் பெரியதான கட்அவுட்களில் ராணுவத்தினரின் மூர்க்கமான முகங்கள் அச்சமூட்டுகின்றன. ராஜபக்ஷே கட்அவுட்களில்கூட தனியாய் நிற்பதில்லை, ராணுவத்தினர்

**மக்களைப் பொறுத்தவரை, கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்க சிலர் கொடிய விஷப்பாம்புகளுடன் கண்ணாடி கூண்டுக்குள் வாழ்கிற சாகசத்தைப் போல இந்த ராணுவ கெடுபிடிக்குள் வாழப்பழகிவிட்டார்கள்.**

புடைசூழவே காட்சி தருகிறார். அரசாங்க விளம்பரங்களில்கூட ராணுவச் சிப்பாய்களின் படங்களே பெருமிதத்தோடு இடம் பெறுகின்றன. ராணுவத்தினரை கதாநாயகர்களாகக் கொண்டாடுவது அவர்களது வீரதீரச் செயல்களுக்காக அல்ல. அவர்கள் வெளிப்படுத்திய சிங்கள இனவாதத்திற் காகத்தான் என்பதை புரிந்துகொள்வது கடினமான விசயமல்ல. போரின் வெற்றியைக் கொண்டாடுவது என்ற பெயரால் ராணுவத்தை முன்னிறுத்தி சிங்களப் பெருமிதம் தொடர்ந்து விசிறிவிடப்படுகிறது. ராணுவத்தின் மீதான மக்களின் இந்த ஈர்ப்பை யார் அறுவடை செய்வது என்கிற போட்டியின் வெளிப்பாடுதான் இப்போது ராஜபக்ஷேவுக்கும் சரத் பொன்சேகாவுக்கும் இடையே முட்டித் தெறிக்கிறது.

அந்த நாட்டில் இன்றுவரை நாடாளுமன்ற ஜனநாயகம் நீடித் திருப்பதாக அலட்டிக் கொண்டா லும் உண்மையில் அங்கு ராணுவம்தான் சமூகத்தை கட்டி யாள்கிறது. யாழ்ப்பாணத்திற்குள் ஒருவர் நுழைவதோ அல்லது அங்கிருந்து வெளியேறுவதோ பாதுகாப்பு அமைச்சகத்தின் அனு மதியைப் பெற்றால் மட்டுமே சாத்தியம். ( இந்த நிபந்தனை கடந்தவாரம்

தளர்த்தப்பட்டிருப் பதாக ஒரு அறிவிப்பு வெளியாகியுள்ளது) யாழ்ப்பாணத்தி லிருந்து வவுனியா செல்கிற பேருந்து களில் உங்களது இருக்கை எண்ணை ஒதுக்குவதும் கூட ஒரு சிப்பாய்தான் என்பதே நிலைமையை விளங்கிக் கொள்ளப் போதுமானது.

வவுனியா செல்லும் பேருந்துகள் புறப்படும் இடம் கூட ராணுவத்திடம்தான் உள்ளது. 8.30க்கு புறப்படும் பேருந்தில் செல்கிறவர், அங்கு அதிகாலை 5.30 மணிக்கே சோதனைக்காக வரிசையில் நின்றாக வேண்டும். அங்குள்ள கழிப்பறைகளில்கூட தண்ணீர் கிடையாது. தமிழருக்கு தண்ணீர் ஒரு கேடா என்ற நினைப்பாயிருக்கும். ராணுவச் செலவுக்கான நிதி ஒதுக்கீட்டை

**கோயில்கள், தேவாலயங்கள், கல்விக்கூடங்கள், அரசு அலுவலகங்கள், நீதிமன்றங்கள், தண்ணீர்த் தொட்டி எதுவும் மிஞ்சவில்லை. எத்தனையோ தலைமுறை தாண்டி பலன் கொடுக்கும் பனைமரங்கள் தலைவெட்டப்பட்டு மொட்டைமொட்டையாக ஆயிரக்கணக்கில் நிற்பதும் மனித நடமாட்டமற்ற பகுதிகளில் மாடுகள் கேட்பாரற்று அநாதைகளாக சுற்றியலைவதும் நெஞ்சையறுக்கும் காட்சிகள்.**

அதிகரிப்பது, ராணுவத்தினரின் எண்ணிக்கையை இப்போதுள்ளதுபோல் இரட்டிப்பாக்குவது என்ற ஆட்சியாளர்களின் முடிவுகள் தமிழர்களுக்கு மட்டுமல்ல, வாழ்வியல் நெருக்கடி தாளாமல் ஒருவேளை சிங்களவர்கள் போராடத் தொடங்கினால் அவர்களுக்கும் எதிரானதுதான். மக்களைப் பொறுத்தவரை, கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்க சிலர் கொடிய விஷப் பாம்புகளுடன் கண்ணாடி கூண்டுக்குள் வாழ்கிற சாகசத்தைப் போல இந்த ராணுவ கெடுபிடிக்குள் வாழப்பழகிவிட்டார்கள்.

1995 முதல் ராணுவத்தின் கட்டுப்பாட்டில்தான் யாழ்ப்பாணம் இருக்கிறது. இப்போது தமிழர்களின் முழுப்பகுதியையும் ராணுவம் கைப்பற்றியிருக்கி றது. ஏ9 பாதையில் பயணிக்கிறபோது ஆனையிறவு தொடங்கி ஓமந்தை வரைக்கும் ஒரேயொரு சிவிலியனைக்கூட காணமுடியவில்லை. அந்த நெடுஞ் சாலையின் இருமருங்கிலும் இருந்த எல்லா சிற்றூர்களும் கிளிநொச்சி போன்ற நகரங்களும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. கோயில்கள், தேவாலயங்கள், கல்விக்கூடங்கள், அரசு அலுவலகங்கள், நீதிமன்றங்கள், தண்ணீர்த் தொட்டி எதுவும் மிஞ்சவில்லை. எத்தனையோ தலைமுறை தாண்டி பலன் கொடுக்கும் பனைமரங்கள் தலைவெட்டப்பட்டு மொட்டை மொட்டையாக ஆயிரக்கணக்கில் நிற்பதும் மனிதநடமாட்டமற்ற பகுதிகளில் மாடுகள் கேட்பாரற்று அநாதைகளாக சுற்றியலைவதும் நெஞ்சையறுக்கும் காட்சிகள்.



ஆளரவமற்ற அந்த பாதை நெடுகிலும் நிறுத்தப்பட்டிருக்கும் சிப்பாய்களுக்கு இன்னும் எதிரிகள் தேவைப்படுகிறார்கள். அதேவேளையில் மக்களின் நண்பர்கள் என்று காட்டிக்கொள்கிற பகட்டுக்கும் குறைவில்லை. இழவு வீட்டாருக்கு நெருங்கிய உறவினர்கள் சாப்பாடு செய்து பகிர்வதுபோல, புன்னாலைக்கட்டியான் என்ற தமிழர்கிராமத்தில் ஒரு இழவுவீட்டிற்கு ராணுவமுகாமிலிருந்து சாப்பாடு செய்து அனுப்பட்டதாம். முகாமிலிருந்து விடுவிக்கப்படுபவர்களுக்காக கட்டப்படவிருக்கிற அடுக்குமாடி குடியிருப்பு களில் சிங்களவர்களும் குடியமர்த்தப்படலாம் என்கிற அச்சம் இப்போதே உலவுகிறது. ஏ-9 பாதையின் இருமருங்கும் காட்டை அழித்து உருவாக்கப்பட் டுள்ள வெற்றிடங்களில் ராணுவ முகாம்கள் அல்லது சிறப்பு பொருளாதார மண்டலங்கள் என்ற பெயரில் தமிழரல்லாதாரை குடியேற்றும் திட்டமும் அரசிடம் இருப்பதாக சந்தேகம் வலுத்துள்ளது.

குண்டுசத்தமும் ஷெல்லடியும் ஓய்ந்திருக்கும் இன்றைய நிலை அமைதிக்கு பதிலாக ஒரு உறைந்த திகிலூட்டும் மௌனத்தையே கொண்டு வந்திருக்கிறது. மக்கள் இறுகிய மௌனத்தின் வழியாக எல்லாத்துயரங்களையும் கடக்க எத்தனிக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் எஞ்சியிருக்கும் விதவைகளையும் அங்கவீனர்களையும் மனநிலைப் பிறழ்ந்தவர்களையும் பார்த்துப் பார்த்து மருகிப் போய் உறைந்து நிற்கும் அவர்கள் மனம் திறந்து பேச இன்னும் கனகாலம் செல்லும்.

இந்தப் போரை உசுப்பேற்றி கொன்றதில் நமக்கும் பங்கிருக்கிறது என்ற குற்றவுணர்வில் நாம் காத்திருக்க வேண்டியதுதான். அங்கிருந்து தமிழர்கள் வெளியிடும் சஞ்சிகைகள் எதிலும் ஈழப்போராட்டம், அல்லது ராணுவத்தின் அட்டூழியங்கள், முகாம்களில் வதைபடும் மக்களின் துயரம் என்று எதையும் பேரளவில் காணமுடியவில்லை. தணிக்கையும் சுயதணிக்கையும் அவர்களின் எழுத்துச்சுதந்திரத்தை அந்தளவுக்கு கட்டுப்படுத்தியிருக்கிறது. நாளிதழ்களில் ஓரளவுக்கு இதுகுறித்த செய்திகளைப் பார்க்க முடிந்தது.

***முகாம்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்ததா?***

யாழ்ப்பாணம் செல்வதே எனக்கு பெரும்பாடாகிவிட்டது. யாழ்ப்பாணத்திற்கு முதல்முறையாக செல்பவர் விமானத்தில்தான் சென்றாக வேண்டும். விமான டிக்கெட் பெறவேண்டுமானால் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் அனுமதிக் கடிதம் இருந்தால் மட்டுமே சாத்தியம். இந்த ஏற்பாடுகளை தோழர்கள் ரங்கனும் அந்தனிஜீவாவும் செய்துகொடுத்தபோதும், எனக்கு 19ம் தேதிதான் டிக்கெட் கிடைத்தது. 22ம் தேதி நாடு திரும்பவேண்டிய நிலையிலிருந்ததால் முகாம் எதற்கும் செல்ல முடியவில்லை. ஆனால் முகாம்களில் இருந்து சமீபத்தில் விடுவிக்கப்பட்டவர்கள் சிலரை சந்தித்து அவர்களது துயரங்களை கேட்டறிய முடிந்தது.

> **வவுனியா முகாமைப் பார்க்கப்போன நாடாளுமன்ற உறுப்பினர்களில் எத்தனைபேர் தமிழ்நாட்டிலுள்ள முகாம்களுக்கு சென்றிருப்பார்கள் என்பது தெரியவில்லை. அண்டி வந்தவர்களையே ஆதரிக்காத இந்த தமிழ்நாட்டு சமூகம் இலங்கைக்குப் போய் என்னத்த கிழிக்கப் போகிறது?**

நான் தங்கியிருந்த விடுதியின் சமையல்காரரின் குடும்பம் 1996ல் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு குடிபெயர்ந்திருக்கிறது. மீன்பிடித்தொழில் அவர்களுக்கு. போர் உக்கிரமடைந்த நிலையில் காடுகளுக்குப் போகிறார்கள் புலிகளோடு. நிலவறைகளில் பதுக்கம். ராணுவம் அழித்து நொறுக்கி வரவர இவர்கள் மூட்டைமுடிச்சுகளோடு பத்துக்கும் மேற்பட்ட இடங்களுக்கு ஓடியோடிப்போய் பதுங்க வேண்டியிருந்திருக்கிறது. நடந்துவர முடியாத நோயாளிகள் வயோதிகர்கள் அங்கவீனர்களை அப்படியப்படியே பங்கருக்குள் கைவிட்டுவிட்டு ஓடியுள்ளனர். கைவிடப்படப்பட்ட அந்த பங்கர்களுக்குள் ஒருவேளை யாராவது உயிர் பிழைத்திருந்தாலும் கூட ஒருவருக்கும் தெரியப் போவதில்லை. இனி புலிகளை நம்பி உயிரையும் போக்கிக்கொள்வதில் அர்த்தமில்லை. எனவே படகேறித் தப்பித்து நேவியிடம் சரண். பின் முகாமில் வதிந்து ஆகஸ்டில் விடுவிப்பு. இப்போது அவர்களின் பிரச்னை, வீடு. வன்னிக்குப் போன அவர்களின் ஒரு குடும்பம் இப்போது ஐந்தாக பெருகி யாழ்ப்பாணம் திரும்பி நடுத்தெருவில் நிற்கிறது. தொழிலுக்குச் செல்ல படகோ வலையோ இல்லை. பணம் நகை எதுவும் மிஞ்சவில்லை. அவற்றை விற்றுத்தான் கடைசி நாட்களில் சீவித்திருக்கிறார்கள். எல்லாமும் தோற்றாகிவிட்டது. தெரிந்த தொழிலுக்கு அவர்களால் திரும்ப முடியவில்லை. நீர்மேலிருந்தவர் நெருப்புக்குள் கரிபடுகிறார். முகாம்களிலிருந்து விடுவிக்கப்படுகிறவர்களுக்கு எந்த வாழ்வாதாரமும் இல்லை. முப்பது ரூபாய்கு ஒரு டீ விற்கிற நாட்டில், அரசு



கொடுக்கிற சிறுதொகையை வைத்துக்கொண்டு அந்த மக்கள் எப்படி மீண்டெழ முடியும்?

***இலங்கை தமிழர்களின் நிச்சயமான வாழ்வாதாரம் குறித்து பேசாத நிலை தமிழகத்தில் நிலவுகிறது. தமிழர்களின் வாழ்வாதாரம் குறித்து ஏதேனும் முன்னெடுப்புகள் இலங்கையில் (அரசு அல்லாத) புலம்பெயர்ந்த இடங்களில் நடக்கிறதா?***

அ.) ஐரோப்பா அல்லது பிறநாடுகளில் அடைக்கலம் புகுந்த இலங்கைத் தமிழர்களில் பெரும்பாலோர் ஐந்தாறு ஆண்டுகளில் அங்கு பொதுசமூகத்தோடு இணைந்து வாழவும் குடியுரிமை பெறவும் முடிகிறது. ஆனால் கால் நூற்றாண்டு காலமாய் தமிழ்நாட்டின் அகதிகள் முகாமில் வதியும் இலங்கைத் தமிழர்கள் இன்றளவும் அகதிகள்தான் என்பதை எமது புதுவிசையில் தொடர்ந்து எழுப்பிவந்தோம். வவுனியா முகாமைப் பார்க்கப்போன நாடாளுமன்ற உறுப்பினர்களில் எத்தனைபேர் தமிழ்நாட்டிலுள்ள முகாம்களுக்கு சென்றிருப்பார்கள் என்பது தெரியவில்லை. அண்டி வந்தவர்களையே ஆதரிக்காத இந்த தமிழ்நாட்டு சமூகம் இலங்கைக்குப் போய் என்னத்த கிழிக்கப்போகிறது? கழுத்துநரம்பு புடைக்க ராஜபக்சேவையும் சிங்களவர்களையும் இங்கு வசைபாடித் திரிவதால் அங்குள்ள தமிழர்களுக்கு நன்மையேதும் விளையப் போவதில்லை.

ஆ) புலம்பெயர் நாடுகளின் புலி ஆதரவாளர்களைப் பொறுத்தவரை மாற்றுக் கருத்தாளர்கள் எல்லோரையும் சிறுமைப்படுத்துவதன் மூலம் இலங்கையில் அமைக்கமுடியாத தனி ஈழத்தை இணையத்திலாவது அமைத்தே தீர்வோம் என்று மும்முரமாய் பாடுபட்டுக் கொண்டுள்ளனர். 'ஒரு இருபதாண்டுகள் கழித்து தனிஈழப் போராட்டம் பற்றி அறிந்துகொள்ளும் தரவுகளை இணையத்தில் தேடும் ஒருவருக்கு அங்கு ஏற்பட்டுள்ள இழப்புகள், தோல்விகள் எதற்கும் புலிகள் அமைப்போ தலைமையோ பொறுப்பல்ல என்ற மாயத்தோற்றத்தை உருவாக்கும் அதிரடியான அறிக்கைகளையும் இட்டுக்கட்டப்பட்ட ஆவணங்களையும் இணையத்தில் உலவவிடுவதோடு இவர்கள் பணி நிறைவு பெறுகிறது. எனவே இலங்கையில் தமிழர்கள் படும் துயரங்கள் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. ஏனெனில் அவர்கள் ஒரு பாதுகாப்பான வாழ்க்கையை எட்டிவிட்டவர்களாக இருக்கிறார்கள்.

இ.) யாழ்ப்பாணத்தில் பெரியபெரிய பதாகைகளையும் கொடிகளையும் கட்டிக்கொண்டு தொண்டு நிறுவனங்கள் என்கிற ஃபண்டு நிறுவனங்களின் குளிரூட்டப்பட்ட வாகனங்கள் பறக்கின்றன. மாளிகை போன்ற பெரிய வீடுகள்தான் அவற்றின் அலுவலகங்கள். அரசியல்ரீதியான பிரச்னைகளை இந்த

அமைப்புகள் கொடுக்கும் சோற்றுருண்டைகள் தீர்த்துவைக்க முடியாது. ஒருசில அமைப்புகளைத் தவிர மற்றவற்றுக்கு சுனாமி கொள்ளை போல இதுவும் ஈழமக்களின் பெயரால் கொள்ளையடிக்கும் வாய்ப்புதான்.

ஈ) புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் கொழும்பிலும் வாழக்கூடிய புன்னாலைக்கட்டியான் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் ஒரு குழுவை அமைத்து நிதிதிரட்டி போரினால் முற்றிலும் அழிந்துபோன தங்கள் ஊரை மீள கட்டியெழுப்புவதாக அந்த குழுவின் நிர்வாகி மருத்துவர். ஞானகுமரன் தெரிவித்தார். இம்மாதிரியான முயற்சிகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கின்றன.



உ) புலம்பெயர்ந்தவர்களில் ஒரு சிறுகுழு இப்போதைய சூழலைப் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டிய தளங்களை கண்டறிய முயற்சிக்கிறது. ராணுவரீதியில் பலவீனமாக இருந்த பல்வேறு நேரங்களில் அரசியல் தீர்வு, சமஸ்டிமுறை என்றெல்லாம் புலிகள் பேசியதைதான் இவர்களும் முன்வைக்கிறார்கள். அதற்காக துரோகிகள், அரசாங்கத்தின் கைக்கூலிகள் என்று தூற்றப்படுகிறார்கள். எனினும் அரசியல் உரிமைகளை அடையும் சக்திகள் இலங்கை தமிழ்ச்சமூகத்தின் மத்தியிலிருந்துதான் உருவாக முடியும் என்பதை உணர்ந்து அதற்கான தொடர்புகளை மேற்கொண்டுள்ள இந்த சிறுபகுதியினர் நம்பிக்கையளிக்கின்றனர்.

***விடுதலைப்புலிகள் குறித்து இலங்கையில் வாழும் தமிழர்களின் நிலை என்ன-? அடுத்தக்கட்ட போருக்கு தயாராவோம் என்று இங்கிருந்து கிளம்பும் கோஷங்களுக்கு இலங்கை வாழ் தமிழர்களின் ரியாக்ஷன் எப்படி இருக்கு...***

பிரபாகரன் மீண்டும் வருவாராமே என்று அங்குள்ளவர்களிடம் கேட்டால், வரட்டுமே.. வந்து என்ன செய்யப் போகிறார்... இத்தனை ஆயிரம் போராளிகளையும் இவ்வளவு ஆயுதங்களையும் பெருந்தொகையான பணத்தையும் வைத்துக்கொண்டே ஒன்றும் செய்ய ஏலாதவர் இனி வந்து என்ன செய்யப் போகிறார் என்று எதிர் கேள்வி கேட்கிறார்கள். ஒருவேளை



வந்தால் அவரும் ஒரு இணையதளத்தையோ பிளாக்கையோ அமைத்துக் கொண்டு அட்டைக்கத்திதான் வீசமுடியமேயன்றி ஆயுதத்தை தூக்கமுடியாது என்கிறார்கள்.

யாழ்ப்பாணம் நாவலர் அரங்கில் நடைபெற்ற சந்திப்பின்போது ஒரு அன்பர் சொன்னார்- தமிழர்கள் மானஸ்தர்கள், ஆளப்பிறந்தவர்கள், அவர்கள் தனித்துவமானவர்கள், பிற இனத்தோடு சேர்ந்து வாழ முடியாதவர்கள், தனிநாட்டுக்கு குறைவான எதிலும் அவர்கள் திருப்தி கொள்ள முடியாது என்றெல்லாம் உங்கள் தமிழ்நாட்டுத் தலைவர்கள் பேசுவது உண்மையென்றால், தனி தமிழ்நாட்டுக்காக போராட வேண்டியதுதானே? அதை விட்டுவிட்டு இவர்களது வீராப்புக்கும் வெத்துச் சவடாலுக்கும் ஏன் எங்கள் உயிரையும் வாழ்வையும் பணயம் வைக்கிறார்கள்? என்று.

வவுனியா முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு வந்து கொண்டிருக்கும் 1280 பேரை அழைத்துப்போக யாழ்ப் பாண நூலகத்தினருகில் உள்ள துரையப்பா ஸ்டேடி யத்தின் வாயிலில் காத்திருந்த ஒரு கூட்டத்திடம் உரை யாடிக் கொண்டிருந்தோம். ஒரு மீனவப்பெண் சொன்னார்- "எத்தனை இம்சை... இன்னொரு தடவை ஆயுதம் போராட்டம்னு எவனாச்சும் சொன்னா தும்புக் கட்டையாலயே (துடைப்பம்) அடிச்சு சாத்திப்புடுவேன்.

***போரை எதிர் கொண்ட எளிய மக்களின் மனநிலை இதுதான். இலங்கை தமிழர்கள் வாழ்வுரிமைக்காக நம்மைப் போன்ற வெளியில் இருக்கும் தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்? (அல்லது) இலங்கை தமிழர்கள் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார்கள்?***

வாயை மூடிக்கொண்டிருந்தால் போதும், அதுவே நீங்கள் செய்யும் பேருதவி என்பதுதான் அவர்கள் நமக்கு விடுக்கும் வேண்டுகோள். காடு அதிர்கிறது மீண்டும் எழுகிறது என்றெல்லாம் வீராவேசமாக இங்குள்ள பத்திரிகைகள் வெளியிடும் பரபரப்பு செய்திகள் கண்டு அவர்கள் பதறுகின்றனர். இப்படியான செய்திகள், தனது ராணுவ கெடுபிடிகளை நீட்டித்துக்கொள்ள அரசாங்கத்துக்கு உதவும் என்று கண்டிக்கின்றனர். ஒருவேளை அரசாங்கத்துக்கு இப்படி மறைமுகமாக உதவுவதுதான் இவர்களது உள்நோக்கமோ என்றும் சந்தேகிக்கிறார்கள். ஏற்கனவே இணையதளங்களிலும் யூடியூப்களிலும் வெளியிடப்பட்ட வீரதீர புகைப்படங்களையும் வீடியோக்காட்சிகளையும் வைத்துக்கொண்டு ஒவ்வொரு தமிழனையும் உற்றுஉற்று பார்த்து சந்தேகிக்கும் ராணுவத்தாருக்கு உதவும் பொறுப்பற்ற பேச்சுகளையும் அறிக்கைகளையும் நிறுத்தச் சொல்லுங்கள் என்ற அவர்களது வேண்டுகோள் நம் தமிழ்த்தேச தலைவர்களின் இதயங்களை தைக்கவேயில்லை.

### இந்திய அரசாங்கம் ஏன் தமிழர்களை ஆதரிக்கவில்லை?

இலங்கையின் ஓடும் வாகனங்கள் டாடாவும் லேலண்டும். இருசக்கர வாகன மென்றால் பஜாஜ், ஹீரோ ஹோண்டா, டி.வி.எஸ். தொலைத்தொடர்பில் ரிலையன்சும் ஏர்டெல்லும். நாடு முழுதும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசனின் பெட்ரோல் நிலையங்கள். அங்கிருந்த பெரிய சிமெண்ட் ஆலை இப்போது பிர்லாவிடம். நாட்டின் பொருளாதாரத்தில் பிரதான பங்கு வகிக்கும் தேயிலைத்தோட்டங்கள் இந்தியருக்கு சொந்தம். இவையன்றி இலங்கையின் அன்றாடப் பயன்பாட்டில் புழங்கும் பொருட்களில் 90 சதமானவை இந்திய தயாரிப்புகள். தமிழர்கள் என்ற சிறுபான்மையினரை ஆதரித்து இலங்கை என்கிற இவ்வளவு பெரிய சந்தையை இழக்க இந்திய முதலாளிகளும் வர்த்தக நிறுவனங்களும் தயாரில்லை. இவர்களது சந்தை நலனுக்கு பாதிப்பில்லாத ஒரு அணுகு முறையைதான் சோனியா, வாஜ்பாய், கருணாநிதி, ஜெயலலிதா என்று யார் ஆண்டாலும் கடைபிடிப்பார்கள்.



### மலையகத்தமிழர்கள் வாழ்நிலை என்னவாக உள்ளது?

இலங்கைக்குப் போய் திரும்பியிருக்கிறேன் என்றதும் எல்லோரும் யாழ்ப்பாண தமிழர்களைப் பற்றிதான் விசாரிக்கிறார்கள். ஆனால் இலங்கையில் ரயில்பாதை அமைக்கவும் பாலங்கள் கட்டவும் துறைமுகம் தோண்டவும் காப்பி தேயிலைப் போன்ற பெருந்தோட்டங்களில் வேலைசெய்யவும் 19 ம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் தமிழ்நாட்டிலிருந்து பிரிட்டிஷ்காரர்களால் பிடித்துச் செல்லப்பட்டு இன்று மலையகத்தமிழர் என்றழைக்கப்படும் நமது முன்னோர்களைப் பற்றி ஒருவரும் விசாரிப்பதேயில்லை.

அவர்களும் தமிழர்கள். அவர் களது பூர்வீகம் என்ற இந்த தமிழ் நாட்டில் அவர்களுக்காக ஒரு கைப்பிடி மண்ணும் இல்லை. இருநூறாண்டுகளாக எஸ்டேட்டு கள் என்ற திறந்தவெளி சிறைச்சாலைக்குள்ளும் அனேக இடங்களில் முள்வேலிக்குள்ளும் அடைக்கப்பட்ட வாழ்வுதான் அவர்களுடையது.





கடும் உழைப்புச் சுரண்டலுக்கு இன்ற ளவுக்கும் ஆளாகியிருப்பவர்கள். 83 வன்செயலின்போது சிங்களவர்களாலும் ராணுவத்தாலும் கடும் ஒடுக்குமுறைக்கு ஆளானவர்கள். பல்லாயிரக்கணக்கான அடி உயரத்திலுள்ள மலைகளுக்கு தாங்களே பாதையமைத்து மேலேறிப் போனவர்களில் பலர் இன்னும் சமதளத்திற்கு இறங்கவேயில்லை. உயரங்களிலும் சிகரங்களிலும் வசித்தாலும் அவர்களது வாழ்க்கை அதலபாதாளத்தில்தான். ஒருவேளை மலையகத் தமிழர்களில் 87 சதமானவர்கள் தலித்துகள் என்பதோ, டாலரும் பவுண்ட்சும் இல்லாத கூலித்தமிழர்கள் என்பதோ அல்லது பரபரப்பாக கவனிக்கப்படாது என்பதாலோ அவர்களைப் பற்றி தமிழ்த்தேசியவாதிகளோ, இனமானக் காவலர்களோ, ஊடகங்களோ பேசுவதேயில்லை. இலங்கையின் மலையகத் தமிழர் பற்றி மட்டுமல்ல, உலகம் முழுவதும் தமது காலனிகளாயிருந்த 40 நாடுகளுக்கு பிரிட்டிஷ், பிரான்ஸ் ஆட்சியாளர்கள் தமிழ்நாட்டு மக்களை பிடித்துப் போயிருக்கிறார்கள். தென்னாப்பிரிக்காவுக்கு இந்தியர் அழைத்துச் செல்லப் பட்டதன் (?) 150வது ஆண்டு விழாவை வெட்கங்கெட்டு கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலாவது 40 நாடுகளுக்கும் புலம் பெயர்த்து கொண்டுபோகப்பட்ட தமிழர் நலன் குறித்த விவாதம் தொடங்கப்பட வேண்டும். இல்லையானால் ஈழத்தமிழருக்காக வடிக்கப்படும் கண்ணீரை கபடம் நிறைந்ததென்றே வரலாறு குறித்துக் கொள்ளும்.

★★★

---

*மு.வி. நந்தினி அவர்களால் எடுக்கப்பட்ட இந்நேர்காணலின் பெரும்பகுதி சூரியகதிர் இதழில் வெளியாகியுள்ளது.*



## தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தலைவர் தோழர். எஸ்.ரி.என். நாகரத்தினம்

வடஇலங்கையில் கேடுகெட்டநிலவுடைமை முதலாளித்துவ சமூக அமைப்புக்கு மாறாக தொழிலாளிகள், விவசாயிகள், புத்திஜீவிகள், அனைத்துச் சாதிகளிலிருந்தும் வெளிவந்த முற்போக்கு சக்திகள் யாவரையும் வர்க்கரீதியாக இணைத்துக் கொண்டு "சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற பதாகையின் கீழ் தீண்டாமை ஒழிப்பு வெகுசன அமைப்பினை அணிவகுத்துச் சென்ற கர்மவீரர் எஸ்.ரி.என் அவர்கள்.

சுண்ணாகம் பகுதியில் நன்னித்தம்பி தங்கம் தம்பதிகளின் மூத்த மகனாக 1927 மாசி மாதம் 19ம் திகதி பிறந்தார். இவரின் பத்தாவது வயதினிலே இவரது தந்தையார் இறந்து போகவே இவரின் பெரிய தகப்பனார் நாகலிங்கம் அவர்களின் அரவணைப்பில் வளர்ந்து வந்தார். ஈழத்தின் தொடக்ககால சாதி ஒழிப்பு பத்திரிகையான சனதர்ம போதினி பத்திரிகை ஆசிரியரும் ஒடுக்கப்பட்டோர் ஊழியர் சங்க ஸ்தாபகரும் தீவிர சாதி ஒழிப்பு போராளியுமான யோவேல் போல் அவர்களுக்கும் எஸ்.ரி.ஏன் அவர்களின் பெரியதகப்பனார் நாகலிங்கம் அவர்களுக்கும் இடையேயானநட்பின் பேரால் எஸ்.ரி.என் யாழ். சென் பற்றிக் கல்லூரியில் விடுதியில் தங்கியிருந்து ஆங்கில மொழிவழியில் 10ம் வகுப்புவரை கல்வி கற்றார். கல்வி கற்று வரும் நாட்களில் யாழ்.நல்லூர் கந்தன் ஆலய உற்சவ நாட்களில் இவருடன் தங்கியிருந்து படிக்கும் சக சிங்கள மாணவர்கள் ஆலயத்தின் உள்ளே செல்ல அனுமதிக்கப் படுவதும் தன்னை உள்ளே செல்ல அனுமதிக்காது தடுத்து நிறுத்தப் பட்டதும் தனக்குள் சாதியத்துக்கெதிரான போராடும் உணர்வினை உண்டு பண்ணியதாக பின்னாளில் தன் பிள்ளைகளிடம் கூறி வந்துள்ளார்.

எந்த அரசியல் கட்சியிலும் அங்கம் வகிக்காத எஸ்.ரி.என் தத்து வார்த்த ரீதியிலும் கொள்கையளவிலும் ஒரு கொம்யுனிஸ்டாகவே வாழ்ந்தார். அதனால்தான் தனது பிள்ளைகளுக்கு மார்க்ஸ், லெனின், ஏங்கெல்ஸ், கஸ்ரோ என முறையே பெயர் வைத்துள்ளார். இவரது போராட்ட அனுபவங்கள் பற்றியும் வாழ்வியல் பற்றியதுமான விரிவான கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறவுள்ளது.

***

## சாதியத்துக்கு எதிரானப் போராட்டத்தில்

# கன்பொல்லை மக்கள்

### சில குறிப்புகள்....

காலனித்துவத்துக்கு உட்பட்டிருந்த காலத்தில் ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வ.நல்லதம்பி அவர்கள் வெள்ளாள சித்தமணியம் உடையாருக்கு எதிராக மணியகாரன் தேர்தலில் போட்டியிட்டார். அதனைத் தொடர்ந்து வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. எரிந்த வீடுகளை சோல்பரி பிரதிநிதி பார்வையிட்டார். தொடர்ந்து பலதடைவை நெல்லியடி பட்டினசபைத் தேர்தலில் ஆ.சிவகுரு, ஆ.சுந்தரம், கார்த்தி.கிருஷ்ணன் (லிங்கம்) போட்டியிட்டனர். இதில் ஒரே ஒரு தடவை லிங்கம் உறுப்பினராக வரும் வாய்ப்பினைப் பெற்றார். 1950களில் ஆழ்வான் மாணிக்கன் என்பவர் தனது மனைவி மாங்கம்மாவுக்கு மேல்சட்டை தைத்து போட்டுக்கொண்டு சித்தமணியம் உடையாருக்கு சொந்தமான வெல்லன் பிள்ளையார் கோவிலுக்கு அழைத்துசென்று இருக்கின்றார். சட்டை கொக்கை சத்தகம் கொண்டு கிழித்து எடுத்து எரிக்கப்படிருக்கிறது. இந்த உரிமை மறுப்புக்கு எதிராக நடந்த போராட்டத்தில் சம்பந்தப்பட்ட வெள்ளாளன் உட்காயங்கள் பட்டு ஒரு மாதத்தின் பின் இறந்திருக்கின்றான். வழக்கு பதிவு செய்யப்படாததினால் ஒருவரும் தண்டனைக்கு உள்ளாகவில்லை.

இதனைத்தொடர்ந்து இவர்களின் குலதெய்வம் வைரவருக்கு தேர் திர்த்தம் என பத்து திருவிழா வைத்து வணங்கிவருகிறார்கள். கரவெட்டியில் தண்ணீர்ப்பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருந்ததால் 10 பொதுக் கிணறுகளை தங்களுக்கென தோண்டியிருக்கிறார்கள். 1966 ம் ஆண்டு பவுத்தமதத்தில் சேர்ந்து தமக்கென ஒரு பாடசாலையை க.இராசரத்தினம் தலைமையில் உருவாக்கினார்கள். இதனால் கல்வியும் 12 சிறுபான்மைத் தமிழருக்கு ஆசிரிய நியமனமும் கிடைத்தன. இதனை பொறுக்கமுடியாது முதன்மைக் காரணமாக வைத்தே சாதிவெறியர் இவர்களைத் தாக்க, இவர்கள் வெகுசனமயப்பட்டு தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் அணியில் நின்று போராடினார்கள்.

**கைக்குண்டு தயாரிக்கும்போது வெடிவிபத்தில் உயிர்த்துறந்த தியாகிகள்**

மாணிக்கன் சீவரத்தினம், கந்தன் செல்வராசா
கிட்டினன் வேலும்மயிலும்


**போராட்டக்காலத்தில் சிறை சென்றோர்**

முத்தன் தவராசா, ஆழ்வான் சிவகுரு
கந்தன் செல்வராசா, சின்னவன் காசியன்
ராசன் மார்க்கண்டு, பசுவர் செல்வராசா
கந்தன் இராசரத்தினம், சண்முகம் வல்லி ( முறிகண்டி )
நல்லதம்பி இளையதம்பி ( கிளி )
வேலுப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை (கொழும்பான்)

# சிறை வதை

நெட்டை மரம்
முறிந்த மரம்
பசிய மரம்
அரச மரத்தின் கீழ் முண்டங்களாய்,
முழுச்சந்திரக் குளியலுக்காய் காத்திருந்த நேரம் –
காத்திரமான காத்திருப்புகள்தான்.
இன்றிரவு பௌர்ணமி !
இன்றிரவு அமாவாசை!
இன்று கிரகணம்!

– கரவைதாசன்



சாந்தன்

ISSN 1901-273X